# உதயன்

சுடர்: 29 கதிர்: 248 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 16, வெள்ளி 01.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



## நல்லூர் முருகன் கொடியேற்றம் இன்று

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

உள்ளே...




காஸா தரைமட்டம் 7





8,500 தீவிரவாதிகள் இந்தியாவில் 8





வல்லரசுகளின் நலன்களுக்காக 14





நல்லூரானுக்கு கொடியேற்றம் 15


# நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைக்க குழு

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின்பேரில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையில்

கொழும்பு, ஓக.1

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் அதிகாரங்களைக் குறைப்பதற்குரிய அரசமைப்பு மாற்றத்துக்கான நகலைத் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இந்தக் குழுவை நியமித்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தை மாற்றங்களுடன் நடைமுறைப்படுத்துவது மற்றும் தேர்தல் முறையில் மாற்றங்கள், பிரதமர் மற்றும் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பது, சுயாதீன ஆணைக் குழுக்களின் அதிகாரங்களை அதிகரிப்பது தொடர்பான விடயங்களும் இந்த நகல் ஆவணத்தில் இடம்பெறும் எனத் தெரியவருகிறது.

இதனை உறுதிசெய்துள்ள முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் என்னிடம் இந்தப் பணியை ஒப்படைத்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

நான் சுதந்திரமாக, எனது அனுபவத்தைப் பயன்படுத்தி செயற்படவுள்ளேன்.

இது குறித்து ஆராய்ந்து நகல் வடிவை தயாரித்த பின்னர், அதனை புத்திஜீவிகளிடம் சமர்ப்பித்து அவர்களது கருத்தைப் பெறவுள்ளதுடன், ஊவா தேர்தலுக்குப் பின்னர் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்க உள்ளேன். ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அளவுக்கதிகமான அதிகாரங்களைக் குறைக்கும் நடவடிக்கை இதுவாகும்.

எமது பரிந்துரைகளை அவர் நடை முறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறோம் - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-சி)



நாவற்குழியில் புகையிரதப் பாதைக்கான பாலம் அமைக்கப்படும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. 210 மீற்றர் நீளம் கொண்ட இந்தப் பாலம், 45 அடி ஆழமான எட்டுத் தூண்களில் நவீன இயந்திரங்களின் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது.

## ஒக்ரோபர் மாத இறுதிவரை வறட்சியே

கொழும்பு, ஓக.1

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் ஒக்ரோபர் மாத இறுதி வரையில் வறட்சியான காலநிலையே நீடிக்கும் என்று தெரிவித்துள்ளது வளிமண்டலவியல் திணைக்களம்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரியான, பபோதனி கருணபால, "ஒக்ரோபர் மாத இறுதி வரை, வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாணங்களிலும் மற்றும் தென் மாகாணத்தின் சில பகுதிகளிலும் மழை பெய்வதற்கு வாய்ப்பில்லை. சராசரி வெப்பநிலையை விட அதிகரிக்கும் எல்நினோ காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளன என்று இதுவரையில் யாருமகண்டறியப்படவில்லை. அவ்வாறு எல் நினோவால் பாதிப்பை சந்திக்க நேரிட்டால் நிலைமை மோசமடையும்.

வடக்கு. கிழக்கு மாகாணங்களில் ஏப்ரல் தொடக்கம் ஒக்ரோபர் வரை வறட்சி நிலவுவது வழக்கமே. விவசாயிகள் இந்த நிலைமை குறித்து நன்கு அறிவார்கள். வளிமண்டலவியல் திணைக்களம் இந்த வறட்சி குறித்து முன்னரே எச்சரித்திருந்தது"- என்று தெரிவித்திருந்தார்.

அதேவேளை, தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியால், வடக்கு,


22 ஆம் பக்கம் பார்க்க


## தமிழரசுக் கட்சியின் மூலக் கிளைகள் புனரமைப்பு

கொழும்பு, ஓக. 1

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூலக் கிளைகளை மீளவும் அமைத்து தொகுதிக் கிளைகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாடு அடுத்த மாதம் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையில் வவுனியாவில் இடம்பெறவுள்ளது. அதற்கு முன்னர் வடக்கு - கிழக்கில் கட்சிக் கிளைகளை மீள அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்காக ஒவ்வொரு கிராமங்


22 ஆம் பக்கம் பார்க்க


## யாழ். பல்கலைக் கழகத்தில் நியமனங்களில் முறைகேடு

### குற்றஞ்சாட்டுகிறது விஞ்ஞான ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வழங்கப்படும் நியமனங்களில் அரசியல் தலையீடுகளும், துஷ்பிரயோகங்களும் நடைபெறுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது தொடர்பில் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

"கல்வி சார், கல்விசாரா ஊழியர்களின் தெரிவில், யாழ். பல்


22 ஆம் பக்கம் பார்க்க


## ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் கைதானார்

### வெடிபொருள் ...த்திருந்தமைக்காக

யாழ்ப்பாணம், ஓக.1

ஈ.பி.டி.பி. கட்சியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் சுமார் 24 கிலோ ரி.என்.ரி. வெடிபொருளுடன் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த நபர் சிறுப்பிட்டி தெற்கு, புத்தூரில் உள்ள அவரது வீட்டில் வைத்தே ஆசைப்பிள்ளை சசீந்திரன் (வயது -36) என்ற குறித்த நபர் பொலிஸாரால் இரவு 8.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வெடிபொருள் உள்ளூர் தயாரிப்பு என்றும், பொலி


22 ஆம் பக்கம் பார்க்க


## காரைநகர் சிறுமி வழக்கு: சந்தேக நபர்கள் மன்றில் முற்படுத்தப்படவில்லை

யர்ழ்ப்பாணம், ஓக. 1

காரைநகரில் சிறுமிகள் கடற்படைச் சிப்பாயால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படும் வழக்கில் உரிய சந்தேக நபர்களை பொலிஸார் நீதிமன்றில் இன்னமும் முற்படுத்தவில்லை என்பதுடன் பொலிஸ் அறிக்கையும் சரியான முறையில் தாக்கல் செய்யப்படவில்லை. அதையடுத்து அதனைத் திருத்திச் சமர்ப்பிக்குமாறு சிறுவர் நீதிமன்று உத்தரவிட்டுள்ளதுடன், உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் வழக்கில் பொலிஸார் கவனக்குறைவாக நடந்து கொள்வதை அடுத்து, வழக்கின் அடுத்த தவணையில், ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் சிறுவர் நீதிமன்று பணித்துள்ளது.

யாழ்.சிறுவர் நீதிமன்றில் நீதிவான் திருமதி ஜீவராணி கறுப்பையா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது ஏற்கனவே கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட கடற்படைச் சிப்பாய் 7 பேரும் முன்னிலையாகினர். சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இந்த விசாரணை நேற்று நடைபெற்றது.

ஆனால்விடுமுறையில் இருந்த கடற்படைச் சிப்பாய் இருவரையும் பொலிஸார் நீதிமன்றில் இன்னும் முற்படுத்தவில்லை. அவர்களை நீதிமன்றில் முற்படுத்தி அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் கோரப்பட்டது. ஆனால் அவர்கள் இருவரும் விடுமுறையில் இருந்தமையால் அவர்கள் அந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டிருக்க வாய்ப்பில்லை என்று கடற்படையின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார். ஆனாலும் அவர்கள் விடுமுறை பெற்றிருந்தாலும் தொடர்ந்தும் இங்கேயே இருந்திருக்கலாம். தவிர குறித்த 7 பேரும் சிறுமியால் அடையாளம் காட்டப்படவில்லை. ஆகவே அவர்கள் இருவரை


22 ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றத் திருவிழா. இதனை முன்னிட்டு சம்பிரதாய முறைப்படி இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள கொடிச்சீலை உபயகாரரின் இல்லத்தில் இருந்து நேற்றுகாலை 7.30 மணியளவில் கொடிச்சீலை எடுத்து வரப்பட்டு சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள வேல்முருகன் கொடித்தேர் மடத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் சந்நிதியில் நடைபெற்ற விசேட பூசைவழிபாடுகளைத் தொடர்ந்து காலை 9 மணியளவில் நல்லூர் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டது. (ஐ)

# 'மாறுதடம்' திரைப்படம் வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்.திரையரங்கு ஒன்றில் திரையிடுவதற்கு பொலிஸார் தடை விதித்த 'மாறுதடம்' திரைப் படம் நாளை சனிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இரண்டு காட்சிகளாகத் திரை யிடப்படும் என்று ஏற்பாட்டா ளர்கள் அறிவித்துள்ளனர்.

புலம்பெயர் தமிழர்களால் யாழ்ப்பாணத்திலும் சுவிஸ் நாட்டிலும் தயாரிக்கப்பட்ட இந் தத் திரைப்படம் கடந்த வெள் ளிக்கிழமை திரையிடப்பட விருந்த நேரத்தில் 'திரையரங் கில் வெளியிடும் அனுமதி பெறப் படவில்லை' என்ற காரணத் தால் பொலிஸார் படத்தைத் தடை செய்தனர்.

இந்நிலையில் குறித்த திரைப் படம் நாளை சனிக்கிழமை பிற் பகல் 2.30 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் யாழ்.வீரசிங் கம் மண்டபத்தில் திரையிடப் படும் என்று படக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# பங்களாதேஷ் கடற்படை கப்பல்கள் கொழும்பில்

கொழும்பு, ஓக. 1

பங்களாதேஷ் கடற்படைக்கு சொந்தமான இரு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

ஒஸ்மான் மற்றும் மதுமதி ஆகிய இரண்டு போர்க் கப்பல்களே கொழும்புத் துறைமுகத்தில் தரித்துள்ளன.

ஒஸ்மான் என்ற கப்பலில் 250 கடற்படையினரும், மதுமதி என்ற கப்பலில் 70 கடற்படையினரும் வருகை தந்துள்ளனர் என்றும் இந்த இரண்டு கப்பல்களும் நாளை வரை கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்குமென தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-10)

# தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 1

பருத்தித்துறை பிரதேச செய லக பிரிவில் உள்ள தும்பளை கிழக்கு ஜே/405 கிராம உத்தி யோகத்தர் பிரிவில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு இடர் முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும். இது தொடர்பில் பொதுமக்கள் அமை தியாக இருக்குமாறும் இது ஓர் ஒத்திகைச் செயற்பாடு என்ப தால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின் றனர். (ஒ)

# ஆளும் கட்சிக்குள் பிளவு புதிய முன்னணி உதயம்

கொழும்பு, ஓக.1

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து பிளவடைந்த தரப்பு புதிய கட்சியொன்றை உருவாக் கியுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. "முதல் முன்னணி" என இந்தப் புதிய கட்சிக்குப் பெயரிடப்பட் டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யிலிருந்து பிளவடைந்து சென்ற தரப்பினர் கூட்டாக இணைந்து இந் தப் புதிய முன்னணியை உரு வாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

மிக முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட பல ரும் இந்தக் கட்சியை வழிநடத்தி வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து இந்தப் புதிய கட்சி உரு வாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இந்தக் கூட்டணியில் இணைந்துகொள்ள உள்ளனர் எனக் குறிப்பிடப்படு கிறது.

பாணந்துறையின் மேயர் நந்தன குணதிலக்க, நாடாளுமன்ற உறுப் பினர் அசல ஜகொட உள்ளிட்ட வர்கள் இந்தப் புதிய அரசியல் முன் னணியை தற்போது வழிநடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இவர்கள் ஜே.வி.பி. கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்கள் என் பது குறிப்பிடத்தக்கது.

கட்சிகளில் அதிருப்தியடைந்து வெளி யேற எத்தனிக்கும் தரப்பினரை புதிய கூட்டணியில் இணைத்துக் கொள்ளும் முனைப்புகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் எதிர்நோக்கி வரும் முக்கிய பிரச்சினைகள் குறித்து இந்த முன் னணி கூடுதல் கவனம் செலுத்த வுள்ளது எனத் தெரிவிக்கப்படு கிறது.

எதிர்வரும் நாள்களில் தேர்தல் ஆணையாளரிடம் கட்சி பதிவு தொடர் பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப் பட உள்ளன என்று கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப் பட வில்லை என அவர் தெரிவித் துள்ளார்.

இந்தப் புதிய அரசியல் கட்சியின் முதல் கட்ட நகர்வாக ஆளும் கட் சிக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கிளி. வலயக் கல்வி பணிப்பாளர் விபத்தில் காயம்

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப் பாளர் க.முருகவேள் (வயது- 57) விபத்தில் காயமடைந்து கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று பிற்பகல் 2.50 மணியள வில் பரந்தன் - பூநகரி வீதியில் குட முருட்டி ஆற்றுப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் வாகனச் சாரதியும் காயமடைந்தார்.

பூநகரி குமுழமுனை அ.த.க. பாட சாலையின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட பின் கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள் ளது.

வாகனத்தின் பின் சில்லொன்று காற்றுப்போன நிலையில் கட்டுப் பாட்டை இழந்து தடம்புரண்டுள் ளது. சாரதியான இராசேந்திரம் (வயது-53) என்பவரும் இதில் காயமடைந்தார். (ஐ-18-426)

# டிராக்டர் மோதி ஒருவர் சாவு

கிளிநொச்சி உதய நகர்ப் பகுதியில் இயங்குநிலையில் நிறுத்தி வைக் கப்பட்டிருந்த டிராக்டர் முன்னகர்ந் ததால் அதற்கு முன்பாக நின்ற சாரதி நசியுண்டு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. இதில் ஆனந்த புரத்தைச் சேர்ந்த மு.இராசேந்திரம் (வயது-50) என்பவரே உயிரிழந் தார்.

மர அரிவு நிலையம் ஒன்றில் இருந்து பலகைகளை ஏற்றிச் சென்ற குறித்த சாரதி அவற்றை வீடு ஒன்றில் இறக் கும் போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. (ஐ-18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: இருபத்தெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 16 வெள்ளிக்கிழமை (01.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 248

# வடக்குக்கு தனிச் சிறப்பு வழங்காமை ஆணவத்தின் ஆர்ப்பரிப்பின் செயலாகும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

**வடக்கு மாகாணத்துக்கு எந்தவிதமான தனிப்பட்ட சிறப்பையோ, தனித்தன்மையையோ வழங்க முடியாது என்று கொழும்பு மத்திய அரசு கூறியுள்ளது. முழு நாட்டின் திட்டமிடலுக்கு அமைவாக வடக்கு மாகாணமும் நடந்துகொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்கள். இதை அறிவற்ற ஆணவத்தின் ஆர்ப்பரிப்பாக வெளிவந்த கருத்தென்றே கருதுகின்றேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.**

வடக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாகாண கைத்தொழில் கண்காட்சி, யாழ். மத்திய கல்லூரியில் நேற்று ஆரம்பமாகியது. அதன் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது,

"இன்று எமது கைவினைப் பொருள்கள் கண்காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றின் தரங்களை உயர்த்த நாம் வழிவகுக்க வேண்டும். காட்சிப் படுத்துவோருக்குப் பரிசில்கள் வழங்குவது ஊக்குவிப்பை அதிகரிக்கும். அதேநேரத்தில் பார்வைக்கு அழகாகவும், கருத்துக்கு இசைவாகவும், பாவனைக்கு உகந்ததாகவும் காட்சிப் பொருட்களை ஆக்கிக் கொடுக்க எம்மவர்கள் முன்வர வேண்டும்.

**கூட்டுறவினூடாக கைத்தொழில்**

கூட்டுறவுச் சங்கங்கள்

(22ஆம் பக்கம் பார்க்க)

## அனுபவங்களைப் பகிரவே அழைத்திருந்தது இலங்கை

### சிறில் ரமபோஷ கூறுகின்றார்

கொழும்பு, ஓக 1

நல்லிணக்க ஆணைக் குழுவின் அனுபவங்கள் புறநும் அரசியலமைப்பைக் கட்டியெழுப்பும் செயல்முறைகள் குறித்து தமது நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளவே இலங்கை அரசு, தம்மை அழைத்தது என்று தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷ.

தென்னாபிரிக்க நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்த உரையில் இலங்கைக்கான தனது பயணம் வெற்றி பெற்றுள்ளது என்று அவர் தெரிவித்துள்ள போதும், இலங்கை விடயத்தில்

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் பயிற்சிக்கு எதிரான போராட்டம் சரியே

### நியாயப்படுத்துகின்றது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஓக. 1

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி நிகழ்வுக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்களை நியாயப்படுத்தியுள்ள வெளிவிவகார அமைச்சு, போராட்டம் நடத்தியவர்களின் கருத்துரிமையை எந்தவொரு தூதரகமும் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவிருந்தது. அதில் பங்கெடுக்கச் சென்ற யாழ். ஊடகவியலாளர்கள் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் கஞ்சா வைத்திருந்த பொய்க் குற்றச்சாட்டின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இருப்பினும் கொழும்பில் பயிற்சி இடம்பெறவிருந்த இதழியல் கல்லூரி முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அந்தப் போராட்டத்தின் காரணமாக குறித்த பயிற்சி செயலமர்வு இடைநிறுத்தப்பட்டது. இது தொடர்பிலும், இலங்கையின் ஊடக நிலைமையைக் கண்டித்தும் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் கண்டன அறிக்கை வெளியிட்டிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஒவ்வொரு பிரஜைக்கும் தனது கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் உண்டு. அதனடிப்படையில் போராட்டம் மேற்கொண்டவர்களை எந்தத் தூதரகமும் கேள்விக்கு உட்படுத்த முடியாது. மேலும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அவர்கள் மீதான தொந்தரவுகள் தொடர்பில் தனிப்பட ஏதாவது தெரிந்தால் அதை எமக்கு. தூதரகங்கள் தெரியப்படுத்தலாம்" - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## எல்லை தாண்டி வந்தால் இந்திய மீனவர் கைதாவர்

### கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.1

கச்சதீவில் தஞ்சமடையும் போராட்டம் நாளை நடைபெறும் என்று இராமேஸ்வர் மீனவர்கள் அறிவித்துள்ள நிலையில், இராமேஸ்வர மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்தால் கைது செய்யப்படுவர் என்று தெரிவித்துள்ளார் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ண குலசூரிய.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அவர்,

"தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக மீனவர் கைதைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களும் வேலை நிறுத்தமும் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் அந்தக் காலப்பகுதியில் போராட்டங்களுக்கு பலமாக கச்சதீவுக்கு வெள்ளைக் கொடியுடன் வந்து தஞ்சம் கோரப் போகின்றோம் அறிவித்தல் விடுத்த வண்ணமே உள்ளனர். மூன்றாவது தடவையாகத் தற்போதும் அவ்வாறு கூறியுள்ளனர்.

எனினும் அவர்களது இந்த கோரிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லை தாண்டி வருபவர்களை கைது செய்வோம். அதற்காக நாளை பாதுகாப்பு பலப்படுத்தப்படும். கடற்படையினர் அதிகரிக்கப்பட்டு கண்காணிப்பில் ஈடுபடுத்தப்படுவர்" - என்று தெரிவித்துள்ளார். (ந-14)

## இந்துவாக வாழ்வோம்: செயற்றிடம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.1

நல்லூர் முருகன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையுடன் இணைந்து நடத்தும் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

அதன்படி, நல்லூர் ஆலய பின் வீதியிலுள்ள முத்துவிநாயகர் ஆலய முன்றலில் கந்தபுராண படணம், முருகப்பெருமான் காலையில் உள்வீதி வலம் வரும்போது வடக்கு மாகாண

(22ஆம் பக்கம் பார்க்க)

# ஆளுநர் செய்தவற்றில் ஒன்றையேனும் வட மாகாண சபை செய்யவில்லையாம்

## முதல்வரின் கருத்தால் மாநகர சபைக் கூட்டத்தில் சலசலப்பு

யாழ்ப்பாணம், ஓக.1

வடக்கு மாகாண ஆளுநர் செய்தவற்றில் ஒன்றைக் கூட, வடக்கு மாகாண சபை செய்யவில்லை. கூட்டத்தில் தேவையற்ற விடயங்களைப் பேச வேண்டாம் என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா. அவரின் இந்தக் கருத்தால் முதல்வருக்கும் எதிரணி உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடந்தது. அதில் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் சோதிலிங்கம், வீதிப் புனரமைப்புகளின்போது எதிரணி உறுப்பினர்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டினார்.

அதற்குப் பதிலளித்தபோதே மாநகர சபை முதல்வர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

"கூட்டத்தில் தேவையற்ற விடயங்களை கதைக்க வேண்டாம். உங்களது தேவை தொடர்பில் பிரேரணை முன்வையுங்கள். மாநகர சபையில் நிரந்தர நியமனம் பெற்றவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு நிதி தேவை என்று வடக்கு மாகாண முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பியும் இதுவரை எமக்கு பதில் கொடுக்கவில்லை. தற்போது சபையின் நிதியில் இருந்துதான் சம்பளம் வழங்கப்படுகிறது. சம்பளம் கொடுக்க வேண்டாம் என்று ஆளுநர் கூறவில்லை. ஆளுநர் செய்த ஒரு செயற்பாட்டைக் கூட மாகாண சபை மேற்கொள்ளவில்லை. எனவே இங்கு அரசியல் பற்றி பேச வேண்டாம். எதுவாக இருந்தாலும் பிரேரணையாக முன்வைக்கவும். தமிழ் தேசியக் கூட்ட

(22ஆம் பக்கம் பார்க்க)

## கடலட்டைகள் மீட்பு

இராமநாதபுரம், ஓக.1

இலங்கைக்குக் கடத்துவதற்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 100 கிலோகிராம் கடல் அட்டைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)

# காஸாவில் முஸ்லிம்கள் கொல்லப்படுகையில் அதுகுறித்து மௌனமாக உள்ளது இலங்கை

## இது இலங்கை வாழ் முஸ்லிம்களுக்குச் செய்யும் துரோகம் என்கின்றார் மத்திய மாகாண சபையின் உறுப்பினர் அசாத் சாலி

கொழும்பு, ஓக.1

காஸாவில் அப்பாவி முஸ்லிம்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கையில் அதுகுறித்து ஒரு கண்டன அறிக்கைகூட விடாது அரசு மௌனமாக இருக்கின்றது. இது நாட்டின் முழு முஸ்லிம் சமூகத்துக்கும் செய்கின்ற துரோகச் செயலாகும். அரசின் இந்தப் போக்கு இலங்கை வாழ் முஸ்லிம் மக்களை வேதனையடையச் செய்துள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் மத்திய மாகாண சபையின் உறுப்பினர் அசாத் சாலி.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் கூறியதாவது,

'காஸாவில் ஆயிரத்துக்கும்

(22ஆம் பக்கம் பார்க்க)

## அளுத்கமவை சீர்ப்படுத்த 6 மாதங்கள் தேவைப்படும்

கொழும்பு, ஓக.1


பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் அண்மையில் நடத்தப்பட்ட வன்முறைகளில் சேதமடைந்த வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை கமலநாதன்

(ஓய்வுபெற்ற மின்மானி வாசிப்பாளர், மின்சாரசபை, வவுனியா)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட **சின்னத்துரை கமலநாதன் (ஓய்வுபெற்ற மின்மானி வாசிப்பாளர், மின்சாரபை, வவுனியா)** நேற்று (31.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், வைத்திலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகசோதியின் அன்புக் கணவரும், தினேஸ்குமரன் (ரெலிகொம், வவுனியா), கரிதாஸ் (லண்டன்), நரேன் (மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகராசா, கனகலிங்கம், செல்வராணி, ஆனந்தமலர், சாந்தமலர், சாந்தரூபி, செல்வகுமாரி, சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலேந்திரன், அரியசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மல்லாகத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஜோதி பவனம்"
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

(சி.15285) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## இன்னிசை சொற்பொழிவு

வடமராட்சி, ஓக. 1


தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக் கிழமை மு.ப. 10.30 மணிக்கு இன்னிசை சொற்பொழிவு பேரவை உப தலைவர் எஸ். அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் அன்னைதாசன், க.ஆனந்தராசா பக்க வாத்தியங்கள் சகிதம் "பேயுரு கேட்ட பேதை" என்னும் தலைப்பில் இன்னிசைச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ஓ-173)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

**மாடி வீடு வாடகைக்குண்டு**

நாவலர் வீதியில் 10 பரப்புக் காணிக்குள் மாடி வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு : 077 775 6905 (50482)(7.6.3)



**சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம்**
**முதலாம் திருவிழா – கொடியேற்றம்**

மண்ணில் வாழ்வது நாளும் நலம் மலிய நம்
எண்ணம் வண்ணம் என்றும் திண்ணமாய் திகழ
கண்ணில் கனியும் கஜமுகன் செங்கற்படையில்
வண்ணவிழா கொடியேற்றி திருவருள் தான் படைத்தான்

ஆக்கம்: சங்கை – சிவம்

உபயம் :
சு.இராமலிங்கம் குடும்பத்தினர்
தொட்டிலடி, சங்கானை மத்தி, சங்கானை

**மத்திய கல்லூரித் தாய்க்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்**

இன்று 199 ஆவது அகவையில்
காலடி பதிக்கும் எமது கல்லூரித் தாயை
வாழ்த்துகின்றோம்.

Best of Luck 199

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

யாழ் மத்திய கல்லூரி (50483)(10.6.3) பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம்.

# தரம் 5 - இலவச மாதிரி வினாத்தாள் விநியோகம்

**கௌரவ யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின்** நிதிப் பங்களிப்பில் வடமாகாண தமிழ் மாணவர்களின் நலன் கருதி உங்கள் அபிமான **புலமைச்சுடர், ஒளி அரசி மாத இதழ், யாழ். றோட்டறிக் கழகம்** ஆகியன இணைந்து முன்னெடுக்கும் இச் செயற்றிட்டத்தில் **'அரச புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளுக்கு நிகரான பக்க வடிவமைப்பில்'** (மாணவர்களுக்கு அதே அரச பரீட்சை உணர்வு ஏற்படக்கூடிய வகையில்) இலவசமாக மாதிரி வினாத்தாள்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இவ்வினாத்தாள்களைப் பெற்று பரீட்சையாக (பயிற்சிக்காக) மாணவர்களுக்கு நடத்த விரும்பும் பாடசாலைகள் (அருகில் உள்ள) கீழ் உள்ள கிளை நிறுவனங்களில் ஒன்றில் அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதத்தை சமர்ப்பித்து தங்கள் பாடசாலைக்குரிய வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**யாழ். உதயன் பிரதான அலுவலகம்**
விநியோகப் பகுதி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 021 5677222

**வவுனியா உதயன்**
கிளைப் பணிமனை,
104, பஸ் நிலையம் மேல்மாடி கட்டடம், வவுனியா.
தொடர்புகளுக்கு : 021 5672248

**சாவகச்சேரி உதயன்**
கிளைப் பணிமனை,
நவீன சந்தை மேல்மாடி கட்டடம்,
சாவகச்சேரி.
தொடர்புகளுக்கு : 021 5670266

**நெல்லியடி உதயன்**
கிளைப் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
தொடர்புகளுக்கு : 021 5673377

**கிளிநொச்சி உதயன்**
கிளைப் பணிமனை,
கரடிப்போக்குச் சந்தி, ஏ9 வீதி,
கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு : 021 2280065

குறிப்பு : மன்னார் மாவட்ட மாணவர்கள் வவுனியா அலுவலகத்திலும், முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் கிளிநொச்சி அலுவலகத்திலும் வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விநியோகத் தொடர்புகளுக்கு : 077 6569617 / 077 4228102

வினாத்தாள் தொடர்பான சந்தேகங்கள், விளக்கமின்மைகளுக்கு : 071 4449447 / 078 2825009

- வினாத்தாள் விநியோக ஏற்பாட்டுக் குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

கொக்குவில் மேற்கு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும். 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
இந்தத் தினங்களில் தினமும் மாலை 6 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா "பெரிய புராணம்" பற்றி தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார். (ஓ)

* * *

சுழிபுரம் வீரபத்திர சுவாமி உடனுறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக் கிழமை ஆரம்பாகின்றது. தொடர்ந்து பத்துத்தினங்கள் உற்வசம் இடம்பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையுடன் நிறைவுபெறவுள்ளது. (க)

* * *

சங்கானை செங்கற்படை மகா தேவப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது. தொடர்ந்து 10 தினங் கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கொடி யிறக்கத் திருவிழாவும் இடம் பெறும். (வ)

# நல்லூர் ஆலயச் சூழலில்...

யாழ்ப்பாணம், ஒக.1
நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் திருவிழாக் காலத்தில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனை, சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் ஆகியன இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் ஆரம்பமாக வுள்ளன.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் கலந்து கொள்வர்.
தவில் வித்துவான் முருகானந்தன், நாதஸ்வர வித்துவான் சிவதாஸ் ஆகியோ ரின் மாணவர்களின் மங்கல இசை இடம்பெறும். 'குழந்தையும் தெய்வமும்' என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மாவின் சிறப்புச் சொற்பொழிவும், பன்னாலை ஸ்ரீ கணேசா அறநெறிப் பாட சாலை மற்றும் மாதகல் காந்திஜி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (வ)

* * *

யாழ்ப்பாணம், ஒக.1
நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங் கலைஞர் மன்றம் தெய்வீக இசையரங்கை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்த வுள்ளது.
இன்று மாலை 6.45 மணிக்கு தெல்லிப் பழை துர்க்கா இல்ல மாணவிகளின் இறை வணக்கமும் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகனின் ஆசி உரையும் இடம்பெறும்.
தொடர்ந்து நாதஸ்வரக் கலைஞர்கள் கே.ஆர்.சுந்தரமூர்த்தி, கே. ஆர்.எஸ். தேவதாஸ் மற்றும் தவில் கலைஞர்கள் கே.ஆர். எஸ். ராமதாஸ், எஸ்.பிரசன்னா ஆகியோர் பங்குகொள்ளும் மங்கள இசை இடம்பெறும்.(வ)

# சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை

யாழ்ப்பாணம், ஒக.1
தேவாரங்களைப் பாடியவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது.
இதனையொட்டி ஆலயங்களில் விசேட வழிபாடுகள் பூசைகள், மகேஸ்வர பூசைகள் விசேடமாக இடம்பெறவுள்ளன. (ஓ-173)

* * *

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தால் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தபால் அதிபர் க.கேதீஸ்வரன் கலந்துகொள்வார்.
சுந்தரமூர்த்திநாயனார் தினத்தையொட்டி நடைபெற்ற திருமுறை மனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் அவர் வழங்கவுள்ளார். (ஓ-86)




## பகுப்பாய்வு அறிக்கையை கையளிக்கவும்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிப் பரீட்சைகளின் தொடர் I, தொடர் II ஆகிய பரீட்சைகளின் புள்ளிப் பகுப்பாய்வு அறிக்கையை இதுவரை கையளிக்காத பாடசாலைகள் இன்று வெள்ளிக் கிழமை வலய ஆரம்பப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)


மிருசுவில் படித்த மகளிர் திட்டம் 'துர்க்காபுரம்'
அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான
அலங்கார உற்சவம் - 2014

அலங்கார உற்சவம் ஜயவருஷம் ஆடி மாதம் 16ஆம் நாள்(01.08.2014) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 25ஆம் நாள்(10.08.2014) ஞாயிற்றுக்கிழமை இறுதிநாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெற வுள்ளது. தேர்த்திருவிழாவாகிய 9ஆம் நாள் ஆடி மாதம் 24ஆம் நாள் (09.08.2014) சனிக்கிழமை விசேட அபிஷேகங்கள் பூசைகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதி உலாக் காட்சியும் இடம்பெறும். அத்துடன் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் வணக்கத்திற்குரிய யாழ்ப்பாணம் சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகளும் வருகை தந்து அம்பிகையினுடைய பக்த அடியார்களுக்கு அருளாசி வழங்கவுள்ளனர். அடியார்கள் இவ்விழாக் காலத்தில் பங்குகொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான துர்க்கை அம்மனின் பாதார விந்தத்தினைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

'துர்க்காபுரம்'
படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

ஆலயதர்மகர்த்தா
சிவத்திரு சி.நவரத்தினம் ஐயா

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஒக.1
யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன் செல்வன் கண்ணதாஸ் இசைநிலவனின் மிருதங்க அரங்கேற்றம் நாளை சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெறும்.
சிரேஷ்ட விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வண. [illegible] ஜே. [illegible]ராஜா கலந்து கொள்வார். (க)



### உன்னை நம்பும் இம்மன்

*(நேரிசை வெண்பா)*

அறத்துக்கும் நல்ல அன்புக்குங் கண்ட
மறத்துக்கும் பேர்போன மண்ணே - சிறப்புடன்
இன்று கொடியேற்றும் இன்றமிழ்க் குமரோனை
நன்று நினைந்துருகிப் பாடு

கைதடியும் வேதனையை வெற்றிகொண் டிம்மண்ணில்
வைதடிமை கொள்ளாத வாழ்வுபெற - நைதடியார்
கண்ணனைய கந்தக் கடவுளே கண்காட்டு
உன்னையே நம்புதிம் மண்

*ச.லலீசன், அச்சுவேலி*

### வடிவேலன் திருக்கோயில் கொடியேறுது !


வடிவேலன் திருக்கோயில் கொடியேறுது
வரங்கேட்க அடியார்கள் புடைசூழுது
விடிவொன்று தரவேண்டும் முருகையனே
வினையோட்ட வரவேண்டும் குமரையனே
வெடியோசை விலகிற்று வேலையனே
வில்லங்கம் தொடருதே பாரையனே
அடியார் தம் இடர்நீக்க வரவேண்டுமே
அருளீந்து தமிழ்வாழ வரம் வேண்டுமே !

*நயினை. இராகுலன்*

### நலமளிக்கும் நல்லூரானே

ஆடிவரு மயிலேறு ஆணழகா -முருகா
நம் அவலங்கள் அடியொரு மண்ணிலே மறைய
கோடிமுறை யுனைப் பணிந்தோம் கோமகனே மருகா
கொண்டவள்ளி தெய்வானை யுடனுறை சமேதரா
பாடியுனைப் பரவசமானோம் பாலகா
பக்தர்களின் குறை தீர்க்கும் பாங்கான வேலவா
தேடிவந்த சித்தருக்கும் நற்கதியளித்த தேவாதி தேவனே
நாடி வந்தோருக்கு நலமளிக்கும் நல்லூரானே

*க.நாகேஸ்வரா சண்டிலிப்பாய்*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித பாடத்தில் சித்தியடையாதோரும் உயர்தரம் கற்க முடியும்

## வெளியாகியது கல்வி அமைச்சின் சுற்றறிக்கை

கொழும்பு,ஓக.1

ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் கணித பாடம் சித்தியடையாவிட்டாலும் ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்பதற்கு வசதி செய்யும் வகையிலான சுற்றறிக்கை நேற்றுமுன் தினம் வெளியிடப்பட்டுள்ளது.

உயர்தரம் கற்கும் இரண்டு வருட காலத்துள் இரண்டு தடவைகள் ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றி கணித பாடத்தில் சித்திபெற வேண்டும் என்ற அடிப்படையின் கீழ் உயர்தரம் கற்க வாய்ப்பு வழங்கப்படும்.

அத்துடன் ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாமல் போகும் மாணவர்களைத் தொடர்ந்தும் பாடசாலை கட்டமைப்புக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்குடனான கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனாவின் ஆலோசனைக்கமைய அமைச்சரவை அதற்கு அங்கீகாரம்வழங்கியிருந்தது.

இப்புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக 2013 ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்துக்கு தோற்றி உயர்தர வகுப்புகளுக்கு தெரிவு செய்யப்பட்ட கலைப் பிரிவு அல்லது உயிரியல் விஞ்ஞான தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு உட்பட்ட பாடநெறிகளை கற்க விரும்பும் மாணவர்களும் உள்வாங்கப்படுவார்கள் என்றும் கல்வி அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

26/ 2014 ஆம் இலக்க சுற்றறிக்கை நேற்றுமுன் தினம் சகல மாகாண கல்விச் செயலாளர்களுக்கும் மாகாண கல்வி பணிப்பாளர்களுக்கும் வலய கல்வி பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாத 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரு பாடசாலையில் இருப்பார்களேயாயின் அவர்களுக்கு மேலதிக வகுப்பொன்றை நடத்த வேண்டும் என்ற விடயமும் உள்வாங்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்தியடையாத நிலையில் உயர்தரம் கற்கும் காலத்திலும் கணித பாடத்தில் சித்தியடையாது போனாலும் அவர் உயர்தர பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

ஆனால் அவர் பல்கலைக்கழக அனுமதியின் போது கணித பாடம் கட்டாயமாக தேவைப்படும் பாடநெறிகளை கற்க முடியாமல் போகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ)

# ஹஜ் விசா 'பார்க்கோட்' இலக்கம் ஜித்தாவில் ரகசியமாகச் சேகரிப்பு?

ஹஜ் விசா சம்பந்தமான 'பார்க் கோட்' இலக்கங்கள் குறித்த தரவுகளை இலங்கையிலுள்ள முகவர் நிலையங்கள் சில ஜித்தாவுக்கு நேரடியாகச் சென்று மிகவும் இரகசியமான முறையில் திரட்டிவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜித்தாவிலுள்ள ஹஜ் விசா தொடர்பான திணைக்களங்களுக்குச் சென்ற இரண்டு முகவர் நிறுவனங்கள் இவ்வாறு தகவல்களைச் சேகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திடீரென ஏன் இரகசியமான முறையில் ஹஜ் 'பார்க்கோட்' இலக்கங்கள் திரட்டப்படுகின்றன என்று கேள்வி எழுந்துள்ள அதேவேளை, இதன் பின்னணியில் சூழ்ச்சியேதும் இருக்கின்றதா எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ)

# பெற்ற கடனைச் செலுத்த முடியாத இக்கட்டில் அரசு

## நாட்டின் சொத்துக்களை விற்க நேரிடலாம் என்கிறார் சம்பிக்க

கொழும்பு,ஓக.1

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பெறப்பட்ட கடனுக்காக வருடாந்தம் திருப்பி செலுத்த வேண்டிய தொகையை செலுத்த முடியாத இக்கட்டான நிலைமையை அரசு எதிர்நோக்கியுள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி வருமானம் மற்றும் அரச வருமானத்தை அதிகரிக்காது போனால், தேசிய மற்றும் சர்வதேச கடன்களைச் செலுத்த நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை கடன் சுமையைக் குறைத்து கவர்ச்சிகரமான வளர்ச்சியை பெற்றுள்ளதாக கூறப்பட்டாலும் அரசின் முழு வருமானம் வருடாந்த கடனை செலுத்துவதற்குப் போதுமானதல்ல எனவும் சம்பிக்கரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

கடனைத் திருப்பிச் செலுத்துவதில் பிரச்சினைகளை எதிர்நோக்கிய உக்ரைன் , இத்தாலி போன்ற நாடுகள் கடனைத் திருப்பி செலுத்துவதற்காக பெறுமதியான நிலங்கள், துறைமுகம், ரயில் சேவை, மின்சார உற்பத்தி நிலையங்களை வெளிநாட்டவர்களுக்கு வழங்க வேண்டிய நிலைமையை எதிர்நோக்கின.

இதனால், கடன் செலுத்துவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, நாட்டின் தேசிய வருமானம் மற்றும் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காது போனால் இலங்கைக்கும் அந்த நிலைமை ஏற்படும் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (ஒ)

**தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம்**

**பொதுக்கூட்டம் - 03.08.2014**

சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 03.08.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.

ஆர்வலர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.


பேராசிரியர் - க.கந்தசாமி தலைவர். (சி15281) (12.3.6) யோ.ஜெயக்குமார் செயலாளர்.

**CEYLON THEATRES**

**இப்பொழுது திரையில்**

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**

(Opposite Jaffna Teaching Hospital)




**Platinum 3D** 10.30am, 2.30pm, 6.30pm




**Silver** 10.15am, 2.15pm, 6.15pm




**Bronze** 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**ஜேர்மன் மொழி வகுப்பு**

ஜேர்மன், சுவிஸ் செல்வோருக்கான டொச் A1 Full Course மிகமிகக் குறைந்த கட்டணத்தில் மொழி வகுப்பு நடைபெறுகின்றது. மானிப்பாய் இன்ரனஷனல் பாடசாலை ஆசிரியர் கற்பிக்கின்றார்.

இடம்: மானிப்பாய் International School அருகில்

077 270 7121

**வேலை ஆள் தேவை**

Vedio Editing தெரிந்த உதவியாளர்கள் தேவை.

(50477) (12.3.6) தொடர்பு: 077 073 3477

**வீடு விற்பனைக்கு**

தொண்டமானாற்றுச் சந்தியில் இருந்து உடுப்பிட்டி வீதியில் கதிர்காம வைத்தியநிலையம் இயங்கும் ஒரு பரப்பில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. (சி/15260) (4.6.3)

தொடர்பு: 077 240 8462

**விற்பனைக்கு**

லேலன் 4 சிலின்டர் இஞ்சின் ரகம் (ரேபோ) உற்பத்தி 2012 வருடம் தனிக்கதவு, ஆசனம் 31, 55000Km மட்டும். நல்ல நிலையில் உள்ள பஸ் விற்பனைக்குண்டு. (50475) (12.3.6)

தொடர்புகளுக்கு: 077 077 5656/ 071 131 3420/021 205 3935

**1959 ஆம் ஆண்டு முதல் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்கிய ஒரே நிறுவனத்தின்**

**மாபெரும் மலிவு விற்பனை**

- பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையான நூல்கள்
- ஆங்கில தமிழ் அகராதி வகைகள்
- மருத்துவத்துறை மாணவர்களுக்கான நூல்கள்
- இல்லத்தலைவிகளுக்கான கதைப் புத்தகங்கள்
- சிறுவர்களைத் திகைப்பூட்ட வைக்கும் சிறுவர் கதை நூல்கள்
- வரலாறு, பாரம்பரியங்களை உணர்த்தும் பற்பல அரிய வரலாற்று நூல்கள்
- ஆய்வுகூட உபகரணங்கள்
- O.H.P.Screen, White Board,Green Board, Magnet Board வகைகள்

உட்பட அனைத்து வகையான கல்வித்துறை சார்ந்த புத்தகங்கள், ஸ்ரேசனரிப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் கழிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Note:20, 000 வகைகளுக்கும் மேற்பட்ட நீரால் சேதமடைந்த நூல்கள் ஐம்பது வீதத்திற்கும் மேற்பட்ட கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/15280)(4.3.6)

**வெளிவந்து விட்டது**

**அரச உத்தியோகத்தர்களுக்கான சகல திணைக்கள பரீட்சைகளுக்குரிய பரீட்சை வழிகாட்டி**

மிக அண்மையில் நடைபெறவுள்ள இலங்கை நிர்வாக சேவை, அரச முகாமைத்துவ சேவை (அதி சிறப்பு), ஏனைய சகல திணைக்கள தடைகாண், பதவியுயர்வு, போட்டிப் பரீட்சைகளுக்குரிய தாபனம் சார்ந்த முழுமையான விடயங்களையும் அலுவலக நடைமுறை, முறைமை முகாமை, அரசியல், பொது விடயங்களையும் உள்ளடக்கிய வழிகாட்டி ஆ.சத்தியமூர்த்தி நிர்வாக உத்தியோகத்தர் (அதிசிறப்பு) அவர்களால் தொகுக்கப்பட்ட கைந்நூல் பாகம் I,II (volume-I-400/=, II-550/=) விற்பனையாகிறது.

கிடைக்கும் இடம்: யாழ்ப்பாணப் பட்டப்படிப்புக்கள் கல்லூரி (யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வர்த்தக வங்கிக்கு அருகில்)

தொடர்பு: 021 222 3382, 077 167 6457

குறிப்பு: 50 இற்கு மேற்பட்ட புத்தகங்களை மொத்தமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

தொடர்பு:077 167 6457 (50478)(4.6.3)

**மலேசியாவில் Work Permit உடன் வசிக்க/ தொழில்புரிய அரிய வாய்ப்பு**

மூன்று வருட Work Permit அடிப்படை சம்பளம் 40 000/=, வயது 19-35 வரை. 8 மணித்தியால வேலை, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவம் இலவசம் 02.08.2014 சனிக்கிழமை Tilko Jaffna City Hotel 70/6,K.K.S. Road Jaffna வில் மலேசிய முகவர்களால் நேர்முகத்தேர்வு இடம்பெறும். இலங்கை அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டது. இரண்டே வாரத்தில் பயணம். இன்றே பதிவு செய்யுங்கள்.

தொடர்பு: 077 395 7291 (48955)(4.6.3)

**Peninsula Trading Company (Private) Limited**

**பெனின்சுலா ரேடிங் கம்பனி (பிறைவேற்) லிமிட்டற்**

**வடமாகாண M Lotto முகவர்**

- M4D - 0 தொடக்கம் 9 வரை 4 இலக்கங்களைத் தெரிவு செய்து 20/= பெறுமதியான ரிக்கற்றுகளை வாங்கி 10000 ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.
- M Lotto - 1 தொடக்கம் 68 வரை 4 இலக்கங்களைத் தெரிவு செய்து 20/= பெறுமதியான ரிக்கற்றுகளை வாங்கி 4 மில்லியன் ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.
- M Lotto Plus - 1 தொடக்கம் 68 வரை 5 இலக்கங்களைத் தெரிவு செய்து 50/= பெறுமதியான ரிக்கற்றுகளை வாங்கி 5 கோடி ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.
- M Super Lotto - 1 தொடக்கம் 50 வரை 6 இலக்கங்களைத் தெரிவு செய்து 150/= பெறுமதியான ரிக்கற்றுகளை வாங்கி 15 கோடி ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு உள்ளடங்கலாக வடமாகாணத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் எமது Lotto விற்பனை முகவர்கள் தேவை. விரும்புவோர் எமது யாழ். முகவரை கீழ் உள்ள விலாசத்துக்கு தொடர்புகொள்ளவும்.

இல. 120, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (50479) (10.6.3)

T.P: 021 222 5333, 021 222 7733, 021 222 7333, 076 622 8333

**நல்லூர் பிரதேச சபை**

**வீதி மின் விளக்கிற்கான கூறுவிலை கோரல்**

சபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு மின் விளக்குப் பொருத்துவதற்காக பின்வரும் மின் உபகரணங்களுக்கான கூறுவிலை கோரப்பட்டுள்ளது. கூறுவிலையினை தங்களின் கடிதத் தலைப்பில் குறிப்பிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வீதி மின்விளக்கு பொருள்களிற்கான கூறுவிலை எனக் குறிப்பிட்டு, எதிர்வரும் 11.08.2014 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பதாக "தலைவர் நல்லூர் பிரதேசசபை கருவப்புலம் வீதி, கொக்குவில்" எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| |
|---|
| ENERGY SAVE BULB-23W-PHLIPS |
| MAX LIGHT |
| ORANGE LIGHT |
| STREET LIGHT COVER SET-LUXRAM |
| PILUX-D |
| DLS |
| WIRE ROLL-1/004 ACL/KELANI |
| FITTING CLAMP |
| INSNLATED TAP ROLL |
| ADOPTER |

நல்லூர் பிரதேச சபை (சி/15274) (4.6.3) ப.வசந்தகுமார்

30.07.2014 தவிசாளர், நல்லூர் பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காஸாவில் இஸ்ரேலியப் படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களைக் கண்டித்து அமெரிக்காவில் அமைந்துள்ள இஸ்ரேலியத் தூதரகத்துக்கு முன்னால் மனித உரிமை அமைப்புக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டன. (த)

# தரைமட்டமாகிறது காஸா

## இஸ்ரேல் தொடர்ந்து குண்டு மழை

## இதுவரை 1,283 பலஸ்தீனர்கள் சாவு

காஸா, ஓக. 1
காஸா பகுதி மீது இஸ்ரேல்தொடர்ந்து குண்டுமழை பொழிந்து வருவதால், காஸா நகரம் தரைமட்டமாகி வருகிறது. கடந்த 23 நாள்களாக நடந்து வரும் இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பினர் மோதலில் இதுவரை 1,283 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் பொதுமக்கள்.

வடக்கு காஸாவிலுள்ள ஐ.நா. பாடசாலை மீது இஸ்ரேலிய இராணுவம் கடந்த புதன்கிழமை நடத்திய தாக்குதலில் 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். போர் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள் ஐ.நா. பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளனர். ஜபாலியாவில் உள்ள பலஸ்தீன அகதிகள் முகாமிலும் பெண்கள் பாடசாலையிலும் இஸ்ரேல் வீசிய குண்டுகள் விழுந்தன. தொடர்ந்து அந்தப்பகுதி மீது இராணுவ டாங்கிகள் குண்டு மழை பொழிந் தன.

பலஸ்தீன பிரதிநிதிகள், எகிப்துக்கு சென்று தற்காலிக போர்நிறுத்தம் குறித்து ஆலோசிக்க ஆயத்தமாகி வந்த நிலையில் இந்தத் தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேல்-ஹமாஸ் தற்காலிக போர்நிறுத்தப் பேச்சுக்கு ஏற்பாடு செய்யும் சர்வதேச நாடுகளின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.



கடந்த 3 வாரங்களாக நடந்து வரும் சண்டையில் உயிரிழந்த இஸ்ரேல் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 3 இஸ்ரேல் குடிமக்களும் இறந்துள்ளனர்.

ஹமாஸ் இயக்கத்தினரின் சுரங்கப் பாதைகளை அழிக்கும் வரை இராணுவம் தன் தாக்குதலை நிறுத்தாது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதான் யாஹு" தெரிவித்தார். ரம்ழான் பண்டிகையாக இருந்த போதும், இஸ்ரேல் தொடர்ந்து செவ்வாய்க்கிழமையும் தாக்குதலை மேற்கொண்டதால் காஸாவில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

### முப்படை

வான்வழி, தரை வழி, கடல் வழி என அனைத்து வழியிலும் இஸ்ரேல் இராணுவம் கடந்த 8ஆம் திகதி முதல் மேற்கொண்டுள்ள தாக்குதலில் இதுவரை 1,283 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். 7,000க்கும் அதிகமானவர்கள் காயமடைந் துள்ளனர். இந்தப் போர் காரணமாக, 2 லட்சத்து 15 ஆயிரம் காஸா மக்கள் வீடுகளை விட்டு வெளி யேறியுள்ளனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

### ஒரு மணி நேரத்தில் தரைமட்டம்

இஸ்ரேல் இராணுவம் காஸா மீது சரமாரியாகக் குண்டுகளை வீசி வருவதால், காஸாவிலுள்ள கட்டடங்கள் முழுமையாக அழிக்கப்பட்டு வருகின்றன. ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேலுக்குள் நுழைவதற்காகத் தோண்டியுள்ள சுரங்கப் பாதைகளை அழிப்பதற்காகவே ரொக்கெட் வீசித் தாக்குவதாக இஸ்ரேல் இராணுவம் காரணம் கூறுகிறது.

வடக்கு காஸா பகுதி மீது இஸ்ரேல் இராணுவம் ஒரு மணி நேரம் மிகத்தீவிரமான தாக்குதலைத் தொடுத்தது. மாலை 4 மணிக்குத் தொடங்கிய இந்தத் தாக்குதல் 5 மணி வரை நீடித்தது. அந்த ஒரு மணி நேரத்தில் கட்டடங்கள் நிறைந்திருந்த அந்தப்பகுதி முழுமையாகத் தரைமட்டமாகி விட்டது. (த)

## 7 தலிபான்கள் சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத், ஓக. 1
ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தான் எல்லைப் பகுதிக்குள் புகுந்து அங்கிருந்த பாது காப்புப் படையினர் மீது தலிபான் தீவிரவாதிகள் கடந்த மிகப் பெரிய தாக்குதலில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனர்.

அப்போது பாதுகாப்புப் படையினர் நடத்திய பதிலடி தாக்குதலில் 7 தலிபான் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 9 பேர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ள வஜிரிஸ்தானில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பாகிஸ்தானில் உள்ள திரிபமன்- இங்கல்சார் இடையே உள்ள சோதனைச் சாவடிகளை சுமார் 80 தலிபான் தீவிரவாதிகள் தாக்கினர். பதிலுக்கு பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 9 பேர் பலத்த காயமடைந்தனர்.

இந்தநிலையில், எல்லை கடந்து வந்து தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஆப்கானிஸ்தான் அரசை, பாகிஸ்தான் வெளியுறவுத்துறை வலியுறுத்தியுள்ளது. (த)

## லிபியாவில் ராணுவத் தளத்தை கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள்

திரிபோலி, ஓக. 1
லிபியாவின் இரண்டாவது பெரிய நகரான பெங்காஸியில் உள்ள முக்கிய இராணுவத் தளத்தைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாக அந் நாட்டின் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், பெங்காஸியில் இராணுவத் தளத்தைக் கைப்பற்றியவர்கள், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளால் ஒரு பயங்கரவாத அமைப்பாகக் கருதித் தடை விதிக்கப்பட்டுள்ள அன்சார் அல்-ஷாரியா என்ற அமைப்பைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் ஆவர்.

அவர்களது கடும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாததால் அரசுப் படையினருக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து இராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவுத் தலைவர் வனீஸ் அபு காடா தலைமையிலான வீரர்கள் பல பகுதிகளில் இருந்து பின்வாங்கி விட்டனர்" - என்றார். (த)

# 2040 இல் உலகம் முழுவதும் குடிதண்ணீர் பற்றாக்குறை

வாஷிங்டன்,ஓக. 1
இப்போது உள்ள எரிசக்தி மற்றும் மின்சார உற்பத்தி முறையை மாற்றி அமைக்காவிட்டால் 2040 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் என ஓர் ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

டென்மார்க் நாட்டின் ஆர்ஹஸ் பல்கலைக்கழகம், அமெரிக்காவின் வெர்மன்ட் சட்ட பாடசாலை மற்றும் சி.என்.ஏ. (கடற்படைப் பகுப்பாய்வு மையம்) ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் ஓர் ஆய்வை மேற்கொண்டனர்.

இவர்கள் பிரான்ஸ், அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் 4 வெவ்வேறு வகையான பகுப்பாய்வுகளை மேற்கொண்டனர். இந்த ஆய்வின் முடிவு அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

இது குறித்து ஆர்ஹஸ் பல்கலைக்கழக பேராசிரியர் பெஞ்சமின் சொவகூல் கூறியதாவது:-

குடிதண்ணீர் மற்றும் எரிசக்தி தேவை என்பவற்றுக்கு இடையே கடுமையான போட்டி நிலவுகிறது. பெரும்பாலான நாடுகளில் மின் உற்பத்திக்கு மிக முக் கிய மூலப்பொருளாக தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. மின் உற்பத்தி நிலையங்கள் [illegible] இதற்கு முக்கிய காரணம். எவ்வளவு தண்ணீரைப் பயன்படுத்துகிறோம் என்பதைக் கூட மின் உற்பத்தித் துறையைச் சேர்ந்தவர்கள் அறிந்திருக்கவில்லை. பருவநிலை மாற்றம் காரணமாக தண்ணீர் வளம் குறைந்து வரும் நிலையில் மின் உற்பத்தித் துறையினர் பெரும் பகுதி தண்ணீரை எடுத்துக்கொண்டால், 2020 ஆம் ஆண்டளவில் உலகில் [illegible] 30 முதல் 40 [illegible] நாடுகளில் சுத்தமான குடிதண்ணீர் கிடைக்காது. இந்த நிலை நீடித்தால் வரும் 2040 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்.

எனவே, எதிர்காலத்தில் தண்ணீரை எதற்கு பயன்படுத்த வேண்டும் என்பதை உடனடியாக ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும். குறிப்பாக, மின் உற்பத்தி நிலையங்களுக்கு தொடர்ந்து பயன்படுத்துவதா, அல்லது குடிதண்ணீர் தேவைக்கு முக்கியத்துவம் கொடுப்பதா என்பதை தீர்மானிக்கவேண் டும். இரண்டுக்கும் தேவையான தண்ணீர் வளம் நம்மிடம் இல்லை.

இதற்குத் தீர்வாக மின் உற்பத்திக்கான பழைய முறையை மாற்றியமைக்க வேண்டும். குறிப்பாக, கூலிங் முறை தேவைப்படாத மின் உற்பத்தி முறைகளான காற்றும் மற்றும் சூரிய மின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பா.ஜ.க, இந்து முன்னணி பிரமுகர்களுக்கு மிரட்டல்

புதுடில்லி, ஓக. 1
பா.ஜ.க மற்றும் இந்து இயக்கத்தைச் சேர்ந்தவர்களை கொலை செய்யப் போவதாகச் சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள இந்து முன்னணி அலுவலகத்துக்கு மிரட்டல் கடிதம் வந்துள்ளது.

வேலூரில் வெள்ளையப்பன், சேலத்தில் ரமேஷ் உட்பட பா.ஜ.க மற்றும் இந்து முன்னணியைச் சேர்ந்த நிர்வாகிகள் 6 பேர் தொடர்ச்சியாக கொலை செய்யப்பட்டனர்.

சென்னை அம்பத்தூரில் இந்து முன்னணி திருவள்ளூர் மாவட்டத் தலைவர் சுரேஷ்குமார் அண்மையில் கொலை செய்யப்பட்டார். அதற்கு சில நாள்களுக்கு முன்பு, சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள இந்து முன்னணி அலுவலகத்துக்கு ஒரு மிரட்டல் கடிதம் வந்தது. அதில் 9 பேரை கொலை செய்யப்போவதாக கூறப்பட்டிருந்தது. அதன் படியே சுரேஷ்குமார் கொலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில், சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள இந்து முன்னணி அலுவலகத்துக்கு கடந்த திங்கட்கிழமை மதியம் மீண்டும் ஒரு கடிதம் வந்தது. அதைப் படித்துப் பார்த்த இந்து முன்னணி நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்து இயக்கம் மற்றும் தமிழக பாரதிய ஜனதா தலைவர்களைக் கொலை செய்யப்போவதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது குறித்து சிந்தாதிரிப்பேட்டை பொலிஸ் நிலையத்தில் இந்து முன்னணி நிர்வாகிகள் செவ்வாய்க்கிழமை புகார் கொடுத்தனர்.

பா.ஜ.க. இந்து முன்னணியைச் சேர்ந்த சிலரது பெயர்களை ஒற்றை எழுத்தில் குறிப்பிட்டு, இவர்கள் அனைவரும் துன்பத்துக்கு ஆளாவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மா மலை சகோதரர்கள், மத்வா குழு, பாலக்காடு, கேரளா என்ற முகவரியுடன் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

மிரட்டல் கடிதத்தைத் தொடர்ந்து, இந்து முன்னணி அலுவலகத்துக்கும் கடிதத்தில் ஒற்றை எழுத்தில் மறைமுகமாகக் கூறப்பட்டிருக்கும் நபர்களுக்கும் பொலிஸார் பாதுகாப்பு கொடுத்துள்ளனர். (த)

# மாவோ தீவிரவாதிகள் 8500 பேர் இந்தியாவில்

## உள்துறை இணை அமைச்சர் அதிர்ச்சித் தகவல்

புதுடில்லி, ஓக. 1
இந்தியாவில் மொத்தம் 8500 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் உள்ளதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரன் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

மாவோயிஸ்டுகள் குறித்து மாநிலங்கள் அவையில் எழுத்து மூலம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:-


கிரன் ரிஜிஜு

கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில் இடதுசாரி தீவிரவாதிகளின் எண்ணிக்கை 8500. அதே சமயம் இவர்களின் அனுதாபிகள் எண்ணிக்கை இதைவிடப் பல மடங்கு அதிகம்.


இவர்களிடம் நக்சலைட்டுகள் வைத்திருக்கும் எல்.எம்.ஜி, ஏ.கே.-47 உள்ளிட்ட நவீன ஆயுதங்கள் உள்ளன.

சமீபத்தில் பாதுகாப்புப் படையினரைக் கொன்று வரும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆண்டுதோறும் அதிகளவில் இளைஞர்களையும் தங்களது அமைப்பில் சேர்த்துக் கொள்கின்றனர் என்றும் குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களில் மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் அதிகமாக உள்ளது எனவும் அவர் பதிலளித்துள்ளார். (த)

## சோனியா பிரதமராகாமல் ராகுல் காந்தியே தடுத்தார்

### முன்னாள் அமைச்சர் நட்வர் சிங் பரபரப்புத் தகவல்

புதுடில்லி, ஓக. 1
2004ஆம் ஆண்டில் சோனியா காந்தியைப் பிரதமராக விடாமல் தடுத்தது ராகுல் காந்திதான். சோனியா காந்தி சொந்த விருப்பத்தின் பேரில் பிரதமர் பதவியை துறக்கவில்லை என்று முன்னாள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் கூறியுள்ளார்.


நட்வர் சிங்

இந்திரா காந்தியின் குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்த நட்வர் சிங், 2008ஆம் ஆண்டு காங்கிரஸில் இருந்து விலகினார் என்பது நினைவுகூரத்தக்கது. 2004ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைக்க முற்பட்டபோது சோனியா காந்தி பிரதமர் பதவியை ஏற்க வாய்ப்புக் கிடைத்தது. இத்தாலியைச் சேர்ந்த சோனியா இந்திய பிரதமராகக் கூடாது என்று பா.ஜ.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அப்போது கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. இதையடுத்துதான் பிரதமர் பதவியை ஏற்கப் போவதில்லை என்று சோனியா அறிவித்தார்.

இந்நிலையில் தனியார் தொலைக்காட்சிக்குக் கடந்த புதன்கிழமை நட்வர் சிங் பேட்டியளித்தார்.

அதில் அவர் கூறியது:-

சோனியா காந்தி உண்மையிலேயே தனது மனச்சாட்சி கூறியதன் காரணமாக பிரதமர் பதவியை மறுக்கவில்லை. அவர் இந்தியப் பிரதமராகத் தயாராகவே இருந்தார்.

எனினும் அப்போது சோனியா பிரதமராவதை ராகுல் காந்தி விரும்பவில்லை. தனது பாட்டி இந்திரா காந்தி, தந்தை ராஜீவ் காந்தி ஆகியோருக்கு ஏற்பட்டது போன்ற துயரமான முடிவு தனது தாயார் சோனியாவுக்கும் ஏற்பட்டு விடும் என்ற அச்சம்தான் ராகுலின் எதிர்ப்புக்கு காரணம். இதனை அவர் வெளிப்படையாகவே தெரிவித்தார். 'ஒரு மகனாக சோனியா பிரதமராவதை நான் விரும்பவில்லை என்றும் ராகுல் கூறினார்.

இதனால்தான் சோனியா பிரதமர் பதவியை ஏற்கவில்லை என்று நட்வர் சிங் கூறினார். (த)


இந்தியாவுக்கான உத்தியோகபூர்வப் பயணம் ஒன்றை மேற்கொண்ட அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி தலைமையிலான உயர் மட்டக் குழு நேற்று புதுடில்லி வந்தடைந்தது. அவர்களை அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் விக்ரம்குமார் துரைசுவாமி விமான நிலையத்தில் வரவேற்றார். (த)

# மோடிக்குச் சிவப்புக் கம்பளம்; மரபை மீறும் நேபாள பிரதமர்

காத்மண்டு, ஓக. 1
நேபாளத்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடியை நேபாளப் பிரதமர் ஆரவாரத்துடன் வரவேற்கவுள்ளார்.

நேபாள நாட்டில் எந்த ஒரு பிரபலத்துக்கும் உயர்ந்த பதவியிலிருக்கும் முக்கிய புள்ளிகள் சென்று வரவேற்புக் கொடுப்பதில்லை. ஏனெனில் அவ்வாறு செய்வது அவர்களது மரபு அல்ல.

ஆனால் நாளை மறுதினம் நேபாளம் செல்லும் மோடியை நேபாள நாட்டின் பிரதமர்; சுஷில் கொய்ராலா தலைநகர் காத்மாண்டுவில் உள்ள சர்வதேச விமான நிலையத்திற்கே சென்று வரவேற்கவுள்ளார்.

இந்நிலையில் இவரது இந்தச் செயல் அந்நாட்டின் மரபுக்கு மாறாக அமைவதாகக் கூறப்படுகிறது.

மேலும் இந்தியப் பிரதமர் ஒருவர், நேபாள நாட்டுக்கு அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொள்வது, கடந்த 17 ஆண்டுகளில் இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (த)


சுஷில் கொய்ராலா - நரேந்திரமோடி

## பாலியல் பலாத்காரங்களை எதிர்த்து பெங்களூரில் நேற்று கடையடைப்பு

பெங்களூர், ஓக. 1
பெங்களூரில பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் பலாத்காரங்கள் அதிகரித்து வருவதைக் கண்டித்து, கன்னட அமைப்புகள் நேற்று ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், வணிகர்கள் சிலர் தாமாகவே முன்வந்து கடைகளை மூடினர். இருப்பினும் பஸ்கள், ஆட்டோக்கள் வழக்கம்போல் இயங்கின.

ஒரு சில திரையரங்குகளில் காலைக்காட்சி இரத்துச்செய்யப்பட்டது. எப்போதும் பரபரப்பாக இயங்கும் கெம்பே கவுடா பஸ் நிலையம் சற்று வெறிச்சோடிக் காணப்பட்டது.

கன்னட அமைப்பினர் சிலர் மோட்டார் சைக்கிள்களில் பேரணி மேற்கொண்டு கடையடைப்புக்கு ஆதரவு அளிக்குமாறு பொதுமக்களிடம் கோரினர். அவர்களது வலியுறுத்தலின் பேரில் திறந்திருந்த ஒரு சில கடைகளும் மூடப்பட்டன.

கடையடைப்பை ஒட்டி நகர் முழுவதும் பொலிஸார் பாதுகாப்பு மற்றும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பெங்களூரில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தனியார் பள்ளியில் 6 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் அங்கு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சிங்கள மக்கள் வாழ முடியாது என எப்படி கூறமுடியும்

## போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் அவர்கள் அங்கு அபிவிருத்திகள் செய்வதும் அவர்களே என்கிறார் சம்பிக்க

கொழும்பு, ஓக. 1

வடக்கில் சிங்கள மக்கள் வாழ முடியாதென எப்படிச் சொல்ல முடியும் ? போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் சிங்களவர்கள். வடக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்வதும் சிங்கள மக்களே.



சம்பிக்க ரணவக்க

அவ்வாறு இருக்கையில் சிங்களவர்கள் வடக்கில் வாழ முடியாது என்று குறிப்பிடுவது எந்த விதத்திலும் நியாயமற்றதாகும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவ முகாம் அமைப்பதற்கு என்று தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. அவை உண்மையில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்காகவே சுவீகரிக்கப்படுகின்றது என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே, அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு தமிழ் மக்களின் பகுதி, தெற்கு சிங்கள மக்களின் பகுதியென எல்லைகள் பிரிக்கப்படவில்லை. வடக்கில் வாழ்கின்ற சிங்கள மக்களை விடவும் அதிகமான தமிழர்கள் தெற்கில் வாழ்கின்றனர். வடக்கில் எவ்வாறு சிங்கள மக்கள் வாழ முடியாதெனக் கூறமுடியும்? போரை நிறைவுக்கு கொண்டு வந்தது சிங்களவர்கள். வடக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்வதும் சிங்கள மக்களே.

அவ்வாறு இருக்கையில் சிங்களவர்கள் வாழ முடியாது என குறிப்பிடுவது எந்த விதத்திலும் நியாயமற்றதாகும்.

வடக்கில் சிங்களக் குடியேற்றம் இடம்பெறவில்லை. வடக்கில் சிங்கள மக்கள் வாழ்ந்த நிலங்கள் மற்றும் அவர்களின் உரிமைகளையே மீண்டும் பெற்றுக் கொடுக்கின்றனர்.

போர்க் காலகட்டத்தில் பல்லாயிரக் கணக்கான சிங்கள மக்களை விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர். அவர்களின் நிலங்களை யார் மீண்டும் பெற்றுக் கொடுப்பது?

இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் தனி ஆட்சியை நடத்த முயற்சிக்கின்றது. தனி ஈழத்தை உருவாக்கி மீண்டுமொரு பிரிவினைக் கோட்பாட்டை உருவாக்குகின்றனர். எனவே, அதற்கு இடமளிக்கக் கூடாது.

வடக்கில் உள்ள சிங்களவர்களை வெளியேற்ற வேண்டும் என்றால் தெற்கில் வாழும் தமிழர்களை என்ன செய்வது? அவர்களையும் வெளியேற்றவா கூட்டமைப்பு சொல்கின்றது?

இன்று நாட்டில் பிரிவினை வாதத்தைத் தூண்டுவதும் மக்கள் மத்தியில் பிரிவினை வாதத்தைப் பரப்புவதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே யாவர். அவர்களை கட்டுப்படுத்தினால் நாட்டில் பிரிவினை வாதம் தடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-5)

## வீடு திரும்பினார் அநுர எம்.பி.

### அவரது சாரதிக்கு நீதிமன்றில் பிணை விடுதலை



அநுரகுமார

கொழும்பு, ஓக. 1

வாகன விபத்தொன்றில் காயமடைந்து கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்றுமுன்தினம் வீடு திரும்பினார்.

விபத்தின் காரணமாக மார்புப் பகுதி வீங்கிய நிலையில் சேர்க்கப் பட்டிருந்த அநுரகுமார பூரணமாக சுகமடைந்து வீடு திரும்பியதாக கொழும்புத் தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை பதுளையில்நடைபெறவிருந்த தேர்தல் பரப்புரைக் கூட்ட மொன்றில் கலந்துகொள்வதற் காக சென்றுகொண்டிருந்தபோது அவரது வாகனம் இரத்தினபுரி, கிரியெல்ல பிரதேசத்தில் விபத்துக்குள் ளானதையடுத்து, இரத்தினபுரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அதேசமயம், அவரது வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதி இரத்தினபுரி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அவரை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு இரத்தினபுரி பிரதம நீதிவான் கே.டி.எஸ்.சமன் குமார உத்தரவிட்டார். (ஒ)

## பரீட்சை மோசடியை தடுக்க நடமாடும் பொலிஸ் சேவை

கொழும்பு, ஓக. 1

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையில் மோசடிகளில் ஈடுபடு வோருக்கு எதிராகப் பரீட்சை திணைக்களத்தால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்ட நடவடிக்கைகளின் மூலம் பரீட்சை நிலையங்களில் ஏற்படுகின்ற குற்றச் செயல்களைக் குறைக்க முடியு மெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் பரீட்சை இடம்பெறும் மையங்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு நடமாடும் பொலிஸ் சேவை ஓகஸ்ட் 5 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும்.

ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## 100 வீடுகள், 7 கடைகள் அளுத்கமவில் கையளிப்பு

கொழும்பு, ஓக.1

அளுத்கம மற்றும் பேருவளை வன்செயல்கள் காரணமாக பெரும் சேதத்துக்குள்ளான 100 வீடுகள் மற்றும் 7 கடைகள் முற்றாக மறுசீரமைக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று இராணுவ ஊடகப் பேச்சாளரும், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளருமான பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.



பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்ட வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மேலும் 103 வீடுகளும் 25 கடைகளும் மேல் மாகாண பாதுகாப்பு தலைமையகத்தால் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. புனரமைப்புப் பணிகள் பூர்த்தியானவுடன் அவை உரியவர்களிடம் கையளிக்கப்படும். கடந்த வன் செயலின் போது இந்தப் பகுதியில் 210 வீடுகளும் 84 கடைகளும் சேதமாக்கப்பட்டிருந்தாக அவர் மேலும் கூறினார். (ஒ)



இலங்கைக்கும் போலந்துக்கும் இடையே விமான சேவைக்களுக்கான இரு நாட்டு வர்த்தக ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கலாநிதி ரவீந்திர ருபேரு மற்றும் போலந்து நகரின் போக்குவரத்து துறைத் தலைவர் இஸபெலா ஸிமஜடா வோஜ்ரிட சோவஸ்கா ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

## இலங்கை போலந்துக்கு இடையில் விமான சேவைக்கான ஒப்பந்தம்

இலங்கை போலந்து நாடுகளுக்கு இடையிலான விமான சேவைக ளுக்கான இரு நாட்டு வர்த்தக ஒப்பந்தம் ஒன்று அண்மையில் இரு நாட்டு முக்கிய பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையின் விமான சேவையை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கலாநிதி ரவீந்திர ருபேரு தலைமையிலான அதிகாரிகள் குழுவொன்று போலந்தின் தலைநகர் வார்யோவுக்குச் சென்றுள்ளனர்.

மேலும் போலந்திலுள்ள இலங்கை தூதரக அங்கத்தவர்கள், வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தினர், சிவில் விமான போக்குவரத்து சபையினர் மற்றும் சிறிலங்கன் விமான சேவை அங்கத்தவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

போலந்து நகரின் விமானப் போக்குவரத்து துணைத் தலைவர் இஸபெலா ஸிமஜடா வோஜ்ரிடசோவஸ்கா அந்த நாட்டின் குழுவுக் குத் தலைமை வகித்தார்.

அவருடன் போலந்து பொது மக்கள் ஆணைய அங்கத்தவர்கள், வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள், விமான சேவையின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கும் போலந்துக்கும் இடையிலான சிறந்த நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் இரு நாட்டு ஒப்பந்தங்கள் தொடர்பிலான பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

பேச்சின் முடிவில் இரு குழுக்களும் புதியதொரு விமான சேவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுடன், இடம்பெற்று வரும் துரித அபிவிருத்திகள் மற்றும் பொது நோக்கு அபிவிருத்தி சம்பந்தமாக மேலும் கலந்துரையாடினர்.


1982 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை போலந்துக்கிடையில் விமான சேவை சம்பந்தமாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் தற்போது மேற் கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் குறிப் பிடக்கூடிய ஒன்றாக அமையும் என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ)

## ஹஜ் யாத்திரைக்கு முகவர்களிடம் பணத்தைக் கையளிக்க வேண்டாம்

### அமைச்சர் பௌசி கோரிக்கை

கொழும்பு, ஓக.1

உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும் வரை ஹஜ் யாத்திரைக் கென முகவர்களிடம் பெயர்களைப் பதிவு செய்து பணத்தைக் கையளிக்க வேண்டாம் என்று அரச ஹஜ் குழுவின் இணைத் தலைவரும் சிரேஷ்ட அமைச்சரு மான ஏ.எச்.எம். பௌசி கோரிக்கை விடுத்துள்ளார்.



பௌசி

இந்தவருடம் ஹஜ் யாத்திரைக்கு அழைத்துச் செல்லப்படும் முகவர்களுக்குரிய ஒதுக்கீடுகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படாததால் யாத்திரிகர்களிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முகவர்களும் தமக்குரிய ஒதுக்கீடுகளுக்கான சிட்டைகளை விற்பனை செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஹஜ் யாத்திரை பயணிகளைச் சேர்க்கும் சில முகவர் நிலையங்கள், தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தன.

இதன் காரணமாக புத்தசாசன அலுவல்கள் அமைச்சால் புதிதாக தயாரிக்கப் பட்ட ஒதுக்கீட்டுப் பட்டியல் மீண்டும் நீதிமன்றில் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இன்று நீதிமன்று தீர்ப்பை அறிவிக்கும். அதன் பின்னரே முகவர்களுக்கான ஒதுக்கீடுகள் உறுதிப்படுத்தப்படும் - என்றார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 850 மனிதர்களை காப்பாற்றும் மரம்

## அமெரிக்க ஆய்வில் தகவல்

மக்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இதனால் சமுதாயத்தில் காற்று மாசுபாடு ஏற்பட்டு மனித இனத்தையே அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறது. இதில் இருந்து விடுபடவேண்டும் என்றால் மரம் வளர்த்து மனித இனத்தைக் காப்பதே ஒரே வழி என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு மரம் 850 மனிதர்களை காப்பாற்றுவதாக அமெரிக்க ஆய்வில் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

காற்று மாசுபாட்டால் வருடத்துக்கு ஒரு பில்லியன் மனித ஆரோக்கியத்துக்கு கேடுவிளைவிப்பதாகவும், இதனால் அமெரிக்காவில் 80 வீதமான மக்கள் நகர்புறங்களில் மரம் வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவித்தனர்.

மரத்தின் நன்மையால் மனிதர்களுக்கு தூய்மையான ஒட்சிசன் கிடைக்க வழி ஏற்படுகிறது. ஓசோன் படலம் துவாரமடையாமல் சூரியனில் இருந்து வரும் அல்ட்ரா ஒளிக்கதிர் வீச்சில் இருந்து எம்மைப் பாதுகாக்கிறது. காற்று மாசுபட்டால் மனிதர்களுக்கு சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

இதயநோய், நுரையீரல் தொடர்பான வியாதிகள், இரத்த நாளங்களின் நரம்பியல் தொடர்பான பிரச்சினைகள் போன்ற பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகளுக்கு பல்வேறு இன்னல்களுக்கு மனித இனம் ஆளாவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

கிராமப்புறங்களை விட நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள் மரம் வளர்ப்பது அவசியம் என்று தெரிவித்தனர். இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படாமல் இருக்க மரத்தை நாம் காப்பாற்றினால் எம்மை மரம் காப்பாற்றும் என்றும் தெரிவித்தனர்.

# புளூட்டோவின் பின்னால் ஏதோ இருக்கின்றதாம்

## கண்டுபிடித்தது நாசா



அமெரிக்க வானியல் ஆராய்ச்சியாளர்கள் தற்போது புதியதாக இரண்டு விண் பொருள்களை புளூட்டோவின் பின்புறப் பகுதியில் கண்டறிந்துள்ளனர்.

அமெரிக்காவின் புகழ் பெற்ற ஹப்பிள் தொலைநோக்கி மூலமாக புளூட்டோவை ஆராய்ச்சி செய்துவந்தபோது இந்தப் புதிய பொருள்கள் கண்டறியப்பட்டுள்ளன.

அந்தத்தொலைநோக்கியின் 200 இற்கும் மேற்பட்ட புகைப்படங்களை பகுப்பாய்வு செய்தபோது இந்தப் பொருள்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று நாசா தெரிவித்துள்ளது. மேலும், இந்த ஆராய்ச்சிக்காக விண்கலம் ஒன்று விரைவில் புளூட்டோவுக்கு அனுப்பப்பட உள்ளது. இதன் மூலம் வேறு சில சூரியக் குடும்பங்களும் அண்டத்தில் இருக்கலாம் என்ற கருத்து பலமாக எழுந்துள்ளது.

ஜூன் 16 முதல் ஜூன் 26 வரை பெறப்பட்ட இந்தப் புகைப்படங்களில் இப்பொருள்கள் பதிவாகி உள்ளன.

மேலும், புளூட்டோவின் அடிப்பரப்பில் இரண்டு குயிபெர் மண்டலங்கள் காணப்படலாம் என்றும் தெரிய வந்துள்ளது. எங்களுடைய ஆராய்ச்சியானது வீண் போகவில்லை. இதன் மூலமாக வானியல் ஆராய்ச்சியில் வேறு சில மண்டலங்களும் கண்டறியப்படலாம் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது என்று வானியல் தொலைநோக்கி அறிவியல் மையத்தின் இயக்குநர் மாட் மவுண்டன் இந்தக் கண்டுபிடிப்பு குறித்து மகிழ்ச்சியாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த ஆராய்ச்சியானது தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பொருள்கள்தான் எம்முடைய சூரிய மண்டலம் உருவாக மிக முக்கிய காரணமாக இருப்பவை. இந்தக் கண்டுபிடிப்புகளின் மூலமாக அண்டத்தில் ஒளிந்திருக்கும் இரகசியங்களும் கண்டறியப்படலாம் என்றும் வானியல் ஆய்வாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.



# குழந்தையை காவல் காத்த ராஜ நாகங்கள்

இந்தியாவில் அதிர்ச்சிகரமான சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. நான்கு ராஜ நாகங்கள் குழந்தை ஒன்றைக் காவல் காத்து, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள கிராமம் ஒன்றில் இந்த அதிசயம் நடைபெற்றுள்ளது. ஆறு மாத வயதுடைய குழந்தை ஒன்று தூங்கிக்கொண்டு இருந்தது. அதன் பெற்றோர்கள் வீட்டின் உள்ளே வேலை செய்து கொண்டிருந்தனர். பெற்றோர்கள் வெளியே வந்து பார்த்தபொழுது குழந்தையைச் சுற்றி நான்கு ராஜ நாகங்கள் படம் எடுத்து நின்று கொண்டிருந்தன. குழந்தை தூக்கத்தில் ராஜநாகங்கள் மேல் புரண்டு படுத்தபோது அந்த ராஜநாகங்கள் குழந்தையை ஒன்றும் செய்யாமல் அந்த குழந்தைக்கு பாதுகாப்புக் கொடுப்பது போல் காவலுக்கு நின்றன. இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர் ஊர் மக்களுக்கு தகவலைத் தெரியப்படுத்தினர்.

அதனையடுத்து ஊர் மக்கள் ஒன்று கூடினர். சிறிது நேரம் கழித்து அந்த நான்கு ராஜநாகங்களும் தாமாகவே வெளியேறிச் சென்று விட்டன. குறித்த குழந்தையை கிராமத்தினர் தெய்வக்குழந்தை என்று கூறி அதனை வழிபட்டு வருகின்றனர். இந்தக் காட்சியை அங்கிருந்த கல்லூரி மாணவி ஒருவர் தனது கைத்தொலைபேசியில் வீடியோ எடுத்து இணையத்தில் பதிவு செய்துள்ளார். இந்தத் தகவலை இந்திய ஊடகங்கள் மட்டுமன்றி, சர்வதேச ஊடகங்களும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சினிமா பார்த்து ஷங்கருக்கு பெயர் வைத்தார்களாம்



தமிழ் சினிமாவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றவர் இயக்குநர் ஷங்கர். இவர் இயக்கிய சிவாஜி, எந்திரன் போன்ற படங்கள் வெளி நாடுகளிலும் அதிக வருமானத்தை வாரிக் குவித்தன. தற்போது அவர் தனக்கு ஷங்கர் என்று எப்படிப் பெயர் வைத்தார்கள் என்ற சுவாரசியமான சம்பவத்தைப் பகிர்ந்துள்ளார், "எனது அம்மா தீவிரமான திரைப்பட ரசிகை. அவர் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தபோது சிவாஜிகணேசன் நடித்த படம் ஒன்றைப் பார்க்கச் சென்றிருக்கிறார். அன்று இரவே அவருக்கு பிரசவ வலி எடுத்து நான் பிறந்திருக்கிறேன். நான் பிறந்த அன்று எனது அம்மா பார்த்த படத்தில் சிவாஜியின் கதாபாத்திரத்தின் பெயர் ஷங்கர். அதையே எனது பெயராக வைத்துவிட்டார்கள்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# நாசா செவ்வாய்க்கு அனுப்பிய விண்வெளி வாகனம் நீண்ட தூரம் பயணித்துச் சாதனை

அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் செவ்வாய்க் கிரகத்துக்கு கடந்த 2004 ஆம் ஆண்டு சூரிய ஒளி சக்தியில் இயங்கும் ரோபோவுடன் கூடிய விண்வெளி வாகனத்தை அனுப்பி வைத்தது.

செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியுமா என ஆய்வு மேற்கொள்ள இது அனுப்பபட்டது. தற்போது அந்த விண்வெளி வாகனம் 40 கிலோ மீற்றர் (25 மைல்) பயணம் செய்து சாதனை படைத்துள்ளது. தற்போது இது செவ்வாய்க் கிரத்தில் என்டீவர் எரிமலைப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இது ஒரு மிகப்பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. சோவியத் ரஷ்யா சந்திரனுக்கு லூனோக்காட் 2 என்ற ஊர்தியை விண்கலம் மூலம் அனுப்பியது. அது கடந்த 1973 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி அங்கு தரை இறங்கியது.

அங்கு 5 மாதத்துக்கும் குறைவாக 39 கிலோ மீற்றர் தூரம் (24.2 மைல்) பயணம் செய்து ஆய்வுகளை மேற்கொண்டது. அதுவே மிகப்பெரும் சாதனையாக இதுவரை கருதப்பட்டது. தற்போது அந்தச் சாதனை முறியடிக்கப்பட்டு விட்டதாக நாசா விஞ்ஞானிகள் பெருமிதம் அடைந்துள்ளனர். இந்த வாகனம் இவ்வளவு தூரம் பயணம் செய்யும் வகையில் வடிவமைக்கப்படவில்லை. ஒரு கிலோ மீற்றர் தூரம் மட்டுமே பயணம் செய்ய வடிவமைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.



# விளங்கி நீற்றலும் மறைந்து நீற்றலும்

இறைவன் எல்லா இடத்திலும் நீங்காது இருப்பவன் ஆயிற்றே, அவன் எப்படிச் சிலரை விட்டு அகன்று நிற்க முடியும்? என்று கேட்கலாம். அகன்று நிற்பான் என்பதற்கு, இடம்பெயர்ந்து நீங்குவான் என்பது கருத்தன்று; அந்த இடத்தில் இருந்தும் புலப்படாமல் இருப்பான் என்பதே கருத்தாகும்.

அவ்வாறே, இறைவன் சேய்மையில் இருக்கிறான் என்பதற்குக் கருத்து, அவன் புலப்படாமல் மறைந்திருக்கிறான் என்பதேயாகும். இறைவன் அருகில் இருக்கிறான் என்பதற்குக் கருத்து அவன் வெளிப்பட்டு நிற்கிறான் என்பதேயாகும். "சேயாய் நணியானே" என்கிறது திருவாசகம்.

இறைவன் அடியவரிடத்தில் தயிரில் நெய்போல விளங்கி நிற்பான். பாசப் பற்றுடைய வானவர் முதலியோரிடத்தில் அவ்வாறு விளங்குதல் இன்றிப் பாலில் நெய்போல மறைந்து நிற்பான்.

ஞானக்கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் அறிமுகமாகிறது 5 ஜி கைபேசி வலையமைப்பு



தற்போது பாவனையில் காணப்படும் 3 ஜி. 4ஜி மொபைல் வலையமைப்புக்களை விடவும் அதிக வேகமான 5ஜி வலையமைப்பு 2020 ஆம் ஆண்டில் லண்டனில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.
அதாவது 4ஜி வலையமைப்பை விடவும் 100 மடங்கு வேகம் அதிகம் கொண்ட இந்த வலையமைப்பு அறிமுகமாகவுள்ளது.
இதனை லண்டன் முதல்வரான பொறிஸ் ஜோன்சன் அறிவித்திருக்கின்றார்.
இந்த வலையமைப்பு உருவாக்கத்தில் ஸுரே பல்கலைக்கழகத்துடன் இணைந்து லண்டன் நகரம் பணியாற்றவுள்ளது.
தற்போது மந்தமான இணைப்பைக் கொண்ட பகுதிகளும் இந்தப் புதிய வலையமைப்பால் பிரதியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# குவாவி அறிமுகப்படுத்தும் ஸ்மார்ட் கைபேசி

சில புதிய வகையான ஸ்மார்ட் கைபேசிகளை உற்பத்தி செய்து வருவதாக அறிவித்துள்ள குவாவி நிறுவனம், விரைவில் குவாவி அஸெண்டி மேற் 3 எனும் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்தக் கைபேசி 6 அங்குல அளவு, 1080 X 1920 பிக்ஸல் அளவுடைய தொடுதிரையைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை தவிர ஒக்ரட் கோர் ஹை சிலிக்கொன் கிரின் 920 புரொஸஸர் பிரதான நினைவகமாக 2 ஜிபி நினைவகம் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.
இவற்றுடன் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, காணொலி அழைப்புக்களை ஏற்படுத்துவற்காக 5 மெகாபிக்சல்களை உடைய கமரா என்பனவும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அன்ரோயிட் வெயர் சாதனத்தில் இணைய உலாவி




ஸ்மார்ட் கடிகாரங்களைப்போன்று அணியக் கூடியதும், தன்னகத்தே பல்வேறு வசதிகளைக் கொண்டதுமான சாதனமே அன்ரோயிட் வெயர் ஆகும்.
இந்தச் சாதனம் கடந்த மாதம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
இதனைத் தொடர்ந்து பல்வேறு அப்பிளிக்கேஷன்கள் இந்தச் சாதனத்துக்காக அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன.
கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட அன்ரோயிட் வெயர் சாதனத்துக்கு தற்போது வெயர் இன்ரநெற் பிறவுஸர் என்ற புதிய அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
1.6 அங்குல அளவுடைய திரையைக் கொண்ட இந்தச் சாதனம் மூலம் இணைய உலா வலில் ஈடுபடுவதற்கு வெயர் இன்ரநெற் பிறவுஸர் அப்பிளிக்கேஷன் பயன்படுகின்றது.

# ஸ்மார்ட் கைபேசி பாவனையாளருக்கு ஓர் எச்சரிக்கை



ஸ்மார்ட் கைபேசி பாவனையாளர்கள் தம்மைப் புகைப்படம் எடுத்து மகிழ்வது சாதாரண விடயமாகும்.
இதில் சில அந்தரங்கமான விடயங்களையும் புகைப்படம் எடுத்து பின்னர் அதனை அழித்து விடுவார்கள்.
ஆனால் அவ்வாறு அழித்த பின்னரும் அன்ரோயிட் ஸ்மார்ட் கைபேசிகளிலிருந்து குறித்த படங்களை மீட்டெடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கு உதாரணமாக ஈபே தளத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 20 அன்ரோயிட் ஸ்மார்ட் கைபேசிகளில் அவாஸ்ற் நிறுவனத்தின் விசேட மென்பொருள் ஒன்றைப் பயன்படுத்தி 40,000 அந்தரங்க புகைப்படங்கள் மீட்டு எடுக்கப்பட்டுள்ளன.
இதேவேளை அன்ரோயிட் மென்பொருளை உற்பத்தி செய்யும் கூகுள் நிறுவனம் 3.0 பதிப்பு பிந்திய இயங்குதளங்களில் அழித்த புகைப்படங்களை மீட்டெடுக்க முடியாது என்று தொடர்ச்சியாக தெரிவித்து வந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இதேபோன்று புதிய ஐ போன் மற்றும் ஐ பாட்- களிலும் இதே பிரச்சினை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்ரோயிட் மென்பொருளை உற்பத்தி செய்யும் கூகுள் நிறுவனம் 3.0 பதிப்பு பிந்திய இயங்குதளங்களில் அழித்த புகைப் படங்களை மீட்டெடுக்க முடியாது எனக் கூறி வந்தது.

# ருவீச் தளத்தை வாங்குகின்றது கூகுள்

சில மாதங்களுக்கு முன்னர் கூகுளின் யூரியூப் பகுதி ருவீச் தளத்தை வாங்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன.
இந்த நிலையில் தற்போது கூகுள் நிறுவனம் ருவீச் தளத்தை ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தி வாங்கவுள்ளதாக மற்றுமொரு தகவல் வெளியாகியுள்ளது.
2011 ஆம் ஆண்டின் பிற் பகுதியில் உருவாக்கப்பட்ட இந்தத் தளமானது ஒன் லைன் ஹேம்களுக்கான பிளாட்போமினை உடையது.
தற்போது மாதாந்தம் 50 மில்லியன் வரையான செயற்படு நிலையிலுள்ள பயனாளிகளைக் கொண்டுள்ள இந்தத் தளத்தில் 1.1 மில்லியன் வரையானவர்கள் தமது காணொலிகளை ஒளிபரப்பு செய்கின்றனர்.
அத்துடன் மொத்தமாக 13 பில்லியன் நிமிடங்கள் நீளமான காணொலிகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2011 ஆம் ஆண்டின் பிற் பகுதியில் உருவாக்கப்பட்ட இத்தளமானது ஒன்லைன் ஹேம்களுக்கான பிளாட் போமினை உடையது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்படாத நிலையில் ஐயன்கன்குளம் சந்தை

துணுக்காய்,ஓக.1

துணுக்காயிலுள்ள ஐயன்கன் குளம் பொதுச் சந்தை திறந்து வைக்கப்பட்ட போதிலும் இங்கு வர்த்தக நடவடிக் கைகள் இடம்பெறுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் நான்கு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப் பட்ட இந்தச் சந்தை எவருக் கும் பயன்படாத வகையில் காணப்படுகின்றமை பலருக் கும் கடும் விசனத்தை ஏற் படுத்தியுள்ளது.

சுமார் 200 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத் தில் மக்கள் மீள் குடியமர்ந்த போது அமைக்கப்பட்ட இந்தச் சந்தையை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் திறந்து வைத்திருந் தார்.

இந்த நிலையில் இந்தச் சந் தையில் வியாபார நடவடிக் கைகள் எதுவும் இடம்பெறு வதில்லை என்று துணுக் காய்ப் பிரதேச செயலக ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (க-18)



# காட்டு யானைகளால் தொல்லை

கிளிநொச்சி,ஓக.1

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மூன்று முறிப்பு, பனங்காமம் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் தாம் அச்சத்துடன் வாழ வேண் டியிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் கடுமை யான வறட்சி காரணமாகவே யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின் றது.

ஊர்மனைக்குள் புகும் காட்டு யானைகள் பயன்தரு மரங் களையும் ஏனைய பயிர் களையும் அழித்து வருவதால் மக்கள் கவலையும் அச்சமும் அடைந்து காணப்படுகின் றனர். (க-55)

# மனைவியைக் கொன்றுவிட்டு உயிரை மாய்த்த கணவன்

## வவுனியா மகாரம்பைக்குளத்தில் சம்பவம்

வவுனியா, ஓக.1

வவுனியா மகாரம்பைக்குளம் பகுதியில் மனைவியை வெட்டி கொன்று விட்டு கணவன் தமது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம் பெற்றுள் ளதாக வவுனியாப் பொலி ஸார் தெரிவித்தனர்.

மகாரம்பைக்குளத்தை சேர்ந்த செல்லையா இராசேந் திரம் (வயது-46) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே அரபுநாடொன்றில் பணி யாற்றி விட்டு வந்த தனது மனைவி யான இ.அமுதாவை (வயது-38) அவர் நித்திரையில் இருந்த சமயம் கோடரியால் தலையில் வெட்டியுள்ளார்.



இதனைத் தடுக்க வந்த மனை வியின் தந்தையான வீ. வெள் ளைச்சாமி மற்றும் தாயான வெ. கிருஸ்ணவேணி ஆகி யோரையும் கோடரியால் வெட்டி விட்டு அவர் தலை மறைவானார்.

காயமடைந்தவர்களை அய லவர்கள் வவுனியா மருத்து வனைக்குக் கொண்டு சென் றனர்.

எனினும் சந்தேக நபரின் மனைவி இறந்ததாகத் தெரி விக்கப்பட்டது. ஏனைய இரு வருக்கும் வவுனியா பொது மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று காலை காத்தார் சின்னக்குளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள வீடொன்றின் பின்புறமுள்ள மாமரத்தில் சந்தேக நபரான செ. இராசேந்திரனின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டது.

இந்தச்சம்பவம்தொடர்பில்பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர். (க-421)

# மணல் அகழ்வு காரணமாக மரங்கள் அழிவுண்டு நாசம்

## அக்கராயன் ஆற்றுப் பகுதியில் இயற்கைக்கு ஆபத்து

கிளிநொச்சி,ஓக.1

கிளிநொச்சி அக்கராயன் ஆற்றுப்பகுதியில் தொடர்ச்சி யாக இடம்பெற்று வரும் பெரு மெடுப்பிலான மணல் அகழ் வால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்கள் பாறி வீழ்ந்துள்ளது டன் ஆயிரம் ஏக்கர் வரையான நெற்செய்கை நிலம் எதிர்காலத் தில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத அளவுக்கு மாறும் அபாயநிலை உருவாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய குளமா கிய அக்கராயன் குளத்தின் வான்வெள்ளம் வெளியேறி குடமுருட்டி ஆற்றில் கலக் கின்ற அக்கராயன் ஆற்றில் இருந்து ஏழரைக் கிலோமீற்றர் தூரத்துக்கு நாள்தோறும் உழவு இயந்திரங்கள் மூலம் மணல் அகழ்வு இடம்பெறு கின்றது.

இதன்காரணமாக இந்த ஆற் றின் வலதுபுறத்திலுள்ள இலக் கம்2 தொடக்கம்68வரையான 680 ஏக்கர் நெற்காணி பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடி யாத பகுதியாக மாறும் அபாய நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை ஆற்றின் இடது புறத்திலுள்ள சமாதானபுரத் தின் 65 ஏக்கர் நெற்செய்கை காணியிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை உருவாகியுள்ளது. அத்துடன் இந்த ஆற்றை நம்பி 150 ஏக்கரில் மேட்டுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட பகுதிகள் மணல் அகழப்பட்டு பெரும் குழிகளாகக் காணப் படுகின்றன.



மண் அகழ்வால் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலை

அக்கராயன் ஆற்றில் ஏழரைக் கிலோமீற்றருக்கு மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம் பெற்றுக் கொண்டிருப்பதன் கார ணமாக அக்கராயன் மத்தி, மற் றும் கிழக்குப் பகுதிகளி லுள்ள கிண்றுகளின் நீர் மட்டம் எதிர் காலத்தில் குறைவடையக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

அத்துடன் குளத்தின் வான் வெள்ளம் 1000 ஏக்கர் வரை யான நிலப்பரப்புக்கு பரவிப் பாயக்கூடிய சூழல் காணப்படு வதன் காரணமாக விவசாயி கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

அத்துடன் அக்கராயன் குளத் தின் கீழான கமக்கார அமைப் புகளான நாகதம்பிரான் கமக் கார அமைப்பு, திருவள்ளுவர் கமக்கார அமைப்பு, பிள்ளை யார் கமக்கார அமைப்பு, ஐயனார் கமக்கார அமைப்பு என்பன அக்கராயன் ஆற்றில் இடம்பெறும் மணல் அகழ்வு தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்க வில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சில கமக்கார அமைப்புக்க ளின் முக்கிய தலைவர்களின் உழவு இயந்திரங்களே இந்த மணல் அகழ்வில் ஈடுபடுவ தாகவும் விவசாயிகள் தெரி விக்கின்றனர்.

அக்கராயன் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கமே அக்க ராயன் ஆற்றில் மணல் அகழ்வுக்கு சூழலியல்தன்மை களை கருத்தில்கொள்ளாது கூடுதலான அனுமதிகளை வழங்கிவருவதாகவும் விவசா யிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மணல் அகழ்வு தொடர் பாக கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம், கனிய வளப் பகுதி என்பன விரைவான நடவடிக்கை எடுக்கும்படியும் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளதுடன், அக்கராயன் ஆற்றில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வால் ஏற்பட் டுள்ள பாதிப்புகள் தொடர்பாக மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், பிரதேச செயலர், நீர்ப்பாசன அதிகாரிகள், கனியவளப் பகுதி யினர் ஆகியோருக்கும் விவ சாயிகளால் தகவல் தெரி விக்கப்பட்டுள்ளது.

மழைகாலத்தில் அக் கராயன் ஆறு பெருக்கெடுக் காமல் இருபுறமும் வயல்நிலங் களுக்கு நீர் பரவாமல் அமைக் கப்பட்ட அணைகள் முற்றாக அழிக்கப்பட்டே மணல் அகழ்வு நடைபெறுகின்றமை குறிப்பி டத்தக்கது. (க-18)



கொக்குத்தொடுவாய் கமநல சேவை நிலையத்துக்குச் சொந்தமான பல லட்சம் ரூபா பெறுமதியான உழவு இயந்திரங்களும், உபகரணங்களும் மழையிலும், வெயிலிலும் கிடந்து சேதமடையும் காட்சி. (க-433)

# முல்லைத்தீவில் முல்லை நெய்தல் அபிவிருத்தி ஒன்றியம்

முல்லைத்தீவு கரையோரப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் முல்லை நெய்தல் அபிவிருத்தி ஒன்றி யம் மீண்டும் உருவாக்கப்பட் டுள்ளது.

முல்லைத்தீவு கரையோரப் பிர தேசங்களை அபிவிருத்தி செய் யும்நோக்குடன்1990இல் இந்த அமைப்பு உருவாக்கப் பட்டு பின்பு, நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலையால் செயலிழந்தது.

இந்த நிலையில் முல்லைத் தீவு கரையோர புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்களின் முயற்சி யால் முல்லைத்தீவு கரை யோரக் கிராமங்களை அபிவி ருத்தி செய்யும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனின் வேண்டுகோளுக்கு அமைய கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தி.திரேஸ்குமாரின் பூரண ஒத்துழைப்புடன் இந்த அமைப்பு மீண்டும் உருவாக் கப்பட்டுள்ளது.

இதன் போசகராக முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் இருப்பார். தலைவராக-ம.குணசிங்கராஜா, உப தலைவராக- யோ.யூட் நிம லன், செயலாளராக -செ.இரத் தினம், உப செயலாளராக- தே.ஸ்ரீமோகன், திருமதி புஸ்பா ணந்தன் இமக்குலேற்றா, பொரு ளாளராக- மி.அன்ரனி யூட் மற் றும்ஆலோசகர்களாக-ம.அன் ரனி ஜெயநாதன், சி.சிவமோகன், துரவிகரன்,மி.யேசுஜெனோல்ட், அ.பாலுமதி யூஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# குளத்தை ஆழப்படுத்துமாறு முழங்காவிலில் கோரிக்கை

கிளிநொச்சி,ஓக.1

கிளிநொச்சி, முழங்காவில் குளத்தை ஆழப்படுத்துவதன் மூலமாக முழங்காவில் கிரா மத்தின் நிலத்தடி நீரைப் பாது காக்க முடியுமென விவசாயி கள் தெரிவிக்கின்றனர்.

முழங்காவில் கிராமத்தில் வசிக்கும் ஆயிரத்துக்கும் மேற் பட்ட குடும்பங்கள் குழாய்க் கிணறு மூலமாகக் கிடைக்கும் நிலத்தடி நீரையே நம்பியி ருக் கும் நிலை காணப்படுகின் றது.

இந்த நிலையில் முழங்காவில் குளத்தை ஆழமாக்கி நீரைத் தேக்கி வைப்பதன் மூலமாக இந்தக் கிராமத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்க முடியுமெ னத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட் டத்திலும் முழங்காவில் குளத்தை ஆழமாக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட் டிருந்தது.

இந்தநிலையில் கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளத்தை யும் புனரமைத்து அதன் கீழ் உள்ள வயல் நிலங்களில் பயிர்ச் செய்கைக்கு வழி வகுக்குமாறு இங்குள்ள விவசாயிகள் கிளி நொச்சி அரச அதிபரிடம் வேண் டுகோள் விடுத்துள்ளனர்.

1984 ஆம் ஆண்டு உருவாக் கப்பட்ட இந்தக் குளம் விவசா யச் செய்கைக்கு பயன்படுத்தப் படாத நிலையில் காணப்படு கின்றது.

குளத்தைப் புனரமைப்பதன் மூலமாக 400 ஏக்கருக்கும் மேலான நிலப்பரப்பில் விவ சாயச் செய்கைகளை மேற் கொள்ள முடியுமெனத் தெரிய வருகின்றது.

இதேவேளை இந்தக் குளத் தின் கீழான வயல் நிலங்கள் உவரடையும் அபாய நிலை யையும் எட்டியுள்ளன.

ஆனை விழுந்தான் குளம் கிராமத்தின் மேற்குப் பகுதி உவரடைந்து வருவதன் கார ணமாக இங்குள்ள கிணறுக ளும் உவராக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடர்கள் மத்தியிலும் சிறப்பான சேவையாற்றும் மாநகர சபை

**புதிதாகப் பதவியேற்றுள்ள எதிரணி உறுப்பினர் புகழாரம்**

யாழ்ப்பாணம், ஓக. 1
பல்வேறு இடர்கள் மத்தியிலும் யாழ்.நகரில் முன்னேற்றகரமான சேவையை வழங்கி வருகிறது யாழ்.மாநகர சபை என்று யாழ்.மாநகர சபையில் புதிதாகப் பதவியேற்றுள்ள எதிரணி உறுப்பினர் இராஜதுரை புஸ்பராசா தனது கன்னியுரையில் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் எதிரணி உறுப்பினர் பதவியிலிருந்து இரா.சங்கையா அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து அதற்கான வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் வர்த்தமானி அறிவித்தலின்படி இராஜதுரை புஸ்பராசா நேற்றுப் புதிதாகப் பதவியேற்றார்.

மாநகர சபையின் ஆட்சிக் காலம் முடியும் தறுவாயில் குறுகிய காலத்தில் பதவியேற்ற அவருக்கு யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் வரவேற்பு வழங்கப்பட்டதை அடுத்து அவர் தொடர்ந்து தனது கன்னி யுரையை நிகழ்த்தும் போது.

1998 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இருந்து இன்றும் யாழ்.மாநகர சபை தனது சேவையைச் சிறப்பாக ஆற்றி வருகிறது. குறிப்பாக போர்க் காலத்தில் கூட இடர்களைச் சந்தித்தாலும் முன்னேற்றகரமான சேவ்வகளை வழங்கி வருகிறது. தொடர்ந்து இனி வரும் காலங்களிலும் அவ்வாறான சேவைகளை யாழ். மாநகர சபை வழங்கும் என்றும் தெரிவித்தார். (வ-14)



யாழ். நகரில் பண்டைய கால மன்னர்கள் மூவரின் நினைவாக உருவச் சிலைகள் அமைக்கப்படவுள்ளன. மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றி குறித்த சிலைகள் அமைப்பதற்கான தளம் அமைக்கும் பணிகளை மாநகர சபை முன்னெடுத்துள்ளது. எல்லாளன், பண்டாரவன்னியன், சங்கிலியன் போன்ற மன்னர்களின் உருவச் சிலைகளே மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றி வைக்கப்படவுள்ளன. (வ-17)

## மாட்டிறைச்சிக் கடைகள் இன்றுமுதல் இயங்கும்


**தென்மராட்சிப் பிரதேச உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட**

தென்மராட்சி, ஓக. 1
தென்மராட்சிப் பிரதேச உள்ளூராட்சிச் சபைகளால் நடத்தப்படும் மாட்டிறைச்சிக் கடைகள் இன்று தொடக்கம் மீண்டும் இயங்கு வதற்கு சாவகச்சேரிகால்நடை மருத்துவர் பணிமனையால் நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொல்களங்களில் இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதற்கு முன்பாக முன்னர் பரிசோதனைக்குக் கட்டப்படும் மாடுகளுக்கு காதில் இலக்கமிடப்பட்டுள்ளதா எனப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மாடுகளைப் பார்வையிட்டு உறுதிப் படுத் திய பின்னரே வெட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக தென்மராட்சி பிரதேசத்தின் வரணி தொடக்கம் கச்சாய் வரையான பகுதிகளில் உள்ள பிரதான வீதிகளின் கிழக்குப் பக்கமாக உள்ள பகுதிகளில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய்பரவியதையடுத்து கொல்களங்களில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது தடை செய்யப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மாடுகள் வெளியேயும் உள்ளேயும் கொண்டுசெல்லவோ, கொண்டு வரவோ தடை செய்யப்பட்டதுடன் அந்தப் பகுதிகளில் பால் விற்பனையும் கொள்வனவும் நிறுத்தப்பட்டிருந்தது. (வ-9)

## வெள்ள வாய்க்காலை மூடி வீதி அமைப்பதற்கு எதிர்ப்பு



வலி.வடக்கு, ஓக.1
உடுவில் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட சண்டிலிப்பாய் வீதியில் உள்ள வெள்ள வாய்க்காலை
மூடி வீதி அமைக்கும் பணிக்கு எதிராக மக்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் குறிப்பிட்ட வீதி அகலிப்புச் செய்யப்பட்டுத் திருத்தும் பணிகள் வீதிகள் அகலிப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் கடந்த பல ஆண்டுகளாக வெள்ளம் ஓடும் வாய்க்காலையும் மூடி தற்போது வீதி அமைக்கும் செயற்பாட்டை வீதி அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

பணி ஆரம்பிக்கும் நிலையில் குறித்த வெள்ள வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டு வெள்ளம் ஓடுவதற்கு வசதியாக சிமெந்தால் வடிகால் அமைக்கப்படும் என்று கூறி உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் ஆரம்பிக்கும் குறித்த வீதியின் முகப்பில் வெள்ளம் வடிந்து ஓடுவதற்கான வாய்க்கால் சிமெந்தால் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு இடையில் கைவிடப்பட்டுள்ளது.

தற்போது வாய்க்காலை இடையில் மூடி வீதி அமைக்கும் செயற்பாட்டை ஒப்பந்தகாரர்கள் மேற்கொள்ள ஆரம்பித்ததைத் தொடர்ந்து அதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இது தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கையொப்பம் இட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச செயலாளர், அரச அதிபர், பிரதேச சபை என பலருக்கும் எழுத்து மூலம் முறையிட்டுள்ளார்கள். (வ-86)

## ஆலயக் குறைபாடுகள், தேவைகளை எழுத்து மூலம் தந்தால் உரிய தீர்வு

யாழ்ப்பாணம். ஓக.1
ஆலயங்களில் உள்ள குறைபாடுகள், தேவைகள் தொடர்பான விவரங்களை எழுத்து மூலமாக வழங்கினால் உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க யாழ்.மாநகர சபை தயாராக வுள்ளது என்று யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை நல்லூர் ஆலயத்தின் மீது காட்டும் கரிசனையைப் போன்று ஏனைய ஆலயங்களின் திருவிழாக்காலங்களிலும் கரிசனை காட்டுவ தில்லை என்று யாழ். மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப் பினர் இளங்கோ சபையில் சுட்டிக்காட்டிய போது அதற்குப் பதிலளித்து முதல்வர் கூறியதாவது:-

யாழ்.மாநகர சபையால் சகல உறுப்பினர்களையும் ஒன்று கூட்டி எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மத பேதமின்றி சகல ஆலயங்களுக்குத் தேவையான உதவி ஒத்தாசைகளும் வழங்கப்படும்.

ஆலங்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பான விவரங்களை ஆலயம் சார்ந்தவர்களால் எழுத்து மூலமாகவேதரப்பட வேண்டும். மதபேதங்களையோ ஆலய வேறுபாடு களையோ யாழ்.மாநகர சபை கைக்கொள்வதில்லை என்றும் தெரிவித்தார். எனினும் மாநகர சபை பேதம் பார்க்காமல் ஆலயங்களுக்குத் தனது சேவையை வழங்கி வருகிறது.

அதற்கு மாநகர சபைக்கு நன்றி தெரிவித்தனர் ஆளுங்கட்சி மற்றும் எதிரணி உறுப்பினர்கள். அத்துடன் நல்லூர் ஆலயத்தால் யாழ்.மாநகர சபைக்குக் கூடுதல் வருமானம் கிடைப்பதாகவும் அதனால் திருவிழாக்காலத்தில் மாநகர சபை தனது சேவையில் முன்னிற்பதாகவும் தெரிவித்தனர். (வ-14)

## சிறுமிகள் மீதான வன்புணர்வு சம்பவம்; குற்றவாளிகளை கைது செய்யுங்கள்

**காரைநகர் பிரதேச சபை தீர்மானம்**

யாழ்ப்பாணம், ஓக.1
காரைநகர் ஊரிக் கிராமத்தில் சிறுமிகள் இருவரை பாலியல் வன்புணர்வு புரிந்தகடற்படை சிப்பாய் களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென காரைநகர் பிரதேச சபையில் தீர்மாணம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் புதன்கிழமை அதன் தலைவர் வே.ஆனைமுகன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது. காரைநகர் ஊரிக் கிராமத்தைச் சேர்ந்த 11 வயது மற்றும் 09 வயது சிறுமிகளைக் கடற்படையினர் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர். இது மிக மோசமான செயலாகும். தமக்கு இருக்கும் அதிகாரங்க ளைப் பயன்படுத்தி குற்றவாளி களை தண்டனையில் இருந்து தப்பிக்கவைக்கஅரசுமுயற்சிக்கிறது. எனவே இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறக்கூடாதென்றும், பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட குறித்த கடற்படை சிப்பாய்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்றும் சபையில் பிரரேரணை முன் வைக்கப்பட்டது. (ஜ-106)

## மீசாலை மேற்கில் திருட்டுக்கள் அதிகரிப்பு

மீசாலை மேற்குப் பகுதியில் அடிக்கடி இடம்பெறும் திருட்டுக்களால் அந்தப் பகுதி மக்கள் இரவு வேளைகளில் விழித்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் குறித்த பகுதியிலுள்ள வீடொன்றின் ஜன்னல் கம்பியை வளைத்து உட்புக முயன்ற திருடர்கள் தமது முயற்சி தோல்வியடைந்ததால் தடியொன்றால் அறைக்குள் வைக்கப்பட்டிருந்த கைப்பையை இழுத்தெடுத்து அதற்குள்ளி ருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வெளியில் கைப்பையை எறிந்துவிட்டுச் சென்றுள்ளனர்.

அன்றைய தினம் அதே பகுதி வீடொன்றினுள் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெண்ணைக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

திங்கட்கிழமையன்றி மேலும் ஒரு வளவினுள் மறைந்திருந்த திருடர்கள் வீட்டுக்காரர் கிணற்றடிக்குச் சென்ற வேளையில் வீட்டினுள் இருந்த பணம் மற்றும் பெறுமதியான பொருள்களை எடுத்துக் கொண்டிருக்கையில் வீட்டுக்காரர் திடீரென வீட்டுக்குள் வந்ததால் அவரைத் தள்ளி வீழ்த்திவிட்டு வெளியே வந்து கதவைப் பூட்டிவிட்டுத் திறப்பையும் கொண்டு சென்றுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களால் அந்தப் பகுதி மக்கள் இரவு வேளைகளில் திருடர்கள் குறித்து அச்சத்தால் நித்திரையின்றி விழித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சுவிஸ் புங்குடுதீவு ஒன்றியத்தால் குடிதண்ணீர் பௌசர்

யாழ்ப்பாணம், ஓக.1
சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தால் வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட குடிதண்ணீர் பௌசர் கைய ளிக் கும் நிகழ்வு புங்குடுதீவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு புங்குடுதீவு சர்வோதய சேவை வளாக மண்டபத்தில் வட இலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி பொ. ஜமுனாதேவி தலைமையில் நடைபெற்றது.

சுவிஸி லுள்ள புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றிய பொருளாளரான ச.ரமணதாஸால் குடிதண்ணீர் பௌசர் கையளிக்கப்பட்டு வட இலங்கை சர்வோதய நிலையப் பொறுப்பாளர் செல்வி க.புஸ்பமணி, வட இலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி. பொ. ஜமுனா தேவி ஆகியோரால் பொறுப்பேற்கப்பட்டது.




நிகழ்வின் ஆரம்பமாக புங்குடுதீவின் சில பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டது.

நிகழ்வில் வட இலங்கை சர்வோதய இணைப்பாளர் பேராசிரியர் கா. குகபாலன், புங்குடுதீவு கிராம அலுவலர் கு.சந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அமைதி, ஒருமைப்பாட்டுக்கு பலசேனா ஓர் அச்சுறுத்தல்

பல்லின மக்கள், பல்கலாசாரத்தைப் பேணுபவர்கள், பல மதங்களைப் பின்பவற்றுபவர்கள் வாழும் நாடு இலங்கை என்பதை உறுதிப்படுத்துமாறு உலக அரங்கில் கொழும்பு அரசு மீது அழுத்தங்கள் அதிகரித்து வருகையில், நாட்டுக்குள் இலங்கை பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமான பௌத்த நாடு என்ற கொக் கரிப்பு வானுயர எழுவதையும் அவதானிக்க முடிகிறது.

அநகாரிக தர்மபால பிக்குவைப் பின்பற்றி சில பல பௌத்த பிக்குகள் இந்தக் கோஷத்தை முன்வைத்து வருவதைக் கண்டும் காணமலும் இருப்பதன் மூலம் கொழும்பு அரசு அவர்களை ஊக்குவித்து வருவது வேதனையளிக்கிறது.

ஓர் இன மக்கள் ஒரு நாட்டில் மட்டும் வாழும் நிலை இலங்கையிலும் இஸ்ரேலிலும் மட்டுமே இருக்கிறது என்று பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்கிறார்.

அவருடைய ஒப்பீடு நூதனமானது. ஆனால் சரியானது. பாலஸ்தீனத்தில் முஸ்லிம்களின் நிலத்தை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலிய அரசு அங்கு தாக்குதல் என்ற பெயரில் பங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. ஆயிரக் கணக்கான பொதுமக்கள் இஸ்ரேலிய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். வகை தொகையின்றிப் போர்க் குற்றங்கள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தாம் ஆக்கிரமித்துக் கொண்ட நிலத்தைத் தக்க வைப்பதற்காக இஸ்ரேலிய அரசு பயங்கரவாதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு கோரத் தாண்டவம் ஆடுகிறது. வன்னிப் போரில் இதற்குச் சற்றும் மாறுபாடில்லாமல் கொழும்பு அரசும் அதையே தான் செய்தது. போரின் பின்னரும் இஸ்ரேலியப் பாணியையே தமிழர் பகுதிகளில் அது பின்பற்றியும் வருகிறது. எனவே ஞானசாரர் கூறிய ஒப்பீடு மிகச் சரியானது.

இலங்கை அரசும் இஸ்ரேலிய அரசும் நடந்து கொள்ளும் விதங்கள் ஒரேமாதிரியானவையே. ஆனால், ஞானசார தேரர் குறிப்பிடும் இலங்கை பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற கருத்துப் பச்சைப் பொய்யானது. வரலாற்றில் ஒருபோதும் இலங்கை என்ற நாடு சிங்கள பௌத்தர்களின் நாடாக மட்டும் இருந்ததில்லை. வரலாற்றின் எல்லாக் காலங்களிலும் இங்கு பல இனங்கள் வாழ்ந்தன என்பதை சிங்கள வரலாற்றாசிரியர்கள் பலரும்கூட உறுதிப்படுத்தியுள்ளனர்.

இஸ்ரேலோ, யூதர்களுக்காக மட்டுமே உருவாக்கப்பட்ட நாடு. இலங்கை அதுபோன்று என்றும் இருந்ததில்லை. எனவே பல்லின, பல கலாசார பல மத விடயத்தில் இலங்கையை ஒருபோதும் இஸ்ரேலுடன் ஒப்பிட முடியாது. ஆனாலும் அப்படி ஒப் பிட்டு, சிங்கள மக்களின் மனங்களில் என்றும் இருக்கும் “சிறுபான்மை உளவியல்” என்கிற மனப்பான்மைச் சிக்கலைத் தூண்டி விட்டு சிறுபான்மை யினருக்கு எதிராக அதனைப் பயன்படுத்தி அதன் மூலம் பயனடைய பொது பலசேனா போன்ற சக்திகள் முனைந்து நிற்கின்றன என்பது வெளிப்படையானது. அதனைக் கட்டுப்படுத் தாது கொழும்பு அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது கவலையளிக்கிறது.

பொது பலசேனாவை கொழும்பு அரசு உடனடியாகக் கட்டுப்படுத்தாது போகுமானால், அளுத்கம கலவரத்துடன் சிறுபான்மை இன மற்றும் மதத்தவர்கள் மீதான தாக்குதல்கள் நிற்கப்போவதில்லை என்பது திண்ணம். அது இலங்கை நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் அமைதிக்கும் ஒருபோதும் உதவப் போவதுமில்லை.

# வல்லரசுகளின் நலன்களுக்காக விளைவிக்கப்படும் விபரீதங்கள்



ராஜ்

வல்லரசுகள் தங்களின், நலன்களுக்காக, முட்டாள்களின் கைகளில் ஆயுதங்களைக் கொடுத்தால், அது எப்படிப்பட்ட விபரீதங்களை உலகுக்கு ஏற்படுத்தும் என்பதை அவர்களுக்கே உணர்த்தும் இன்னொரு கசப்பான பாடம் இது.

மீண்டும் ஓர் அநியாயம் நிகழ்ந்துள்ளது. அம்ஸ்டர்டாமிலிருந்து 298 பயணிகளுடன் ( இவர்களுள் 15 பணியாளர்களும் அடங்குவர் ) மலேசியா நோக்கிப் பறந்து கொண்டிருந்த எம்.எச். 17 இலக்கத்தைக் கொண்ட மலேசியன் ஏர்லைன்சுக்குச் சொந்தமான பயணிகள் விமானம் , உக்ரைன் வான்பரப்பில் வைத்துச் சுட்டு வீழ்த்தப்பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் காணாமற் போன மலேசியன் ஏர்லைன்ஸ் விமானத்தின் நிலைமை என்னவென்றே தெரியாத நிலையில் இது இன்னொரு பேரிடியாக மலேசியன் ஏர்லைன்சுக்கும், மலேசிய அரசுக்கும் இருக்கும் என்பது திண்ணம்.

இனிவரும் காலங்களில் எத்தனை பயணிகள் மலேசியன் ஏர்லைன்ஸை தமது பிரயாணங்களுக்குப் பயன்படுத்துவார்கள் என்பது கேள்விக்குறியே. இது மலேசியாவின் பொருளாதாரம் தொடக்கம் அதன் உல்லாசப் பிரயாணத்துறை வரை மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்தச் செய்தியானது ஒபாமா தொடக்கம் ஆஸ்திரேலிய அரசுவரை மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதன் மூலமும் அப்பாவிகளைக் கொன்றதன் மூலமும் எவரும் எதையும் சாதிக்கப் போவதில்லை. மாறாக இப்படியான பொறுப்பற்ற அநியாயத் தாக்குதலானது அதைச் செய்தவர்களுக்கே பாரதூரமான எதிர்மறை விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்பது வரலாறு.

இந்த அனர்த்தத்துக்கு ரஷ்யாவும் பதில் கூறவேண்டிய இக்கட்டுக்குள் தள்ளப் பட்டுள்ளது.

காரணம் உக்ரைனில் நடைபெறும் [illegible] [illegible] இரகசியமாக விமான எதிர்ப்பு ஏவு

இந்த விமானத்தில் பிரயாணம் செய்தவர்களில் அவுஸ்திரேலிய மெல்பேர்ன் நகரில் நடைபெறவுள்ள, உலகத்தை உலுக்கும் எயிட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்கில் கலந்துகொள்ளச் சென்றுகொண்டிருந்த விஞ்ஞானிகளும் அடங்குவர். இவர்களில் சிலர் மிகப் பெரும் புத்திஜீவிகள். எத்தனையோ வருடங்களாக இரவு பகலாகத் தாம் செய்த கடும் ஆராய்ச்சியின் மூலம் கற்றுக் கொண்டதை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்த அந்த மனிதர்களையும் தற்போது உலகம் இழந்துவிட்டது.

கணைகளையும், மனித நாசகார ஆயுதங்களையும் வழங்கி, மனிதப் படுகொலைகளை ஏற்படுத்தி அமைதியைக் குழப்பியது ரஷ்யா என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

அதனடிப்படையில் , அப்பாவிப் பொது மக்கள் பயணித்த இந்த விமானத்தை சுட்டு வீழ்த்திய அறிவற்றவர்களின் கையில் ஏவுகணை கிடைப்பதற்கு காரணமானது ரஷ்யாதான் என்பதால் அடுத்து வரும் காலங்கள் மிக முக்கியமானவையாக இருக்கப் போகின்றன. தவிர இந்த அனர்த்தத்துக்கு எந்தச் சாட்டுப் போக்குச் சொல்லியும் எவரும் தப்பி விடமுடியாது.

அமெரிக்காவின் செய்மதிகளின் மூலம் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய ஏவுகணை எந்த இடத்திலிருந்து, எத்தனை மணிக்கு ஏவப்பட்டிருக்கின்றது என்பதை துல்லியமாகக் கணித்துள்ளார்கள் என்கின்றன செய்திகள்.

உக்ரைன் வான் பரப்பில் பறக்கும் போது விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் அபாயம் இருப்பதாகவும் எனவே 32,000 அடி உயரத்துக்கு மேலேயே வான்பரப்பில் பறக்கும்படியும் சர்வதேச விமான நிலையங்களுக்கு அறிவுறுத்தியிருந்தது உக்ரைன் அரசு. அதன்படி இந்த விமானத்தின் கப்டன் விமானத்தை 33.000 அடி உயரத்திலேயே செலுத்தியிருந்தார். அப்படியிருக்க எப்படி இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்பது மர்மமாகவே இருக்கின்றது.

இந்த விமானத்தில் பிரயாணம் செய்தவர்களில் அவுஸ்திரேலிய மெல்பேர்ன் நகரில் நடைபெறவுள்ள, உலகத்தை உலுக்கும் எயிட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்கில் கலந்துகொள்ளச் சென்று கொண்டிருந்த விஞ்ஞானிகளும் அடங்குவர். இவர்களில் சிலர் மிகப் பெரும் புத்திஜீவிகள், எத்தனையோ வருடங்களாக இரவு பகலாகத் தாம் செய்த கடும் ஆராய்ச்சியின் மூலம் கற்றுக் கொண்டதை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்த அந்த மனிதர்களையும் தற்போது உலகம் இழந்து விட்டது. இந்த இழப்பை ஈடு செய்வதென்பது முடியுமா? பொறுப்பற்ற, அறிவற்ற வெறியர்களால் பொறுப்பான மனித நேயங்கொண்ட ஆராய்ச்சியாளர்களும், அப்பாவிப் பிரயாணிகளும், குழந்தைகளும் கொல்லப்பட்டதற்குச் சம்பந்தப்பட்ட அறிவிலிகள் பதில் சொல்லியே தீரவேண்டும். இந்தத் தாக்குதலின் மூலம் இதுவரை கிழக்கு ஐரோப்பாவில் உக்ரைன் என்ற நாட்டில் நடைபெற்றதாக உலகம் பார்த்துக் கொண்டிருந்த உள்நாட்டுப் போர் உலக நாடுகளின் போராகக் கணிக்கப்படப் போகின்றது.

இதில் கொல்லப்பட்டவர்கள் நெதர்லாந்தைச் சேர்ந்தோர் மற்றும் ஆஸ்திரேலியா, மலேசியா, இங்கிலாந்து, ஜேர்மனி, இந்தோனேசியா, கனடா, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தோர் ஆவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன்

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

அடியவர் அல்லல் அனைத்தும் தவிர்த்தருளும் நல்லூர்க் கந்தனின் க ண்டாமணிநாதம் கணீர் கணீர் என்று அடியவர்கள் செவியில் விழுகின்றது. ஒவ்வொரு நாளும் கேட்கும் மணியோசை இன்று விடியற்காலையில் ஆனந்தப் பரவசமூட்டும் அற்புத சக்தியுடன் ஒலிப் பதற்குரிய காரணம் என்ன? நல்லையிற் கோயில் கொண்ட முருகப்பெருமா னின் மகோற் சவம் எப்போது வரும்,எப்போது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த குகன் அடியார்களின் செவிகளில் நல்லூர் அசையா மணியின் நாதம் நவசக்தியுடன் புத்துணர்ச்சியுடன் நுழைவதில் வியப்பொன்றும் இல்லை.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால் அதன் உணர்வு யாழ்ப்பாணத் தில் மாத்திரம் அல்ல, இலங்கை முழுவதிலும் மாத்திரமல்ல, கடல்கடந்து வெளியூர்களில் வதியும் யாழ்ப்பாணத்தவர்களிடம் மாத்திரமல்ல குகன் அடியார்கள் வாழும் உலகம் முழுவதிலும் காணப் படும்.



வளந்திகழ் நல்லைப் பதியிடம் கொண்டு பாரக மனைத்தும் கதி பெறும் நடனாங்காட்டிடு வள்ளல் என்பதற்கமைய.

திருவிழா நிகழுங் காலத்திலே நல்லூர்க் கோயில் பூலோக கைலாசமாகக் காட்சியளிக்கின்றது. தெரு வீதியெங்கும் புனித வீதிகளாக மாறுகின்றன. திருவிழா வேளையில் எந்த மயமும் கந்த மயமாகவே காணப்படுகின்றது.

பக்தி வெள்ளம்

எல்லாவூரிலும் சிறந்த நல்லூரில் எழுந்தருளிய கந்தவேளின் மகோற்சவம் நடைபெறும் 25 நாள்களும் விரதம் அனுஷ்டித்து திருக்கோயி லுக்குச் சென்று, அதனை வலம் வந்து , திரு விழாவில் பங்கு கொண்டு, முருகன் அருள் பெற்று வீடு திரும்பும் பக்தர்களின் தொகையை அளவிட முடியாது.

ஐயா ! முருகையா ! பன்னிரு யையுடையோனே ! மகோற்சவம் நிகழும் புனித காலத்தில் உன் திருவருள் வெள்ளம் பெருகி கரைபுரண்டு ஓடு கின்றது என்று சொல்லி உன்னடியார் அதனை பருகி பரவசமடைந்து ஆனந் தக் கூத்தாடுகின்றனரே.

முருகனே, மாயோன் மருகனே ! ஒருகைம்முகன் தம்பியே! உன்திருச் சந்தியில் வந்து நின்றால் பெரியார், சிறியார் , இளைஞர், முதியோர், கற்றார், கல்லாதோர், வறியவர், செல்வர், நல்லோர், தீயார் அதிகாரி அடிமை என்ற பேதம் ஒழிந்து யாவரும் குகனடியார் என்ற உணர்ச்சி ஊற்றெடுக்கத் தமை மறந்து உன்மீது காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி துதிக்கின் றனர்.

நல்லூர்ப் பெருமானே ! இரும்பு காந்தத்தை இழுப்பது போல உன் சந்நிதிக்கும் அடியாரை இழுத்து அவர்களை நல்லவர் களாக்கி அருள்புரிகின்றாய். இது நூதனமல்ல. உன்னுடன் சமர் புரிய வந்த சூரபன்மனையும் கொன்றருளிய அருட்கட லல்லவா நீ.

*தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமு னுற்றால்*
*தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை*
*ஆயவும் வேண்டும் கொல்லோ! அடுசமர் இந்த நாள் செய்த*
*மாயையின் மகனும்மன்றோ வரம் பிலா அருள்பெற்றுய்ந்தான்*



தினந்தோறும் உன் சந்நிதியிற் தரிசித் துத் தலைவணங்க இயலாதவர்கள் பிரதான திருவிழா நாள்களில் தேர்த் திருவிழா, தீர்த்தத்திருவிழா நாள்களி லும் வந்து வழிபடுகிறார்கள். மஹோற் சவம் நடைபெறும் காலத்தில் வெளியூர்களில் உள்ள உன் அடியார்கள் தாங்கள் வசிக்கும் ஊர்களில் இருந்து கொண்டே உனை நினைந்து விரதத்தை அனுஷ் டித்து உன்னை வழிபட்டு வருகின் றார்கள்.

மனத்தகத்தனாக எல்லாருடைய உள்ளமாகிய பெருங் கோயிலில் வியாபகமாய் இருக்கும் புதுமையையறியாதார் யார்? நல்லை வாழ் ஆறுமுருகனின் திருச்சந்நிதியிலும் கோயில் வீதியிலும் அடியார் செய்யும் வழிபாடு அற்புதமானது. காவடி எடுப்பர், சிலர்ப் பாவடி தொடுப்பர்; பசியடக்கியொரு முக்காலமு மிருப்பர் சிலர்; வேல! முருகப்ப பிணி காயென உரைப்பர் சிலபேர்; சேவடி துதிப்பர் சிலர்; சாமரை எடுப்பர் சிலபேர்; தீப நிரை வைப்பர் சிலர்; தூபமுறை யுய்ப்பர் சிலர்; சீரமுதளிப்பர் சிலபேர்; நாவடி படப் பிறவி வெரறு கடக்கருணை நாமமதிசைப்பர் சிலர் என்று பக்தர்கள் புரியும் தொண்டுகளைப் படம்பிடித்துக் காட்டுகிறார் முருக பக்தியில் திளைத்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர். அவர் தாம் பாடிய நல்லூர்க் கந்தர் பதிகத்தில், நல்லை ஆறு மாமுகன் அருட்சந்நிதியில் வந்த பேர்கள் எவ்வகையான அருளைப் பெறுகிறார்கள். என்று விவரிக்கிறார்.



தில்லை நடராசனருள் சேயேயு னற்புதத்
திருமுன்றில் வந்த பேர்கள்
தீராத பிணிதீர்வ ரோரா யிரம்பிறவி
செய்தபா வங்களொழிவார்
எல்லையில் லாவின்ப மெய்துவார் மலடிமார்
இனியமக வீன் றெடுப்பார்
இரு கணுங் குருடான பேர்கள் வாழ் விழிபெறுவ
ரில்லார் இராசராவர்
சொல்லையறி யாமூடர் ஞானப்ர சங்கமழை
சொரிவர்நாள் கோள் துயர்கெடும்
துன்மரண மகலுமா லன்னுடைய பழவினைத்
தொடர்பறா வகையென் னையோ
வல்லையெனையாளவுன் மனமினி யிரங்குவாய்
வளமேவு நல்லை நகர் வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக் கடவுளே.

என்று பாடியுருகுகின்றார் சோமசுந்தரப் புலவர் முருகன் அருளால் கிட்டும் நற்பயனை விவரித்துள்ளார்.

## நல்லூரில் யாவும் பெறலாம்

நல்லூரில் கொடியேறினால்
நாடு நலம் பெறுமென்று,
நம்முன்னோர் சொன்ன வாக்கு,
நாளும் பலிக்கட்டும்,

நல்லூரில், கொடியேறினால்
நான் என்ற ஆணவம்,
நம்மை விட்டோட வேண்டும்,
நாம் எளிதாக வேண்டும்,

நல்லூரில் கொடியேறினால்
நமக்கு எதுவேண்டுமோ அதை
நேர்த்தியாகப் பெறலாம்
நம்பிக்கையோடு வழிபடு

*கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்*

## ஏறுது பார் கொடி



ஏறுது பார் கொடி ஏறுதுபார்
எங்கள் அப்பன் வேலனுக்கு
ஏறுது பார் கொடி ஏறுதுபார்

ஆடுது பார் மயில் ஆடுது பார்
ஆறுமுகா ஆறுமுகா என்று
ஆடுது பார்மயில் ஆடுது பார்

கூவுது பார் சேவல் கூவுதுபார்
குகனே குகனே என்று
கூவுது சேவல் கூவுதுபார்

ஏறுகிறார் முருகன் ஏறுகிறார்
வள்ளி தெய்வானையுடன் இன்று
ஏறுகிறார் கொடியில் ஏறுகிறார்

கூடுது பார் சனம் கூடுதுபார்
கண்கொளாக் காட்சி காண
கூடுத பார் சனம் கூடுது பார்

கந்தன் கருணை நமக்குண்டு
நம்பு மனமே நம்பு மனமே
இடர் யாவும் தீருமென நம்பு மனமே

*திருமதி செங்கமலம் தர்மபாலசிங்கம்*
*வட்டுக்கோட்டை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: வாழ்க்கை துணையின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்துக்கு உதவும். எதிர்பாராமல் ஏற்படும் குடும்பச் செலவைச் சமாளிக்கத் தேவையான பண உதவி கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் தேவையான உதவிகளும் கிடைக்க பெறுவீர்கள்.



**இடபம்**: அடுத்தவர்களுக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்வது நல்லது. கல்வியில் வெற்றி பெற ஆசிரியர்களின் ஆலோசனையைக் கேட்டுப் பயன் பெறுவது நல்லது. முயற்சிகள் வெற்றி பெறும்.



**மிதுனம்**: அறிவுத் திறன் கூடும். இனிமையான பேச்சின் மூலம் பலரது உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். செல்வம் சேரும். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான போக்குக் காணப்படும். எதிர்ப்புகள் அகலும். உங்கள் செயல்களுக்கு இருந்த தடை நீங்கும்.



**கடகம்**: தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பலவகை முன்னேற்றங்களும் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமையும் சாமர்த்தியமும் உண்டாகும்.



**சிங்கம்**: உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். மற்றவர்களுக்காகப் பரிந்து பேசும் போதும், அவர்களுக்கு உதவிகள் செய்யும் போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.



**கன்னி**: அறிவுத் திறமை அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி கிடைக்கும். திறமையாகச் செயற்பட்டு பாராட்டுகள் கிடைக்கப் பெறுவீர்கள். மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.



**துலாம்**: எல்லாக் காரியங்களும் முன்னேற்றமாக நடக்கும். திறமை வெளிப்படும். பலவகையிலும் முன்னேற்றம் உண்டாகும். சொத்து தொடர்பான விடயங்களில் இழுபறியான நிலை காணப்படும். இடமாற்றம் உண்டாகும்.



**விருச்சிகம்**: தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதமான போக்குக் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணம் செல்ல வேண்டி இருக்கும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, இடமாற்றம் தாமதப்படலாம்.



**தனுசு**: எந்த ஒரு விடயத்திலும் ஈடுபடும் முன்பு தயக்கம் ஏற்பட்டு பின்னர் தெளிவு உண்டாகும். குடும்பத்தில் தீடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குழந்தைகளுக்கான பொருள்களை வாங்குவீர்கள்.



**மகரம்**: இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். புதிய தொடர்புகளால் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். இடமாற்றம் ஏற்படலாம். திறமை வெளிப்படும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதன் மூலம் நன்மை ஏற்படும்.



**கும்பம்**: முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் அதனால் கௌரவம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விடக் கூடுதல் இலாபம் கிடைக்கும். வாங்கிய கடனைத் திருப்பி செலுத்தி மன நிம்மதி அடைவீர்கள்.



**மீனம்**: தொழில் தொடர்பான பயணங்கள் வெற்றி கிடைக்கும். செயல் திறமை மூலம் கடினமான பணியையும் சிறப்பாகச் செய்து முடித்து மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கப் பெறுவீர்கள். அதிகாரம் செய்யும் பதவிகள் தேடிவரும்.

## நாளை

**ஆடி-17 சனிக்கிழமை | 02.08.2014**

திதி: ஷஷ்டி பி.ப.01.38 வரை
நட்சத்திரம்: சித்திரை முழுவதும்

சுபநேரம்: 03.03-04.33 வரை
இராகுகாலம்: 09.03-10.33 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## நாமே மிகப் பெரிய ஆலயம்

காட்சி ஒன்றுதான் நமக்கு ஞானமாகஅல்லது உண்மை மதமாக இருக்கிறது. ஆன்மாவைப் பற்றி கா்லங்காலமாகப் பேசிக் கொண்டிருப்பதால் அதை நாம் அறிய முடியாது. வெறும் கொள்கைகளைப் பேசுவதற்கும் நாத்திகத்துக்கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லை. உண்மையில் நாத்திகனே நேர்மையானவன் எனலாம். வெளிச்சத்தில் நான் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் எப்போதும்எனக்குச்சொந்தமாகிறது. ஒரு நாட்டைச் சென்று பார்த் தால் பிறகு அது உன்னுடையதாகி விடுகிறது. நாம் ஒவ்வொருவரும் சுய அனுபவத்தைப் பெற வேண் டும். ஆசிரியர் உனக்கு உணவைத்தான் தர முடியும்; அதை உண்டு செமிபாடு அடைய வைப்பது உன் வேலை. தர்க்க ரீதியில் ஒரு முடிவுக்கு வருவதற்கு வாக்கு வாதங்கள் உதவுமே தவிர, கடவுளைக் காண ஒரு போதும் அவை பயன்படா. நமக்கு வெளியில் கடவுளைக் காண முடியாது. புறத்தே இருப்பவை அனைத்துக்கும் தெய்வீக இயல்புகளை, நமது ஆத்ம சொரூபமே கொடுக்கிறது. நாமே மிகப்பெரிய ஆலயம். புறத்தே நாம்காணும்கோயில்அகத்தே இருக்கும்கோயிலின்மங்கிய ஒரு சாயல்தான்.

நமது மனதின் ஆற்றலை ஒருமுகப்படுத்துவதே நாம் கடவுளைக் காணத் துணை செய்யும் ஒரு கருவியாகும். (உனது சொந்த) ஆன்மாவை நீ தெரிந்து கொள்ளமுடியுமானால் இறந்தகாலம். நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய காலங்களுக்கு உரிய எல்லா ஆன்மாக்களையும் உன்னால் தெரிந்து கொள்ள முடியும். சங்கற்பம் மனத்தை ஒருமுகப்படுத்துகிறது. அறிவு, அன்பு, பக்தி, பிராணாயாமம் போன்றவை சங்கற்ப சக்திக்கு ஊக்கம் கொடுத்து, அதைக் கட்டுப்பாட் டுக்குள் வைக்கின்றன. ஒருமுகப்படுத்தப்பட்ட மனம், தீபம் போன்றது. அந்தத் தீபத்தின் துணை கொண்டுநமது ஆன்மாவின் மூலைமுடுக்குகளை எல்லாம் நம்மால் தெரிந்து கொள்ள முடியும்.

# புவி வெப்பமயமாதலை தடுக்கும் எறும்புகள்



புவி வெப்பமயமாதல், இன்று உலகையே அச்சுறுத்தி வருகிறது.

அதைத் தடுக்க உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகள் போராடி வருகின்றனர்.

அவ் வாறு இருக்கையில் எமது காலடியில் நடமாடும் எறும்புகள், புவி வெப்பமயமாதலைத் தடுத்து புவியைக் குளிர வைப்பதாக அமெரிக்காவில் அரிசோனா மாநில பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

எறும்புகள், மண் ணில் உள்ள கல்சியம், மக்னீ சியம் சார்ந்த மணற் சத்துகளைச் சிதைக்கின்றன.

இதனால், காற்றில் கலந்துள்ள காபன்டைஒக்சைட் படிப்படியாகக் குறைகிறது. இதன் மூலம் புவி வெப்பமயமாதல் குறைந்து, புவி குளிரும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | 1 | 2 | | 9 | 3 |
| | | | 9 | | 4 | 7 | | |
| | | | | 6 | | | 1 | |
| | | 3 | | | | | 4 | 5 |
| | 5 | 1 | 6 | 2 | 3 | 8 | 7 | |
| 2 | 9 | | | | | 6 | | |
| | 7 | | | 4 | | | | |
| | | 5 | 2 | | 1 | | | |
| 1 | 3 | | 7 | 8 | 6 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 6 | 1 | 7 | 2 | 8 | 5 | 3 |
| 8 | 7 | 3 | 9 | 6 | 5 | 1 | 2 | 4 |
| 2 | 1 | 5 | 3 | 8 | 4 | 6 | 9 | 7 |
| 6 | 3 | 8 | 4 | 5 | 7 | 9 | 1 | 2 |
| 1 | 5 | 7 | 2 | 3 | 9 | 4 | 8 | 6 |
| 9 | 2 | 4 | 8 | 1 | 6 | 7 | 3 | 5 |
| 5 | 6 | 1 | 7 | 9 | 3 | 2 | 4 | 8 |
| 7 | 8 | 2 | 5 | 4 | 1 | 3 | 6 | 9 |
| 3 | 4 | 9 | 6 | 2 | 8 | 5 | 7 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இந்து மாணவி சுவட்டு நிகழ்வில் சாதனை

கிளிநொச்சி, ஒக 1
இந்த வருடம் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி செல்வி கிருஸ்ண ராசா ஷகிதா இரு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண் டார்.


கிருஸ்ண ராசா ஷகிதா

இவர் 21 வயது பெண்களுக்கான 400 மீற்றர் சட்ட வேலி ஓட்டத்தை 1 நிமிடம் 13 செக்கன் 3வினாடிகளிலும் , 400 மீற்றர் ஓட்டத்தை 1 நிமிடம் 6 செக்கன் 1 வினாடியில் நிறைவு செய்து தங்கப்பதக்கங்களையும், 200 மீற்றர் ஓட்ட நிகழ்வை 29 செக்கன் 5 வினாடியிலும் நிறைவு செய்து வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டதுடன் 21 வயதுப்பிரிவு பெண்களுக்கான சுவட்டு நிகழ்ச்சியின் சிறந்த வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
இவரை அண்மையில் இந்தக் கல்லூரிச் சமூகம் அவரை பெற்றோர் சகிதம் அழைத்து பாராட்டி கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்ற தென்பது குறிப்பிடத்தக்கது. (த)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக 1
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:- பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## யாழ்.பல்கலைக்கழக அணி இறுதியாட்டத்துக்கு தகுதி

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

## தாச்சிப் போட்டியில் இன்று

யாழ்ப்பாணம் ஒக1
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 18 ஆவது தாச்சி சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன.
[illegible]று வெள்ளிக்கிழமை இடம் பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-
மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழகஅணி மோதவுள்ளது. (த-23)

## இளவாலை ஹென்றியரசர் கல்லூரி உதைபந்தாட்ட வீரர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக 1
கொழும்பு ஆனந்தாக் கல்லூரியினால் தேசிய மட்ட 17 வயதுப்பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சம்பியனாகிய இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வீரர்கள் நேற்று வியாழக்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.
சாம் சமரசிங்க ஞாபகார்த்தமாக, அணிக்கு 7 பேர் கொண்ட போட்டிகளாக நடைபெற்ற மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் பொலநறுவை றோயல் மத்திய கல்லூரி அணியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின.
இதில், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
மேற்படி சுற்றுப்போட்டி ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்கள் ஆன நிலையில், முதல்முறையாக இவ்வருடம் வடமாகாணத்தைச் சேர்ந்த அணி யாக இளவாலை ஹென்றி யரசர் அணி சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில், சம்பியனாகிய வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வியாழக் கிழமை இடம்பெற்றது.
இதன்போது, அணி வீரர்கள் தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து ஊர்வலமாக இளவாலையில் அமைந்துள்ள கல்லூரி வரை அழைத்து வரப்பட்டனர்.
இதில், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (த-86)

## றோயல், றேஞ்சர்ஸ் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக 1
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ச் சுற்றுப்போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் சென்.சேவியர் விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத் தில் றோயல் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
கழுகுகள் விளையாட்டுக்கழக அணிக்கும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கம் இடையிலான ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## ஜெகமீட்பர் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது பள்ளிமுனை லூட்சியா

யாழ்ப்பாணம், ஒக.1
வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழவை முன்னீட்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
முதற்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் போடுவதற்குக்கடுமையாகப் போராடி கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். ஆனால் அவர்களால் கோல் பெறமுடிய வில்லை இதனால் முதற்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவ டைந்தது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணிகளும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தின. இதன் போது ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணி வீரன் உதயாதனக்கு கிடைந்த பந்தினை தலையால் முட்டி முதலாவது கோலை அடித்தார். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழக அணியினரும் தமது அணிக்காகக் கோல் போட எதிர் அணியின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். ஆயினும் கோல் பெற முடியவில்லை. ஆட்டநேர முடிவில் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (த-23)



## 19 வயது ஆண்,பெண் பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக1
வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டிகளில் பெண்களுக்கான போட்டி சுண்டுக்குழி மகளிர் கல்லூரி பூப்பந்தாட்ட திடலிலும், ஆண்களுக்கான போட்டி யாழ். பல்கலைக்கழகம், விக்டோறியா வீதியில் அமைந்துள்ள பூப்பந்தாட்டத்திடல் ஆகிய இடங்களிலும் இடம் பெறவுள்ளது எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

## வடக்கு-கிழக்கு அணிகள் மோதும் பூப்பந்தாட்டம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பா[illegible]ணம், ஒக 1
வடமாக[illegible]ண கல்வி பண்பட்டலுவ[illegible]கள் விளையாட்டுத் துறை [illegible]றும் இளைஞர் விவகா[illegible] அமைச்சும் வடமாகாண[illegible]ப்பந்தாட்டச் சங்கமும் [illegible]ணைந்து நடத்தும் வடக்கு[illegible]க்கு மாகாணங்களுக்கு[illegible]டயிலான பூப்பந்தாட்டச்[illegible]றுப்போட்டியின் ஆரம்ப[illegible]ழ்வுகள் நேற்றுக் காலை [illegible]ண்டுக்குழி மகளிர் கல்லூரி[illegible]பந்தாட்டத் திடலில் இடம்பெ[illegible]ன.
பூப்பந்த[illegible]ச் சுற்றுப் போட்டிக்கு அ[illegible]ரனை வழங்கும் லினிங்[illegible]னத்தினால் ஒரு தொகுதி[illegible]பந்தாட்ட உபகரணங்க[illegible]ழங்கப்பட்டன.
அதனை[illegible]ந்த நிறுவனத்தின் விற்பனை[illegible]முகவர் கஜன் பெர்னாண்டோ வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவிடம் கையளித்தார். (த-23)



## கா[illegible]லிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பா[illegible]ணம் ஒக1
சாவற்க[illegible] மகாத்மா விளையாட்டுக்[illegible]கம் சனசமூக நிலையமும் இ[illegible]ணைந்து நடத்தும் 5 பேர் பா[illegible] பற்றும் உதைபந்தாட்டச் [illegible]றுப்போட்டித் தொடரின் ஆ[illegible]ங்கள் சாவற்கட்டு மகாத்ம[illegible] விளையாட்டுக்கழக மைதா[illegible]த்தில் இடம் பெற்று வருகின்[illegible]ன.
மேற்படி சுற்றுப்போட்டித் தொடரின் காலிறுதியாட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணிக்[illegible] விளை[illegible] இடையிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணிக்கும் தாவடி காளியம்பாள் [illegible] அணிக்[illegible] இடையிலான ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
ஊரெழு றோயல் விளையா[illegible]டுக்கழக அணிக்கும் இ[illegible]வாலை யங்ஹென்றிஸ் விளை[illegible]யாட்டுக்கழக அணிக்கு[illegible] இடையிலான ஆட்டத்தி[illegible] ஊரெழு றோயல் விளையா[illegible]டுக்கழக அணி 2:1 என்[illegible] கோல் கணக்கில் வெற்[illegible] பெற்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விரைவில் குணமடைவேன்

விரைவில் குணமடைந்து அணியில் இணைவேன் என்று நெய்மர் கூறியுள்ளார்.

விளம்பர நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள ஜப்பான் சென்ற பிரேசில் உதைபந்து நட்சத்திரம் நெய்மரை காண ரசிகர்கள் குழுமியதால் அங்கு சிறிது சலசலப்பு ஏற்பட்டது.

சுமார் 700 ரசிகர்கள் நெய்மர் பெயரைக் கூச்சலிட்டபடி அவரை நோக்கி கையை அசைத்தனர். ஆனால் அவர் தொலைக்காட்சி ஸ்டுடியோ ஒன்றிற்கு விரைந்தார். அங்கு அவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த நெய்மர் கூறுகையில். என்னுடைய முதுகுக் காயம் குணமடைந்து வருகிறது. விரைவில் அணி வீரர்களுடன் இணைவேன்.

புனர்வாழ்வுச் சிகிச்சையை விரைவில் முடித்து 100 வீத உடற் தகுதியை விரைவில் எட்டுவேன். அடுத்த சீசனில் முழு உத்வேகத்துடன் களமிறங்குவேன்.

ஐரோப்பாவில் விளையாடுவது எப்போதும் என் கனவாகவே இருந்து வந்துள்ளது. இங்கும் நிறைய வெற்றிகளைக் குவிக்கவே விரும்புகிறேன்.

நான் உலகின் தலைசிறந்த வீரராக விரும்புகிறேன் என்பதை விட பிரேசில் வெற்றி பெற உதவும் ஒரு சிறந்த வீரராகவே இருக்க விரும்புகிறேன் என்று கூறிய நெய்மரிடம் ஜப்பானியப் பெண்கள் எப்படி என்று கேட்டதற்கு, ஜப்பானியப் பெண்கள் அழகாகவே இருக்கின்றனர். ஆனால் நான் ஒரு பிரேசில் நாட்டுக்காரன். எனவே பிரேசில் பெண்களைத்தான் எனக்குப் பிடிக்கும் என்று பதில் கூறியுள்ளார்.

(த)

# மீண்டும் வம்புக்கு இழுக்கும் அண்டர்சன்

ஜடேஜாவைத் தள்ளிவிட்ட புகார் மீதான விசாரணை இன்று நடைபெறவுள்ள நிலையில் நேற்று முன்தினம் ஆட்ட முடிவில் ஜேம்ஸ் அண்டர்சன், இந்திய வீரர் ரஹானேவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

ரோகித் சர்மாவுக்கு வீசிய ஒரு பந்தை அவர் அடிக்க அது அண்டர்சனிடம் பிடிக்கும் உயரத்தில் வந்தது ஆனால் அண்டர்சன் பிடியைக் கோட்டைவிட்டார்.

இதே போன்ற பிடியை அவர் லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியில் ரஹானேயிற்குப் பிடித்தார். இதனால் அவர் பெரும் ஏமாற்றமடைந்தார்.

பிறகு கடைசி ஓவரை அண்டர்சன் வீசி முடித்த பிறகே மேற்கூறிய சம்பவம் நிகழ்ந்தது.

கடைசி பந்தை அண்டர்சன் வீசி முடித்து அனைவரும் பவிலியன் செல்லத் தயாரான போது அண்டர்சன் ரஹானேயை நோக்கி சில வார்த்தைகளைப் பிரயோகி[illegible]தார். உடனே ரஹானேயும் கோ[illegible]மாக ஏதோ பேசினார். ஆனால் நடுவர் தலையிடப் பிரச்சினை முடிந்தது.

ஆனாலும் அண்டர்சனின் இந்த நடத்தை இன்று அவருக்கு எதிரான புகாரில் நிச்சயம் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(த)



# கிரிக்கெட் சபை அதிகாரி என்னை பழி வாங்குகிறார்

இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரியொருவர் நான் அணித் தலைவராக செயற்பட்ட காலம் முதல் தனிப்பட்ட முன்விரோதம் மற்றும் பழிவாங்கல் காரணமாக தன்னைத் தொந்தரவு செய்துவருவதாக இலங்கை அ[illegible]ன் முன்னாள் அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரில் உள்ளூர் அணிக்காக விளையாடாமல் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாட லசித் மலிங்க எடுத்த தீர்மானத்திற்கு இலங்கை கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்துள்ளமை மூலம் இது தெளிவாக புலப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் கடந்த முறை.ஹைதராபாத் அணிக்காக விளையாட தான் விரும்பிய போதிலும் தன்னுடைய விடயத்தில் கிரிக்கெட் சபையின் ஒரு அதிகாரியின் அழுத்தம் காரணமாக தனக்கு மட்டும் அணி மாறி விளையாட அனுமதிக்கவில்லை என சங்கக்கார ஆதங்கப்பட்டுள்ளார்.

இதனால் தான் பெரும் மன அழுத்தத்திற்கு உள்ளானதாகவும் லசித் மலிங்க எடுத்த தீர்மானம் சரியானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(த)

# பெண்கள் 400 மீற்றர் ஜமெய்க்கா ஆதிக்கம்

கிளாஸ்கோவில் நடைபெற்றுவரும் 20ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை ஜமெய்க்கா வீராங்கனைகள் சுவீகரித்தனர்.

ஸ்டெபானி மெக்பேர்சன் இப் போட்டித் தூரத்தை 50.67 செக்கன்களில் நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

அவரது சக நாட்டவர்களான நோவ்லின் வில்லியம்ஸ் மில்ஸ் (50.86 செக.), க்றிஸ்டின் டே (51.09 செக.) ஆகிய இருவரும் முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

முப்பாய்ச்சலில் ஜமெய்க்காவின் கிம்பர்லி வில்லியம்ஸ் 14.21 தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார். இங்கிலாந்தின் லோரா சமுவெல் 14.09 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் டுபாகோ அண்ட் ட்ரினிடாடின் அயன்னா அலெக்ஸாண்டர் 14.01 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.


ஆண்களுக்கான சம்மட்டி எறிதலில் கனடாவின் ஜே. ஸ்டெசி, 100 மீற்றர் சட்டவேலி ஓட்டப் போட்டியில் ஜமெய்க்காவின் [illegible]ரைலி, பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியி[illegible] கெய்த் செப்னெட்டிக் கிபிகொன் ஆகியோர் தங்கப் பதக்கங்களை சுவீகரித்தனர்.

(த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோர்ட்ஸ் டெஸ்ட் தோல்விக்கு பதிலடி கொடுத்தது இங்கிலாந்து



லோர்ட்ஸ் டெஸ்டில் அடைந்த தோல்விக்கு சவுத்தம்ரனில் நடந்த மூன்றாவது ஆட்டத்தை வென்று இந்திய அணிக்கு பதிலடி கொடுத்தது இங்கிலாந்து. சவுத்தம்ரனில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றிருந்த இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் தடுமாறி வந்த அலெஸ்டயர் குக் 95 ஓட்டங்களையும், பலன்ஸ் 156 ஓட்டங்களையும், இயன் பெல் 167 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 7 இலக்குகளை இழந்து 569 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இந்திய அணியில் புவனேஸ்குமார் 3 இலக்குகளையும், ஜடேஜா இரண்டு இலக்குகளையும், ரோகித் சர்மா, மொகமட் சமி ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

தனது முதல் இன்னிங்ஸில் களமிறங்கிய இந்திய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அவ்வணி சார்பாக ரகானே 54 ஓட்டங்களையும், அணித்தலைவர் டோனி 50 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் இங்கிலாந்தின் அன்டர்சன் 5 இலக்குகளையும், ப்ரோட் 3 இலக்குகளையும், மொயீன் அலி 2 இலக்குளையும் கைப்பற்றினர்.

பலோ-ஒன் நிலையில் இந்திய அணி இருந்தபோதும், இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட இங்கிலாந்து அணித்தலைவர் குக் தீர்மானித்தார். குக் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும், ரூட் 56 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து 4 இலக்குகளை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்று இன்னிங்ஸை இடைநிறுத்தியது. ஜடேஜா 3 இலக்குகளையும் புவனேஸ்குமார் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

445 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் அனைத்து இலக்குகளையும் இழந்து 178 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொள்ள இங்கிலாந்துஅணி 266 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்று லோரட்ஸ் டெஸ்டில் இந்திய அணியிடம் அடைந்த தோல்விக்கு தக்க பதிலடி கொடுத்தது. ரகானே மாத்திரம் தனிமனிதனாக நின்று போராடி இறுதிவரை ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். இந்திய துடுப்பாட்ட வீரர்களை தனது சுழலில் சிக்க வைத்த மொயின் அலி 6 இலக்குகளையும், அன்டர் சன் 2 இலக்குகளையும், ரூட் ஒரு இலக்கினையும் கைப்பற்றிக் கொண்டனர். ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவானார். 5ஆட்டங்களைக் கொண்ட இத் தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு ஆட்டத்தை வென்றுள்ளன. இவ் அணிகளுக்கிடையிலான அடுத்த ஆட்டம் எதிர்வரும் 7ம் திகதி மாஞ்செஸ்டர் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

# சம்பியன் லீக்கில் சந்தீப் சர்மா இல்லை



ஐ.பி.எல். போட்டிகளில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடிவரும் சந்தீப் சர்மா காயம் காரணமாக செப்ரெம்பரில் நடைபெறவுள்ள சம்பியன் லீக் 20/20 ஆட்டங்களில் விளையாட மாட்டார் எனத் தெரியவருகிறது.

தற்போது ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் தொடர் ஒன்றில் இந்திய ஏ அணிக்காக விளையாடிவரும் சந்தீப் சர்மா அத் தொடரில் நடைபெற்ற ஆட்டமொன்றில் காயமடைந்தார்.சந்தீப் சர்மா காயம் காரணமாக சாம்பியன் லீக் 20/20 ஆட்டங்களில் பங்குபற்றமாட்டார் என பஞ்சாப் அணியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி பிராசர் கஸ்ரலினோ தெரிவித்தார்.சந்தீப் சர்மா விளையாடவிருந்த முதலாவது சாம்பியன் லீக் தொடர் இதுவாகும்.

இவ் வருடம் நடைபெற்ற 7ஆவது ஐ.பி.எல் தொடரில் பஞ்சாப் அணி இறுதிப்போட்டி வரை முன்னேறி அந்தப் போட்டியில் கொல்கத்தா அணியிடம் தோல்வியுற்றிருந்தது. அதில் பஞ்சாப் அணிக்காக விளையாடிய சந்தீப் சர்மா மிகச் சிறப்பாக பந்து வீசியிருந்ததுடன், 11ஆட்டங்களில் 18 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். இவரே அவ்வணி சார்பாக கூடிய இலக்குகளை வீழத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# நான்காவது டெஸ்டிலும் இசாந்த் இல்லை



கணுக்காலில் ஏற்பட்டிருந்த காயம் காரணமாக 3வது டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற் றாத இசாந்த் சர்மா 4வது ஆட்டத்திலும் ஆட மாட்டார் என இந்திய அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக நேற்று முடிவடைந்த 3வது டெஸ்ட் போட்டியில் இசாந்த் சர்மா விளையாடியிருக்க வில்லை என்பதுடன் இவ் ஆட்டத்தில் இந்திய அணி படுதோல்வியை அடைந்தது. இந்த ஆட்டத்தின் பரிசு வழங்கும் நிகழ்வில் ஆட்டம் பற்றி கருத்துத் தெரிவித்த மகேந்திர சிங் டோனி 4வது போட்டியிலும் இசாந்த் சர்மா விளையாட மாட்டார் என அறிவித்தார்.

இசாந்த் சர்மா அடுத்த ஆட்ட த்தில் பங்குபற்றுவதற்கான நிலைக்கு இன்னமும் குணமடைய வில்லை என எமது அணியின் உடற் சிகிச்சை நிபுணர் தெரிவித்திருப்பதாக அவர் கூறினார்.

லோர்ட்ஸில் நடைபெற்ற 2வது டெஸ்டில் இந்திய அணியின் வெற்றிக்கு இறுதி நேரத்தில் காரணமாக இருந்தவர் இசாந்த் சர்மா என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏமாற்றிய பங்கஜ் சிங்



சவுதம்ரனில் நடைபெற்ற 3வது டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகமாகிய இந்திய வேகப் பந்து வீச்சாளர் பங்கஜ் சிங் இரு இனிங்ஸ்களிலும் இலக்குகளைக் கைப்பற்றாமல் ஏமாற்றியுள்ளார. காயம் காரணமாக இசாந்த் சர்மா விளையாடாத நிலையில் அறிமுக ஆட்டத்தில் விளையாடுவதற்கு பங்கஜ் சிங்கிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

29 வயதான பங்கஜ் சிங் 77 முதல் தர ஆட்டங்களில் விளையாடி 300 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். ஆனால் இவரது முதல் சர்வதேச ஆட்டத்தில் இலக்கு எதனையும் கைப்பற்றாமல் ஏமாற்றமடைந்துள்ளார். அது மட்டுமல்லாது இவ் ஆட்டத்தில் மொத்தமாக 179 ஓட்டங்களை விட்டும் கொடுத்துள்ளார்.

இதற்கு முன்பு பாகிஸ்தானின் சொஹைல்கான் தனது முதல் டெஸ்ட் போட்டியின்போது இலக்கு எதனையும் கைப்பற்றாமல் 164 ஓட்டங்களைக் விட்டுக் கொடுத்தமையே மோசமான பதிவாக இருந்து வந்தது. அதனை தற்போது பங்கஜ் சிங் முறியடித்துள்ளார். ஆனால் பங்கஜ் சிங்கின் பந்து வீச்சை பல முன்னாள் இந்திய வீரர்கள் பாராட்டியுள்ளனர். பங்கஜ் சிங் சிறப்பாகவே பந்து வீசுவதாகவும், இலக்குகளை வீழ்த்த முடியாமல் போனமை துரதிர்ஷ்டவசம் என்று அவர்கள் கூறியுள்ளனர். இவ் ஆட்டத்தின் முதலாவது நாளில் பங்கஜ் சிங் வீசிய பந்தை எதிரகொண்ட அலெஸ்டயர் குக்கின் பிடியெடுப்பு ஒன்றை ஜடேஜா தவற விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரவீந்திர ஜடேஜா மீள் முறையீடு



இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா, ஜேம்ஸ் அன்டர்சன் மோதலில் ஜடேஜா தரம் 01 இற்கான குற்றத்தின், கீழ் போட்டி ஊதியத்தில் இருந்து 50 சதவீதத்தை அபராதமாகக் கட்டவேண்டும் என போட்டி மத்தியஸ்தர் டேவிட் பூன் தீர்ப்பு வழங்கி இருந்தார்.

தரம் 01 இற்கான குற்றத்திற்கு மீள் முறையீடு செய்ய முடியாதபோதும் இந்த சம்பவத்துக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு, சர்வதேசக் கிரிக்கெட் சபை மீள் முறையீடு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

இங்கிலாந்து அணி முகாமைத்துவம் தரம் 02 இற்கான குற்றத்தை ஜடேஜா புரிந்துள்ளார் என முறையீடு செய்தது. இருப்பினும் போட்டி மத்தியஸ்தர் டேவிட் பூன் ஜடேஜா தரம் 01 இற்கான குற்றத்தையே புரிந்துள்ளார் எனத் தீர்ப்பு வழங்கி இருந்தார். ஆனாலும் ஜடேஜா குற்றமே செய்யவில்லை என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்தே இந்த மீள் முறையீட்டை கோரி இருந்தது. அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் நேற்று ஜேம்ஸ் அன்டர்சனின் விசாரணை நடைபெற இருந்த அதே வேளையிலேயே ஜடேஜாவின் விசாரணையும் நடைபெற இருந்தது.

இந்த விசாரணைக்கு ரவீந்திர ஜடேஜா, இந்திய அணித் தலைவர் டோனி, பயிற்றுவிப்பாளர் டங்கன் பிளெட்சர், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சட்ட ஆலோசகர் ஆகியோர் இந்தியா அணி சார்பாக கலந்து கொள்ளவிருந்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி.) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளதாகவும், வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 20 ரூபா செலுத்தப்பட வேண்டும் எனவும் யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இன்று 1 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை ஆரம்ப பராமரிப்பு சிகிச்சை நிலையம், சுவாமியார் வீதியிலும், மு.ப.11.30 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை பொன்மணிக் களஞ்சியம், வளன்புரத்திலும்–

நாளை 2 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை பாலர் பாடசாலை, நெடுங்குளத்திலும், மு.ப.11.30மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை வசந்தபுரத்திலும்–

எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணிவரை சனசமூக நிலையம் கொழும்புத்துறையிலும், மு.ப.11.30 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை மகேந்திரபுரத்திலும்–

எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை சென்.மேரிஸ் தேவாலயம், ஏ.வி.றோட்டிலும், மு.ப.11.30 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணி வரை புளியடி, இலந்தைக் குளம் வீதியிலும்–

எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை பாசையூர் சனசமூக நிலையத்திலும், மு.ப.11.30மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை புதுக்குடியிருப்பு, பாசையூரிலும்– எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை மகப்பேற்று நிலையம் பாசையூரிலும், மு.ப.11.30மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திலும்–

எதிர்வரும் 8 திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை பாற்குளம் சனசமூக நிலையம் கொய்யாத்தோட்டத்திலும், மு.ப. 11.30மணி தொடக்கம் பி.ப. 1.30 மணி வரை கொய்யத்தோட்டம் சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தாலிக்கொடி அபகரிப்பு

வரணி, ஓக.1

குடும்பப் பெண் ஒரு வரின் கைப்பையில் கொண்டு செல்லப்பட்ட தாலிக்கொடியொன்று வீதியில்வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவரால் பறித்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வரணி, இடைக் குறிச்சி பகுதியில் இடம்பெற்றது.

குறித்த பெண் தனது தாலிக்கொடியை சிறு திருத்தம் செய்வதற்காக தனது கைப்பையில் வைத்துக் கொண்டு வரணி, குடத்தனை வீதியால் சென்றவேளை அந்த வழியால் மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவர் குறித்த பெண்ணைக் கடந்து சென்றதாகவும், பின்னர் திரும்பி வந்த அவர் பெண்ணின் கையிலிருந்த பையைப் பறித்துக் கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாலிக்கொடி 5 பவுண் மதிப்புடையது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-122)

"தம்முடைய பிள்ளைகளை நமது பரலோக பிதாவின் கரங்கள் ஒரு நாள் அணைத்துக் கொள்ளும்"

51 ஆம் நாள் நன்றி செலுத்தும் வழிபாடு



அமரர்
சிறீஸ்கந்தராசா கிருபைராஜ் கஜன்

04 செப்ரெம்பர் 1987-
14 ஜூன் 2014

கடந்த 14.06.2014 ஆம் திகதி கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்புப் பிள்ளையின் இவ்வுலக வாழ்வுக்காக ஆண்ட வருக்கு நன்றி செலுத்தும் வழிபாடு எதிர்வரும் 03.08.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெற வுள்ளது. இவ் வழிபாட்டிலும், அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி தங்களை அன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

நன்றி தெரிவிப்பு

அமரர் சிறீஸ்கந்தராசா கிருபைராஜ் கஜன் அவர்களின் குடும்பத்தினராகிய நாம் எமது அன்புப் பிள்ளையின் மறைவுச் செய்தி அறிந்து எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும், தொலைபேசி வாயிலாகவும், ஆறுதல் கடிதங்கள் வாயிலாகவும் துயர் பகிர்ந் தோருக்கும், அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும், எம்மை ஜெபத்தில் தாங்கியவர்களுக்கும் இன்னும் நன்றி செலுத்தும் வழிபாட்டில் பங்கு கொள்ளும் உங்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளை நவில்கின்றோம்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

குடும்பத்தினர்.

077 456 4656, 021 205 9649, 077 221 9392

(50481)(4.3.6)

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை சபாரத்தினம் (பஞ்சலிங்கம்)

(ஓய்வுபெற்ற நீர்க்குழாய் பொருத்துநர் - கட்டடங்கள் திணைக்களம், யாழ்.பல்கலைக்கழகம்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சபாரத்தினம் நேற்று (31.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், கிரிசாந்தன் (பிரான்ஸ்), கிரிசாந்தினி, யசிதரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கல்யாணியின் (பிரான்ஸ்) மாமனும், சற்குணவதி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுந்தரலிங்கம் (ஜேர்மனி), குணவதி ஆகியோரின் மைத்துனரும், தங்கம்மா, குணசேகரம், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் தனலெட்சுமி, காலஞ்சென்ற திலகவதி ஆகியோரின் சகலனும், விதுஷா, மனுஷ்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21, பாரதி வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

(50450)(10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

அப்புக்குட்டி துரைரத்தினசிங்கம்

(இளைப்பாறிய அதிபர்- புகையிரத நிலையம் , முன்னாள் தலைவர்- லயன்ஸ் கழகம்)



அராலி கிழக்கு, வாலையம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும் கண்ணகையம்மன் கோயிலடி வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி துரைரத்தினசிங்கம் (இளைப்பாறிய அதிபர் புகையிரத நிலையம் , முன்னாள் தலைவர் - லயன்ஸ் கழகம்) 30.07.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தர்-தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான வாலசிங்கநாயகம், தவரத்தினசிங்கம், அன்னலிங்கம், வரதலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜெயந்தி, ஜெயவதனி, ஜெயகாந்தி, காலஞ்சென்ற ஜெயதேவிபாலன் மற்றும் ஜெயமதி, ஜெயசாந்தினி, அம்பிகைபாலன், ஜெயரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், யோகராஜா மற்றும் மங்களராஜா, இந்துமதி, காலஞ்சென்ற வடிவழகன் மற்றும் சச்சிதானந்தன், கீதா, முருகானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

அம்பிகை வாசம்,
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

(C/15279)(4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
சின்னப்பு கந்தசாமி

(ஓய்வுபெற்ற ஊழியர் – மின்சார சபை)



தோற்றம்
31.07.1937

மறைவு
04.07.2014

கடந்த (04.07.2014) சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சின்னப்பு கந்தசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்வதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசியூடாக உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் எமக்கு பல வழிகளில் உதவியவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சுப்பிரமணியம் றோட், சுன்னாகம்.
021 224 0103, 077 398 1005

குடும்பத்தினர்

(50240)(6.6.3)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
பஸ்ரியாம்பிள்ளை பிலிப்

(ஓய்வுபெற்ற கடற்றொழில் பரிசோதகர் சமாதான நீதிவான்)



அன்னை மடியில்
10★08★1931

ஆண்டவன் திருவடியில்
01★08★2013

ஆருயிர்த் தெய்வமே!
எங்கள் அன்பு டடியே! ஆண்டொன்று ஆனாலும்
மீளாது எம் துயரம் நீங்கவில்லை உம்
வதனமது எம் நெஞ்சம் தனில் நின்று!
எத்தனை கோடி உறவுகள் இருந்தாலும்
எம் டடிக்கு அவை ஈடாகுமா- இன்பதுன்பம்
தனில் நற்துணைவனாய் பாசமுள்ள தந்தையாய்
கல்வி செல்வம் தந்து தரணியிலே
தவழ விட்டீரே! எத்தனை ஆண்டுகள்
ஆனாலும் வாழ்வீர் எம் நெஞ்சங்களில்

என்றும் உம் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(48572)(3.6.4)

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

01.08.2014



அமரர் முருகேசு சண்முகம்

தோற்றம்
18.04.1926

மறைவு
15.08.2010

திதி: பூர்வபக்க ஷஷ்டி

நீங்கள் மறைந்து நாலாண்டுகள்
உங்களை மறந்த நாளேது
நீங்கள் காட்டிய நல்வழிகள்
சொல்லும் எங்கள் காலடிகள்
என்றும் உங்கள் நினைவுடன்
பணிவோம் இறைவன் காலடிகள்

உங்கள் நினைவுகளுடன்

57, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(50444)(4.3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்



சக உத்தியோகத்தரும் எமது சங்க அங்கத்தவருமாகிய சபாரத்தினம் யசிதரன் அவர்களின் அன்புத் தந்தை

**கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**

அவர்களின் மறைவால் துயர் உற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அவரின் ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்
யாழ். பல்கலைக் கழகம்-யாழ்ப்பாணம்.

(50495)
(10)

## கண்ணீர் அஞ்சலி



**கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**

(ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஊழியர்)

நண்பனுக்கு நண்பனாய்....
தோழனுக்கு தோழனாய்....
உறவினனுக்கு உறவினனாய்...
ஒன்றாய்ப் பழகினோம்..

எமக்குச் சொல்லாமலே
எம்மைப் பிரிந்து செல்ல
எப்படித்தான் உமக்கு
மனம் விரும்பியதோ...

அவரது பிரிவால் வாடிநிற்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நிர்வாகம், ஊழியர்கள், காவேரி சில்க்ஸ்**
48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(50487)
(12.3.6)

## கலையாத நினைவுடன் கலைந்த பதின்மூன்றாண்டுகள்

**வைரமுத்து வரப்பிரசிங்கம்**

(ஓய்வுபெற்ற அஞ்சல் உத்தியோகத்தர்
தெல்லிப்பழை)
திதி : பூர்வபக்க ஷஷ்டி (01.08.2014)



அன்னை மடியில் : 07.09.1940
ஆண்டவன் அரவணைப்பில் : 26.07.2001

குடும்பத்தின் குலவிளக்காய்
பண்பின் உறைவிடமாய், பாசத்தின் திருவுருவாய்
ஊருக்கோர் எடுத்துக்காட்டாய்,
எம்மை வளர்த்த அப்பாவே!
எம்மைத் தவிக்கவிட்டுச் சென்று பதின்மூன்றாண்டுகள்
ஓடி மறைந்ததே, அப்பா, எங்கள் உடலில் உயிர் இருக்கும் வரை
உங்களை நம் உள்ளங்களில் நிறுத்தி வைத்திருப்போம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நி.மு : கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
த.மு : களைஓடை கண்ணகை அம்மன் கோயிலடி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

என்றும் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(50485)(7.6.3)

## விற்பனைக்கு கட்டா ஊர்க் கருவாடு

தலை, முள் அகற்றப்பட்டு
சுகாதார முறைப்படி உப்புக் குறைத்து
காயவிடப்பட்ட வெளிநாட்டுக்கான
கட்டா ஊர்க் கருவாடு விற்பனைக்கு
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு :
**077 256 7072**
பண்டத்தரிப்பு

(50484)
(7.8.3)

## தேவை

மில்வேலை, மாவறுத்தல் என்பவற்றில் அனுபவம் உள்ளவர், பழக விரும்புபவர் தேவை. மேலும் அரிசிமா 90/=, அவித்த கோதுமைமா 110/=, ஆட்டாமா 110/=, வறுத்த ஆட்டா மா என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: பிருந்தா மில்ஸ், No: 18, றக்கா றோட். யாழ்ப்பாணம். Tele: 077 991 2304

(50493)
(10)

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

ஸ்ரீமுருகன் ஆலயம், விவேகானந்த நகர், கிளிநொச்சி ஆலயத்தினால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பு 31.07.2014 அன்று நடந்தது.

**முடிவுகள்:**

முதலாம் பரிசு - 1564 - சு.பத்மநாதன்
2ஆம் பரிசு - 9576- நவரத்தினராசா
3ஆம் பரிசு - 1953- பதுசனா
4ஆம் பரிசு - 5114- கே.லோகிசன்
5ஆம் பரிசு - 1071- சந்திரன்
6ஆம் பரிசு - 7911- இ.குகனேசராசா
7ஆம் பரிசு - 7647 - நவரட்னம்
8ஆம் பரிசு - 5759 - ம.பிறேமலதா
9ஆம் பரிசு - 4503 - சு.சகுந்தலா
10ஆம் பரிசு - 1419 - இ.இவநுபான்

**நிர்வாகத்தினர்**
**ஸ்ரீமுருகன் ஆலயம்,**
**விவேகானந்த நகர்,**
**கிளிநொச்சி.**

(41341)
(10)



## யாழ் வரணி குடமியன் அருள்மிகு ஆதி சிவன் தேவஸ்தானம் வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் 01.08.2014

ஆதிசிவன் அடியார்களே!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஜய வருடம் ஆடி மாத பௌர்ணமியை முன்னிட்டு 01.08.2014 ஆடி 16ஆம் நாள் வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம்பெறும் மறுநாள் பூங்காவனம் இடம்பெறும்.

### தினசரி உற்சவம்

| காலை | மாலை |
|---|---|
| காலை 9.00 மணிக்கு கும்பபூசை | மாலை 6.30 மணிக்கு மூலஸ்தான பூசை |
| முற்பகல் 10.30 மணிக்கு மூலஸ்தான பூசை | இரவு 8.30 மணிக்கு வசந்த மண்டப பூசை |
| முற்பகல் 11.30 வசந்தமண்டப பூசை | சுவாமி உள்வீதி வெளிவீதி வலம் வருதல் |
| சுவாமி உள்வீதி வலம் வருதல் | |
| பி.ப 1 மணிக்கு அன்னதானம் | |

08.08.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வரலட்சுமி பூசை ஆரம்பம் பி.ப 2.30 மணிக்கு பெட்டையர் குளம் விநாயகர் ஆலயத்துக்கு வேட்டைக்குப் புறப்படல்

**இரவு சப்பரத் திருவிழா**

09.08.2014 சனிக்கிழமை தேர்த்திருவிழா காலை 7.00 மணிக்கு கும்ப பூசை 10.33 மணிக்கு மேல் சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.
10.08.2014 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தம் மு.ப 10.30 மணிக்கு இடம்பெறும்
11.08.2014 திங்கட்கிழமை திருக்கல்யாணம் பூங்காவனம்
12.08.2014 செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு வைரவர்மடை

சிவஸ்ரீ கதி. இராமலிங்கம் ஐயா ஆசியுடன்
ஆலய பிரதிஷ்டா உற்சவகுரு
தென் இந்திய பயிற்சிக் குருமணி சிவஸ்ரீ இராம ஸ்ரீரங்கக் குருக்கள்

வரணி ஆதிசிவன்
தேவஸ்தானம்.

ஆலய தர்மகர்த்தா
சி. குமாரசாமி

(C/15289)(10)

## மரண அறிவித்தல்

**சூசைப்பிள்ளை யேசுதாசன் (ராசா மாமா)**

(ஓய்வூதியர்- உள்ளூராட்சி )



ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மத்தி ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை யேசுதாசன் நேற்று (31.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை-மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஞானப்பிரகாசம்-அன்னம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், ஆரோக்கியத்தின் (பொன்ராணி) அன்புக் கணவரும், கலா லூத்மலர், வனிதாறோஸ்மலர், இதயமலர் (கோகிலா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகநாதன், சத்தியநாதன், சிவகனேஸ் ஆகியோரின் மாமனும், ஜீவரூபி, ராகவன், சுயானா, விதுஷா, சதீஸ், கனுஷா காலஞ்சன் சதுசாந் மற்றும் ஹரிஸ், டெஷாந், டீப்ரி காலஞ்சென்ற கீர்த்தி ஆகியோரின் பாசமிகு பேரனும், நிசானிகா, பிரதீப் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிப் பிரார்த்தனை இன்று (01.08.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஏழாலை புனித இசிதோர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


ஏழுகோவிலடி,
ஏழாலை மத்தி.


(50494)
(10)

தகவல்:
குடும்பத்தினர்.


## உங்கள் மின்கட்டணத்தைக் Zero ஆக குறைப்பதற்கு ஒரே தீர்வு

நெற்மீற்றர் தொழில்நுட்பத்தில்





**ரூபா 63,700/- இலிருந்து**

உங்கள் மின்சார பாவனையை எமக்கு அறிவியுங்கள்

| எதிர்பார்க்கும் Units (மாதாந்த பாவனை) | Solar எண்ணிக்கை (250W) | Inverter Capacity |
|---|---|---|
| 33 - 37 | 01 | 0.25 KW |
| 66 - 74 | 02 | 0.5 KW |
| 99 - 111 | 03 | 0.75 KW |
| 132 - 148 | 04 | 1.0 KW |
| 165 - 185 | 05 | 1.25 Kw |
| 168 - 203 | 06 | 1.5 KW |
| 224 - 270 | 08 | 2.0 KW |
| 280 - 338 | 10 | 2.5 KW |
| 336 - 406 | 12 | 3.0 KW |
| மற்றும் 4, 5, 6, 7, 8, 10 - 100 KW வரையான தீர்வு Single & 3 Phase | | |

இலங்கை மின்சார சபை, நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் வழிகாட்டலுடன் (CEB & Sri Lanka Sustainable Energy Authority under Ministry of Environment & Renewable Energy)



**நெற்மீற்றர் தொழில்நுட்பம்:**

பகலில் சோலரினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் உங்களின் சகலவிதமான மின்பாவனைகளுக்கும் மெயின் சுவிட்ச்சினூடாக வழங்கப்பட்டு, பாவனைக்கு மேலதிகமாக உற்பத்தியாகும் மின், மின்சார சபை (CEB) ற்கு வழங்கப்படும். (CEB) க்கு வழங்கப்படும் அலகுகளை (Units) அளப்பதற்கு புதிதாக ஒரு மின்மானி (Meter) CEB இனால் பொருத்தப்படும். இரவில் CEB ற்கு வழங்கப்பட்ட மின்அலகுகள் மீண்டும் உங்கள் பாவனைக்கு மீளளிக்கப்படும். நீங்கள் CEB ற்கு வழங்கிய அலகுகளும் CEB இடமிருந்து பெற்ற அலகுகளும் சமமாகிவிட உங்கள் மின்கட்டணம் பூச்சியமாகிவிடும்.

- உங்கள் வீடு, வியாபார ஸ்தாபனங்கள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வைத்தியசாலை, ஹோட்டல் ஆகியவற்றிற்கு "SOLAR" பூட்டித் தரப்படும்.
- வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
- மேலதிக விசேட வயரிங் தேவையில்லை.
- பற்றறி தேவையில்லை.
- அனைத்து மின் உபகரணங்களையும் பாவிக்கலாம்.

எமது Installations ஐ பார்வையிட அழையுங்கள்

(c/15283)(7.6.3)

MICRO PC SYSTEMS

No. 115 C, W. A. Silva Mawatha, Colombo 06000, Sri Lanka.
Tel : 011 4000 686 Mobile : 077 307 6409
E-mail : mail@micropcsystems.com

VAVUNIA : No. 73, 2nd Cross Street, Vavuniya.
JAFFNA : No.218 Hospital Road,Jaffna.
NELLIYADI : Kodikamam Road, Nelliyadi.
KILINOCHCHI : A9 Road, Kilinochchi. (Opp. Kachcheri)
TRINCOMALEE : No, 231, Main Street, Trincomalee.

25 வருட உத்தரவாதம்
உடன் பதிவு செய்யுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் பாதுகாப்பில் அரசுக்கு திருப்தியில்லை

## அதனால்தான் மஹிந்த அங்கு செல்லவில்லை என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஓக.1

பிரிட்டனின் பாதுகாப்பு உத்தரவாதம் திருப்தியளிக்காததன் காரணமாகவே கொமன்வெல்த் (பொதுநலவாய) விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கவில்லை என்று. இறுதி நிகழ்விலும் அவர் பங்கேற்க மாட்டார் என்றும் அரசு நேற்றுத் தெரிவித்தது.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர்கூடத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக் வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுநலவாய அமைப்பின் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொதுநலவாய விளையாட்டுப் போட்டி களின் ஆரம்பநிகழ்வில் ஏன் பங்கேற்கவில்லை என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கெஹலிய, பாதுகாப்பு உட்பட பல விடயங்களைக் கருத்திற்கொண்டு கொமன்வெல்த் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்கவில்லை. அத்துடன், அங்கு பாதுகாப்பு திருப்தி இல்லை என ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவும் ஆலோசனை வழங்கியிருந்தது.

கொமன்வெல்த் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகளில் பங்கேற்கவில்லை என்பது பிரச்சினை அல்ல. இதனூடாக ஜனாதிபதி கொமன்வெல்த் போட்டிகளைப் புறக்கணித்துவிட்டார் என்று கருதக்கூடாது என்றார்.,

## தொடர்ச்சிகள்

### வடக்குக்கு

மூலம் கைத்தொழில்களை மேம்படுத்துவது பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் எமது வடமாகாணம், அதுவும் யாழ். குடாநாடு. பாரிய கைத் தொழிற் பேட்டைகளை உருவாக்கக் கூடிய சூழலைக் கொண்டதல்ல. பெரிய பெரிய ஆலைகளை உருவாக்கக் கூடிய விதத்தில் எமது இயற்கைச் சுற்றுச் சூழல் அமைந்திருப்பதாகக் கூற முடியாது. அத்துடன் எமது நீர் பற்றாக் குறை, நிலத்தின் தன்மை, எமது பாரம்பரியப் பண்புகள் யாவும் பாரிய தொழிற்சாலைகளை உருவாக்க உதவுவதாக அமையவில்லை.

வேலையில்லா பிரச்சினை

இயந்திரங்கள் எமது கமக்காரர்களின் வேலைகளைச் செய்யத் தொடங்கியதும் மக்களின் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளது. குறிப்பாக வயல்களில் வேலை செய்த பெண்கள் இப்போது வேலையின்றி வாடுகின்றார்கள். எனவே எங்கள் மக்களின் மேம்பாட்டுக்காக அவர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாங்கள் குடிசைக் கைத்தொழில்களில் கூடிய கவனம் செலுத்துவதே உசிதம்' என்றார்கள்.

கூட்டுறவு முறையில் வேளாண்மையையும் குடிசைக் கைத்தொழில்களையும் இணைத்து கொண்டு செல்லாம் என்று வலியுறுத்தப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு வேறு மாகாணங்கள்

எமது சுற்றுச் சூழலையும், பண்பாட்டு விழுமியங்களையும் மனதில் வைத்துக் கைத்தொழில்களை உருவாக்குவது அத்தியவசியமாகின்றது. அதனால்தான் நாம் மீண்டும், மீண்டும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இந்த நாட்டின் மற்றைய மாகாணங்களைப் போல் கருதாது அவற்றின் விசேட தேவைகளை மனதில் எடுத்து அதற்கேற்றால் போல் திட்டங்களை வகுக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றோம்.

இரணைமடுத் திட்டத்தைப் பொறுத்தவரை கொழும்பு அரசு பெரிய திட்டங்களின் மேலேயே கண் வைத்துள்ளது என்பதை நாங்கள் கண்கூடாகக் காணலாம். அவை அரசின் சிலருக்கு அல்லது அரசோடு சம்பந்தப்பட்ட பலருக்கு நல்ல பொருளாதார விருத்தியை ஏற்படுத்தும் என்பது எமக்குத் தெரியாததல்ல. ஆனால் வட மாகாணத்தின் தேவைகளை மனதில் கொண்டு திட்டம் தீட்டப் பட்டதா அல்லது தான்தோன்றித்தனமாக அரச தேவைக்கேற்ப திட்டம் வகுக்கப்பட்டதா? மக்களின் மனோநிலை அறியப்படாமலேயே வட மாகாண சபை வர முன்னரே இந்தத் திட்டம் வகுக்கப்பட்டது.

இப்பொழுது 'விடாதீர்கள், விடாதீர்கள்! வெளியுலகப் பணம் வீணாகி விடும்' என்கின்றார்கள். நாம் எமது உள்நாட்டுத் தேவைகளை உள்வாங்கி உங்கள் திட்டங்களை நடைமுறைப் படுத்துங்கள் என்று கூறியுள்ளோம். எமது குடாநாடு நீர்வளத்தை ஏரிகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும் இருந்துதான் பெற்று வந்துள்ளது. ஆகவே அவற்றைத் தூர்வை நீக்கி தூயதாக்குங்கள்! உங்கள் பாரிய திட்டத்தை எமது அடிப்படை நீர் வளத்துடன் வேண்டுமானால் ஒத்திசைத்துக் கொண்டு போங்கள் என்று கூறியிருக்கின்றோம்.

மண்ணுக்கு பொருந்தாத கைத்தொழில்

எமது கைத்தொழில்களும் அப்படித்தான். எமது சூழலுக்கு ஏற்றவாறு அவை எடுத்தாளப்பட வேண்டும். உதாரணத்திற்கு எமக்கு நீர் அவசியம். அண்மையில் நீரைப் போத்தலில் அடைக்கும் கைத்தொழில் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவ எத்தனிக்கப்பட்டது. எமது நீரைப் போத்தல்களில் அடைத்தால் மழையற்ற நாட்களில் எமது நிலை என்னாவது?

எனவே எமது கைத்தொழில்களை வளர்ப்பது அவசியம் என்பதில் எமக்கு எந்தவித மயக்கமும் இல்லை என்று கூறும் அதே வேளை எமது சுற்றுச் சூழல், மண்ணியல், தட்பவெட்ப நிலை, பாரம்பரியம், விழுமியங்கள் ஆகியவற்றை அனுசரித்தே எமது கைத்தொழில்கள் உருவாக வேண்டும், மேம்படுத்தப்பட வேண்டும், மேலான சமூக மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் - என்றார். (ற-5)

### கடலட்டைகள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள புதுப்பட்டினம் கடற்பகுதியில் இனந்தெரியாத நபர்கள் கடலட்டைகள் கடத்துகின்றனர் என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரிடம் இருந்து 100 கிலோ கடலட்டைகள், 28 கிலோ கடற்பல்லி போன்றவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் முதற்கட்ட விசாரணைகளின் படி, கைப்பற்றப்பட்டவை இலங்கைக்குக் கடத்தப்படவிருந்தன என்று தெரியவருகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-14)

### அனுபவங்களைப்

அடுத்த கட்ட நகர்வு என்ன என்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

"ஒன்றாக இணைந்து பணியாற்றுவது மற்றும் பேச்சு மூலம் மட்டுமே, பிரச்சினைகளைத் தீர்த்து அதனூடாக அமைதியையும் செழுமையையும் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் செயலாற்றுகிறோம். அதை ஆபிரிக்காவுக்கு அப்பாலும் செயற்படுத்த முடியும் என்று எண்ணுகின்றோம். தென் சூடானிலும், இலங்கையிலும் எமது தலையிடுகள் தொடர்பாகவே நான் குறிப்பிடுகிறேன்.

அமைதியையும், உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக நாம் தென்சூடானில் பல்வேறு தரப்புகளுடன் தொடர்ந்தும் பேச்சு நடத்தி வருகிறோம். ஆபிரிக்க ஒன்றியம், ஐ.நா அமைதி முயற்சிகளுக்குத் துணையாக இதனை நாம் செய்கிறோம்.

இலங்கையில் எமது வெற்றிகரமான பயணத்தை முடித்துக் கொண்டுள்ளேன். உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவின் அனுபவங்கள், மற்றும் அரசியலமைப்பைக் கட்டியெழுப்பும் செயல்முறைகள் குறித்து தமது நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு தென்னாபிரிக்காவுக்கு இலங்கையிடமிருந்து அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய அங்கு சென்ற எமது குழு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது அரச உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தது" என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். ஆயினும், பயணம் குறித்த மேலதிக விவரங்களையோ, எதிர்காலத் திட்டங்கள் குறித்தோ அவர் தனது உரையில் விபரிக்கவில்லை. (ற-5)

### இந்துவாக

கல்வித் திணைக்கள ஆதரவுடன் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் பஜனை, மாலையில் முருகப்பெருமான் வெளிவீதி வலம்வரும்போது யாழ்.மாநகர சபை ஆதரவுடன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை பீட மாணவர்கள் பங்குபற்றும் பஜனை, பாடசாலை மாணவர்களுக்கான வினாவிடைப்போட்டி என்பன நடைபெறவுள்ளன. எதிர்வரும் 10 ஆம் திகதி கண்காட்சியும் ஆன்மிக அருளுரை பக்திக் காணொளி காட்சிப்படுத்தலும் நடைபெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-14)

### அளுத்கமவை

களின் புனரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைவதற்கு இன்றும் ஆறு மாத காலம் ஆகும் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

அளுத்கம மற்றும் பேருவளை புனரமைப்பு நடவடிக்கைக்கு பொறுப்பான மேஜர் ஜெனரல் உதய மெதவலவே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"பேருவளை, அளுத்கம பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் பெரும் சேதங்களைத் தோற்றுவித்துள்ளன. அவற்றை புனரமைப்பு செய்வதென்பது உடனடியாக செய்ய முடியாது. அசம்பாவித சம்பவங்களில் சேதமடைந்த கடைகள், வீடுகள் போன்றவற்றை புனரமைப்பு செய்ய ஆறு மாத [illegible] யுள்ள 210 வீடுகளில் 34 வீடுகள் முற்றாகப் புனரமைக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கையளித்துவிட்டோம். ஏனைய வீடுகளும் வர்த்தக நிலையங்களும் விரைவில் புனரமைப்பு செய்யப்படும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-10)

### காஸாவில்

அதிகமான அப்பாவி முஸ்லிம் மக்களைக் கொன்று குவித்துள்ளது இஸ்ரேல். அதுகுறித்து மௌனமாக இருக்கும் அரசு, இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது. இது வேதனை தரும் விடயமாகும். இதுகுறித்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தோம். ஆயினும் எது விதப் பயனும் இல்லை.

அளுத்கம, பேருவளை பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் நடைபெற்று ஒன்றரை மாத காலமாகியுள்ளது. இதுவரை ஜனாதிபதி அது தொடர்பில் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. குற்றவாளிகள் கைது செய்யப்படவுமில்லை.

கறுப்பு ஜூலையை நினைவு கூருவதாக அரசு ஒரு நாடகத்தை அண்மையில் அரங்கேற்றியது. அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் கறுப்புப்பட்டியை அணிந்து கொண்டு துக்க தினம் கடைப்பிடிப்பது போன்று நடித்தனர். இனங்களுக்கிடையே மோதல்களையும் வன்முறைகளையும் ஏற்படுத்தி அரசியல் இலாபம் காணுகின்ற அரசு இவ்வாறு நடந்தது கேலிக்குரியது. கறுப்பு ஜூலை என்பது போல கறுப்பு ஜூனை அளுத்கமவில் அரசு உருவாக்கியுள்ளது என்பது மட்டுமே உண்மையாகும்.

வீதியோர நடைபாதைகளை பெரிதாக்கி கற்களால் அலங்கரிப்பு வேலைகள் நடைபெறுவது நாட்டின் அபிவிருத்திக்காக அல்ல. பாதைகளுக்கான கற்களை விநியோகிப்பவர் ஜனாதிபதியின் உறவுக்காரர். அவர் இலாபம் பெறவேண்டும் என்பதற்காகவே வீதியோர நடைபாதைகள் பெரிதாக்கப்படுகின்றன. அதுமட்டும் அல்ல. ஒருவழிப் பாதையை உருவாக்கி நேர விரயத்தையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம்களை துன்புறுத்துவதோடு பள்ளிவாசல்களை உடைத்துப் பாவம் செய்கின்ற அரசுடன் இணைந்து சிலர் இப்தார் கொண்டாடியுள்ளனர். இது கேவலமான செயலாகும். முஸ்லிம்களை அழித்து பள்ளிவாசல்களை உடைத்துக் கொண்டு அரசியல் லாபம் காணும் ஒருவருடன் இணைந்து இப்தார் கொண்டாடுவது வெட்கப்படவேண்டிய ஒரு செயலாகும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-10)

### ஆளுநர்

மைப்பினர் முதலில் உங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டு கருத்துக்களை முன்வையுங்கள்"- என்று அவர் பதிலளித்துள்ளார்.

அதையடுத்து கொதித்தெழுந்த எதிரணி உறுப்பினர்கள், ஏனைய மாகாண சபைகளுக்கு முன்னுதாரணமாக வடக்கு மாகாண சபை செயற்படுகிறது. முதலமைச்சரைப் பற்றியோ அல்லது உறுப்பினர்களைப் பற்றியோ சபையில் பேச வேண்டாம். அவர்கள் தங்க எது பணியை செய்து கொண்டேதான் இருக்கிறார்கள். மாநகர சபையை விட மாகாண சபை திறம்படதான் செயற்படுகிறது"- என்று கூட்டாகப் பதிலளித்தனர்.

இதனால் நேற்றைய கூட்டத்தில் சிறிதுநேரம் சலசலப்பு ஏற்பட்டது. (ற-14)

### காரைநகர்

யும் அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்த வேண்டும் எனக் கோரப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்று அவர்களை ஏன் அடையாள அணி வகுப்புக்கு முற்படுத்தக் கூடாது என்று விளக்கம் கோரியுள்ளதோடு உரிய விசாரணை மேற் கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

தவிர சிறுமியை கடற்படைச் சிப்பாய் அழைத்துச் சென்ற போது அதனைத் தட்டிக் கேட்ட பொதுமகன் ஒருவரை கடற்படைச்சிப்பாய் தடுத்துள்ளார் என்று விசாரணையில் கூறப்படுகின்றது. ஆனால் குறித்த பொதுமகன் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொள்ளுமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. தவிர பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பொலிஸாரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை சரியான முறையில் தயாரிக்கப்படவில்லை என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டதையடுத்து அதனைச் சீர்செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வழக்கு மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் செப்ரம்பர் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இரண்டு சிறுமிகள் சார்பாகவும் தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ற-4)

### ஈ.பி.டி.பி

ஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்தக் கைது நடந்துள்ளது என்றும் தெரியவருகின்றது. குறித்த நபரிடம் இருந்து 23 கிலோ 700 கிராம் வெடிபொருள் மீட்கப்பட்டுள்ளது என்று கூறும் பொலிஸார், தற்போது குறித்த நபர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஈ.பி.டி.பி. கட்சி சார்பாகப் போட்டியிட்டு வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினராகத் தெரிவானவராவார். பின்னர் அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்தார். அதையடுத்து ஈ.பி.டி.பி. கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்தும் நீக்கப்பட்டு, பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டார் என்று தெரியவருகின்றது. (ற-4)

### யாழ்.பல்கலைக்

கலைக்கழகத்தின் பல துறைகளிலும் பிரிவுகளிலும் பரவலான துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதை சந்தேகத்திற்கு இடமில்லாதவகையில் இந்த உபகுழு கண்டறிந்துள்ளது. அனைத்து மட்டங்களிலும் காணப்படும் அரசியல் செல்வாக்கும், பேராசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளின் கேள்வி கேட்கத் துணியாத மனப்பாங்குமே இந்தத் துஷ்பிரயோகங்களுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

முக்கியமாக தகுதிகாண் விரிவுரையாளர்களின் தெரிவுகளிலேயே இந்தத் துஷ்பிரயோகங்கள் நடந்துள்ளன. முதலாம் வகுப்புச் சித்தி போன்ற அதியுயர் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் திட்டமிட்ட முறையில் ஓரங்கட்டப்பட்டு, தகுதிகுறைந்தவர்கள் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர். இந்த முறைகேடு தொடர்பில் சிலர் நீதித் துறையையும் நாடியிருக்கின்றனர்.

பேரவை உறுப்பினர்களின் நியமனங்களில் அரசியலைக் கலப்பதன் மூலமும், பல்கலைக்கழக நிர்வாகத்தைக் கண்காணித்து சட்ட ரீதியான கடமையைச் செய்யாதிருப்பதன் மூலமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இந்த துஷ்பிரயோகங்களுக்குத் துணைபோகின்றதோ? என சந்தேகம் ஏற்பட்டுள்ளது"- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

### தமிழரசுக்

களிலும் இலங்கை தமிழரசுக் கட்சியின் மூலக் கிளைகள் மீளவும் அமைக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திலும் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மூலக் கிளைகளை மீள அமைப்பதுடன் அதனூடாக தொகுதிக் கிளைகளின் நிர்வாகங்களும் புதிதாகத் தெரியப்பட்டு வருகின்றன.

தொகுதிக் கிளைகளுக்குரிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர், மாவட்டக் கிளைக்குரிய நிர்வாகம் தேர்வு செய்யப்படவுள்ளது. தமிழரசுக் கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-5)

### ஒக்ரோபர் மாத

கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் உள்ள நீர்நிலைகளில் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகின்றது என்று நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண உள்ளூராட்சிச் சபை உறுப்பினருக்கும் கொடுப்பனவு

குழுநிலைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக வழங்கவும்

தென்மராட்சி, ஓக. 1

நாட்டில் உள்ள ஏனைய மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தொலைபேசிக் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு, குழுநிலைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான கொடுப்பனவு ஆகியவை வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சுக்குப் பொறுப்பாக உள்ள மாகாண முதலமைச்சருக்கு அறிவிக்க வேண்டும்.

ஏனைய மாகாண உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஒரு சட்டம் வடமாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு வேறு சட்டமா? இவ்வாறு சாவகச்சேரி நகர சபையில் திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தனிநபர் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றினார் நகர சபை உறுப்பினர் த.சுதர்சன். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைவர் கூறியதை அடுத்து சபை ஏகமனதாக பிரேரணையை ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## புகலிடக் கோரிக்கையாளர்களில் 80 வீதமானோருக்கு மன அழுத்தம்

ஆஸி. அகதிமுகாமில்

ஆஸ்திரேலியாவில் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள 153 இலங்கை தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களில் 80 வீதமானவர்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கிறீன் கட்சியின் செனெட்டர் சராயங் இதனை உறுதி செய்துள்ளார். மன நல மருத் துவர்கள் தாங்கள் மதிப்பீடு செய்த 5 புகலிடக்கோரிக் கையாளர்களில் நால்வருக்கு மன அழுத்தங்களும் உடற் காயங்களும் காணப்பட்டதாக தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உடனடியாக அவர்களின் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வை ஆஸ்திரேலிய பிரதமர் மொரிசன் வழங்க வேண்டும். இல்லை என்றால் அவர்களின் நிலைமை மிகவும் பாதிப்படையலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கேர்ட்டின் முகாம், சிறுவர்களுக்கு மிகவும் உகந்ததல்ல என்றும் அங்கு போதிய வசதிகளும் இல்லை. அதனால் அவர்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்று ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று நம்பத் தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை கிறீன் கட்சியின் செனெட்டர் சரா யங் புகலிடக் கோரிக்கையாளர்களைச் சென்று பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (வ)

## ஆரோக்கியம் தொடர்பாக மாணவருக்கு பரிசோதனை



மாணவருக்கு மருத்துவ பரிசோதனை இடம்பெற்றவேளை

தென்மராட்சி, ஓக. 1

தென்மராட்சி கல்வி வலயத்தினர், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து நடத்திய மாணவர்களுக்கான மருத்துவ பரிசோதனை முகாம் நேற்றுமுன்தினம் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

மாணவர்களுக்கு ஏற்படும் உடல், உள ஆரோக்கியம் தொடர்பாக கற்றலில் ஏற்படும் பின்னடைவுகளுக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனை முகாமில் 325 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்குட்பட்ட மருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற பரிசோதனை முகாமை வடமாகாண சுதேச சுகாதாரத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், வேள்ட் விஷன் நிறுவன திட்ட முகாமையாளர் ஏ.ஜீ. ரொசைரோ ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். பரிசோதனை முகாமில் பங்குபற்றிய மாணவர்களுடன் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

கண், காது, தொண்டை, மூக்கு, பல், பொது மருத்துவம், விசேடம், தோல் போன்ற பரிசோதனைகள் மருத்துவர்களால் மேற்கொள்ளப்பட்டு மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெற்றோருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. (வ-9-122)

## நிறுத்தப்பட்டிருந்த டிப்பரை மோதியது மற்றொரு டிப்பர்




வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த டிப்பரை ஏ-9 வீதியில் வேகமாக வந்த மற்றொரு டிப்பர் மோதித் தள்ளியதில் நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வீதியோர மதில் மற்றும் மின் கம்பங்கள் ஆகியவற்றுடன் மோதி அவற்றைச் சேதப்படுத்தியது. இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் மீசாலைச் சந்தியில் இடம்பெற்றது. டிப்பர் மோதியதில் 100 அடி நீளமான சுவர் முழுமையாக உடைந்ததுடன் மின்கம்பமும் முறிந்து சேதமடைந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9-131)

## மோட்டார் சைக்கிளில் சிறுவர்களுடன் பயணிப்போர் அவர்களுக்கும் தலைக்கவசம் அணிவிப்பது அவசியம்

சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவிப்பு

வலி. வடக்கு, ஓக.1

யாழ். மாவட்டத்தில் மோட்டார் சைக்கிளில் சிறிய பிள்ளைகளுடன் பயணிக்கும் பெற்றோர்கள் தமக்கு தலைக் கவசம் அணிந்து கொண்டு பிள்ளைகளுக்கு அணிவிக்காது செல்லும் துன்பமான நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறு தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு தமது பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாத நிலைமையை அங்கீகரிக்க முடியாது என்று சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி சஜீவ கருணரத்தினா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளுக்கு இடையேயான போக்குவரத்து தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாநகர சபை நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

விபத்துக்களை பொலிஸாரால் மட்டும் குறைத்துவிட முடியாது. அனைவரும் முழுமையாக ஒத்துழைப்பதன் மூலம் தான் விபத்துக்களைக் குறைக்க முடியும். பொலிஸாரைப் பொறுத்தவரையில் 24 மணித்தியாலமும் விபத்துக்களை குறைக்க வேண்டும், விபத்து ஏற்படாது பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் போக்குவரத்து கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

வீதி ஒழுங்கு முறைகளை பொதுமக்கள் உரிய முறையில் அறியாமை மற்றும் [illegible] யாமை, அவற்றைக் கடைப்பிடிக்காமை போன்றவையே தற்போது விபத்துகள் ஏற்படக் காரணங்களாக அமைகின்றன.

பொது மக்களுக்கு எந்தளவுக்கு வீதி நடைமுறைகள் தொடர்பான அறிவை ஊட்ட முயற்சிக்கின்றோமோ அதனை விட கூடிய அறிவை வாகனச் சாரதிகள் பெற வேண்டும்

சாரதிகளுக்கான பயிற்சி நிலையங்களை நடத்துபவர்கள் இதில் கூடிய கவனம் [illegible] குறிப்பாக [illegible] திலும் மற்றும் முக்கியமாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்க வழி முறைகளை மட்டும் கற்றுக் கொடுக்காது முழுமையாக அவர்கள் வீதி ஒழுங்குகளை கற்றுக் கொள்ளவும் அறிந்து கொள்ளவும் வழி செய்ய வேண்டியது அவசியமாகும்.

வாகன விபத்தை முழுமையாக, உடனடியாகக் குறைத்துக் கொள்ள முடியாது. நாளாந்தம் பலர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதுடன் புதிது புதிதாக வாகனங்களையும் கொள்வனவு செய்கின்றனர். வாகனங்களின் எண்ணிக்கை வீதிகளில் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

தலையை மறைக்கும் அரைத் தலைக்கவசம், முக்கால் தலைக் கவசம், முகத்தையும் மறைக்கும் தலைக்கவசம் என்று பலரக தலைக் கவசங்கள் சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ளன.

ஆனால் முழுமையாக முகத்தை மறைக்காது தலையை மட்டும் மறைக்கும் தலைக் கவசமே கூடிய பாதுகாப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதுடன் விபத்துக்களையும் ஏற்படுத்தாததாக அமையும் என்று கூறினார். (வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொய்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஊடகவியலாளர்களைக் கைது செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியைக் கண்டித்து யாழ். மத்திய பஸ் நிலையத்தில்நேற்று ஊடகவியலாளர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் யாழ். பிராந்திய ஊடகவியலாளர்களும், தென்பகுதியைச் சேர்ந்த சுதந்திர ஊடக இயக்கத்தினரும் பங்கெடுத்திருந்தனர். இவர்களுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சுரேஸ்.பிரேமச்சந்திரன், சி.சிறீதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், ச.சுகிர்தன், க.சர்வேஸ்வரன், அனந்தி சசிதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர்கஜேந்திரன், மாக்ஸிச லெனினிசக் கட்சியின் உறுப்பினர்கள், முற்போக்கு தமிழ் தேசிய கட்சி உறுப்பினர்கள் மற்றும் வலி. வடக்கு பிரதேசசபை உப தவிசாளர் சஜீவன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ந-21)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்கான திட்டம் 8 பேரே சமர்ப்பித்தனர்

*வடக்கு மாகாண சபையில்*

**கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக, உறுப் பினர்கள் 33 பேருக்கும் தலா 4 மில்லியன் ரூபாவும், 4 அமைச்சர்களுக்கும் தலா 5 மில்லியன் ரூபாவும், முதல மைச்சருக்கு 6 மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம், ஒக. 1

வடக்கு மாகாண சபையின் 8 உறுப்பினர்கள் மட்டுமே, தமக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதிக்குரிய திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

அவர்களில் 5 பேர் ஆளுங் கட்சியையும், 3பேர் எதிர்க்கட்சி யையும் சேர்ந்தவர்களாவர்.

வடக்கு மாகாண சபை அமைக் கப்பட்டதன் பின்னர், கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக, உறுப் பினர்கள் 33 பேருக்கும் தலா 4 மில்லியன் ரூபாவும், 4 அமைச்சர்களுக்கும் தலா 5 மில்லியன் ரூபாவும், முதல மைச்சருக்கு 6 மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டது.

முதலமைச்சர் மற்றும் அமைச் சர்களுக்குரிய பன்முகப்படுத் தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதிக்குரிய திட்டங்கள் சமர்ப்பிக் கப்பட்டு, அந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. உறுப்பினர் களுக்கான பன்முகப்படுத் தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியே இன்னமும் பயன்படுத் தப்படாது உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மாகாண சபை உறுப் பினர்களான சீ.வி.கே. சிவ ஞானம், த.சித்தார்த்தன், ம.தியாகராசா, இந்திரரசா, ப.அரியரட்ணம் மற்றும் எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சி.தவராசா, ஜெயதிலக, தில கரட்ண ஆகியோரே தமது நிதிக்குரிய திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளனர். ஏனைய 25 உறுப்பினர்கள் தமது நிதி ஒதுக்கீட்டிற்குரிய திட்டங்களை இதுவரை சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின் றது. (ற-5)

### நூலக அபிவிருத்தி குழுக்கூட்டம்

கொக்குவில் பொது நூலகத்தின் நூலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை சனிக் கிழமை முற் பகல் 10 மணிக்கு நூலகமண் டபத்தில் நல்லூர் பிர தேச சபைத்தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடை பெறவுள்ளது. (ஜ-14)

### விவரணச் சித்திரம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக. 1

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தின் ஏற்பாட்டில்சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக் களின் இயக்கத்தில் உருவான 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்னும் விவரணச் சித்திரம் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை முற் பகல் 11.30 மணியள வில் நல்லை ஆதீன மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (க)

# இஸ்ரேல் தாக்குதலைக் கண்டித்து யாழ்.மாநகர சபையில் பிரேரணை

**முள்ளிவாய்க் காலில் நடைபெற்ற இனப் படுகொலைக்கு அஞ்சலி செலுத்துமாறு சபையில் எதிர் கட்சி உறுப்பினர் ந.இராஜ தேவனால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஏற்க மறுத் ததால் அன்றைய தினம் எதிர்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளி நடப்புச் செய்திருந்தனர்.**

யாழ்ப்பாணம்.ஒக.1

முள்ளிவாய்க்கால் படுகொலைச் சம்பவத்துக்கு அஞ்சலி செலுத்தும் பிரேர ணையை ஏற்க மறுத்த யாழ். மாநகர சபை பலஸ்தீனத்தில் நடைபெற்று வரும் தாக்கு தல்களுக்கு எதிரான பிரேர ணையை நேற்று ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் விமானக் குண்டுத்தாக்கு தலை' உடன் நிறுத்த வேண்டும். ஆக்கிரமித்துள்ள நிலத்தில் இருந்து இஸ்ரேல் துருப்புக்கள் உடன் வெளியேற வேண்டும் என்ற பிரேர ணையை ஆளுங்கட்சி உறுப்பின்ர் ஜனாப்.மொ.மீ. முஸ்தபா சபையில் முன் வைத்தார். மனிதாபிமான அடிப்படையில் எதிர்கட்சி உறுப்பினர்களும் பிரேர ணையை ஏற்றுக் கொண்ட தால் சபையில் பிரேரனை நிறைவேற்றப்பட்டது.

அதேவேளை, முள்ளிவாய்க் காலில் நடைபெற்ற இனப் படுகொலைக்கு அஞ்சலி செலுத்துமாறு சபையில் எதிர் கட்சி உறுப்பினர் ந.இராஜ தேவனால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஏற்க மறுத் ததால் அன்றைய தினம் எதிர்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளி நடப்புச் செய்திருந்தனர். (ற-14)

D.C.M
ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்
A/L 2015/2016
பொருளியல்
S.வரதராஜன் B.A (Hons)
நாளை மாலை 3.00 இற்கு ஆரம்பம்
(50489)(4.3.6)

முக்கிய அறிவித்தல்
Jaffna College Institute of Technology & Agriculture
எமது நிறுவனத்தில் 02.08.2014 அன்று நடைபெற இருந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு (Institute Day) தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.
நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
நன்றி
Chairman,
Management Council,
Jaffna College Institute of Technology & Agriculture

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்
பாக்கியம் சுப்பிரமணியம்
தவப்பேறு 02.02.1932
சிவப்பேறு 02.07.2014



கடந்த (02.07.2014) புதன்கிழமை சிவபதமடைந்த பாக்கியம் சுப்பிரமணியம் அவர்களின் 31ஆம் நாள் சபிண்டீகரன நிகழ்வும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை யும் இன்று (01.08.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லதில் நடை பெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன் புடன் அழைக்கின்றோம்.
உசன், மிருசுவில். (50490) (10) குடும்பத்தினர்

கடந்த காலங்களில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று சாதனை படைத்த மாணவர்கள் கலந்துகொண்ட கருத்தரங்கு!
அனேக பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்க...
2014 தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின்
மாபெரும் கருத்தரங்கு
சாதனை படைத்துவரும் வெற்றித்தேர்வின் பிரதம ஆசிரியர்களுடன் ... உள்ள வெற்றித்தேர்வு வெளிவர்களும் கலந்துகொள்கின்றனர்.
யாழ். நகரில்
காலம் : 03.08.2014 ஞாயிறு மு.ப 9.30 - பி.ப 2.30 வரை
இடம்: நல்லூர் இளங்கலைஞர் மன்றம் (கலா மண்டபம்)
வடமராட்சியில்
காலம் : 07.08.2014 வியாழன் மு.ப 9.30 - பி.ப 2.30 வரை
இடம்: தெற்குமேற்கு பிரதேச சபை மண்டபம், மாலுசந்தி
... மாதிரி வினாப்பத்திரம் பரீட்சை ... Multi Media Projector மூலம் விரிவான விளக்கங்களுடன் தெளிவுபடுத்தப்படல். பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும்.
அனுமதிக்கட்டணம் ரூபா 150.00 மட்டுமே!
நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.
பங்குபற்றிப் பயனடையுங்கள்!
தொடர்புகளுக்கு:
0775388471, 0773126807

நாளை ஆரம்பம்
விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L கலைப்பிரிவு
Sat/Sunday
தமிழ் - குகன்
2015.10 - 11/2016.11 - 12
இந்துநாகரிகம் - பத்மராஜா
2015.08 - 09/2016.09 - 10
கிறிஸ்தவ நாகரிகம் - சுஜந்தன்
2015.09 - 10/2016.08 - 09
புவியியல் - சபரிதன்
2015 - நோகுபின் 10 - 11
2016 - சொர்முறை புவியியல் 11 - 12
அரசியல் விஞ்ஞானம் - ஸ்ரீரங்கநாத்
2015 - இலங்கை அரசியல்
2016 - அரசியல் அரிமுகம்
வரலாறு - தாஸ்
2015.10 - 11/2016.11 - 12
தரம் 6 தொடக்கம் O/L வரை
3ஆம் தவணைக்கான வகுப்புகள்
02.08.2014 மீண்டும் ஆரம்பமாகின்றன.

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
இல் இருந்து
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2016,2015
கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகளுக்கான புதிய பிரிவுகள்
ஆரம்பம்
02-08-2014 சனி காலை 9.00மணி
விசேட கருத்தரங்கு
SLAS, SLAcc, Subra Grade,
போட்டிப்பரீட்சைகள்
02.08.2014 சனிக்கிழமை காலை 8.30-3.30 மணி
(4 கருத்தரங்குகள் உள்ளடங்கலாக)
இ.க.சேவையின் 1 ஆம் தர வகுப்பு,
25 வருட அனுபவம் மற்றும் விடையளித்தல் நுட்பங்களை வழங்கும் கொழும்பில் இருந்து வருகை தரும் விசேட அதிகாரி
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர் 077 469 6695

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆண்டுகளைத் தாண்டி வெற்றிநடைபோடும் தேசத்தையே வர்ணங்களால் வசீகரித்த கோஸ்வே பெயின்ட்ஸ்!

இலங்கையில் பெயின்ட் வகை பற்றிப்பேசும் போது கோஸ்வே பெயின்ட்ஸ் முன்ன ணி யிலே திகழும் ஒரு வர்த்தக நாமம். முதலீட்டுச் சபைச் செயற்றிட்டமொன்றாக 1994 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கோஸ்வே பெயின்ட்ஸ் (பிறை வேற்) லிமிட்டட் அன்றைய சூழலில் வர்த்தகச் சந்தையிலிருந்து கிளம்பிய சவால்களையெல்லாம் சமா ளித்து, சிங்கப்பூரில் அமைந்திருந்த தமது தாய் நிறுவனத்தின் 35 வருடகாலக் கள அனுபவத்துடன் தங்கள் முழுமையான ஊழியர்குழுவின் பூரண ஒத்துழைப்பையும், அர்ப்பணிப்பையும் ஒன்றிணைத்து இலங்கையை வர்ணமயமாக்கும் பணியில் வேரூன்றி வெற்றிகண்டிருப்பது புதுமையல்ல.

வீட்டலங்காரத்துக்கான பெயின்ட்வகை, தரைப்பூச்சுக்கான பெயின்ட்வகை, மரத் தளபாடங்கள், இரும்புத்தளபாடங்கள் போன்ற வீட்டுபகரணங்களுக்கான பெயின்ட் வகை உட்பட விசேடமாக வாகனங்களுக்கான பெயின்ட் வகைக்ள் என ஏராளமான பெயின்ட் ரகங்கள் அவர்களது தயாரிப்புகளாக அமைகின்றன.

வீட்டலங்காரத் துறைக்கென லக்ஷரி இமல்ஷன், கென்லக்ஸ் சின்தடிக் எனாமல் உள்ளடங்கலாக கலர்பொக்ஸ் என்ற பெயரில் விசேட இமல் ஷன் ரகத்தோடு, வாகனங்களில் பூசுவதற்கான டிபியர்', ஸனீ', ஸ்டார்கிளாஸ் மற்றும் பர்ரிக்லா போன்ற அதியுன்னத பெயின்ட் வகைகளையும் வழங்கி வாடிக்கையாளர்களது நம்பிக்கையை வென்றமையும் இலங்கையில் கோஸ்வே' வெற்றிவாகை சூடியமைக்கு வழி கோலியுள்ளது.



கோஸ்வே பெயின்ட்ஸ் லங்கா (பிறைவேற்) லிமிட்டட் நிறுவனம் வர்த்தகச்சந்தைக் குச் சமர்ப்பித்துள்ள வாகனப் பெயின்ட் வர்ணங்களின் எண் ணிக்கை 50,000 ஆகும். இது நவீன கணினித் தொழி நுட்பத்தின் அற்புதமாகும்.

டிபியர் என்ற பெயரில் சந்தைப் படுத்தப்படும் இவ்வாகனப் பெயின்ட்வகை உயர்மட்டப் பாவனையாளர் நம்பிக்கையையும், கவன ஈர்ப்பையும் வென்றுள்ளது.

அதியுன்னத தரநேர்த் தியையும், உற்பத்தித்திறனை யும் கொண்டிருப்பதால் அத் தயாரிப்புகள் மதிக்கப்பட்டுச் சர்வதேச ரீதியில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுமள வுக்கு கோஸ்வே பெயின்ட் லங்கா (பிறைவேற்) வளர்ச்சி கண்டுள்ளது. அவ்வுற்பத்தி களின் தரச்சிறப்பை மதித்து ஸ்பெயினிலுள்ள டிரேட் லீடர்ஸ் கிளப் மூலம் வழங்கப்பட்டுவரும் மிகவும் உயர்ந்த ஆசியாவுக்கான சுவர்ண விருதினை 2002ஆம் ஆண்டு வென்றமை இந்நிறுவனத்துக்குக் கிடைத்த சர்வதேச அங்கீகாரமாகும்.

2003 ஆம் ஆண்டில் 1%ஆவது ஐரோப்பியத் தங்கத் தரவிருதினைப்பெற்றதன் ஊடாக அது தொலைதூர மேற்குலக வர்த்தகச் சந்தையின் நன்மதிப்பையும் வென்று புகழ்க்கொடி பரப்பி நிற்கிறது. இலங்கை இத்துறையில் பெற்ற முதல் வெற்றியும் அதுவாகும்.

இவற்றுக்கு மேலதிகமாக தேசிய ரீதியில் இலங்கைத் தரங்கள் நிறுவனத்தின் SLS. 533 / SLS.55% சான்றிதழ் களுடன், 2002/2003 ஆண் டுக்கான தேசிய வணிகச்சபை யின் ஏற்றுமதிக்கான சான்றிதமும், 150 தரச் சான்றிதமும் கோஸ்வே பெயின்ட்ஸ் நிறுவ னத்திற்குக் கிடைத்துள்ளன.

கோஸ்வே பெயின்ட்றின் வெற்றிக்கான பங்களிப்புநல்குவதில் இலங்கை முழுவதும் பரந்திருக்கும் விற்பனை முகவர்களின் அரும்பணியை மறக் கவே முடியாது. அவர்கள் பாவ னையாளரிடையே இவ் வர்த்தக நாமத்தை நிலை நிறுத்தப்பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். தயாரிப்பில் தரமும், குணாம்சங்களும் உயர்மட்டத்தில் நிலவிய போதும் போட்டிமிகு வர்த்தகச் சந்தையிலே கோஸ்வே நம்பிக்கையை வளர்த்தது அவர் களே, அதற்குச் சமமாக இவ் வெற்றியின் பின்னணியில் பங்களிப்பு வழங்கியவர்களாக கோஸ்வே பெயின்ட்ஸ் நிறுவ னத்தின் சகல ஊழியர்களையும் கருதலாம். கோஸ்வே பெயின்ட்ஸ் லங்கா (பிறை வேற்) லிமிட்டட் தமது ஊழியர் குழுவுக்கு வழங்கிய உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சி கள், ஊழியர்க்கான நலன் புரித்திட்டங்கள் அவர்களது உழைப்பாக மீண்டும் நிறுவ னத்தின் வளர்ச்சிக்காக நன்றியுணர்வுடன் மீள வழங்கப் பட்டமையே இந்த 20 வருடங்களையும் வெற்றியுடன் கடக்க வழிவகுத்துள்ளன.

LAE
Little ASIA
Wellawatte | Main Street
நல்லூர் கொடியேற்றம்
சிறப்புற வாழ்த்துகிறோம்
LITTLE ASIA வின் மெகா சேல்
வீரமகா காளிஅம்மன் கோவில்
முன்றலில் நல்லூர் யாழ்ப்பாணம்
ஆவணி 1 முதல் 30 வரை
நேரம் காலை 9 மணிமுதல்
இரவு 10 மணி வரை



73,75 A Main Street, Colombo 11
Tel: +94112391592, 2391593,
www.littleasiasilk.com
317, 317 A Galle Road, Wellawatta, Colombo 06,
+94112504470, 2500098,
www.littleasia.lk

C.P.T. CAUSEWAY PAINTS

DE BEER REFINISH
Sunny HI-BUILD LACQUER
Farécla
STAR CLASS 2K
valspar

20
இருபது ஆண்டுகளாக எம்முடன் இணைந்து
எமது வெற்றிப் பயணத்திற்கு
துணை நின்ற அனைவருக்கும் எமது
மனமார்ந்த நன்றிகள்

LUXURY EMULSION PAINT
KENLUX SYNTHETIC ENAMEL
AEROMIX AEROSOL SPRAY PAINT
Colour box TINTING SYSTEM
Ralston

038-2240040
www.causewaypaints.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் உற்சவ கால போக்குவரத்து சிறப்பிதழ்


## நல்லூர் உற்சவ கால விசேட போக்குவரத்து சேவை

கொழும்பு ⇄ யாழ்ப்பாணம்

## கியூ லைன்ஸ்



Keyu Q Lines


அரச அனுமதிப் பத்திரம் பெற்ற
A/C பலூன் பஸ் சேவை




ஆசன பதிவுகளுக்கு: கொழும்பு: 077 8591 555 : 077 179 8963
யாழ்ப்பாணம் : 077 8595 151 : 077 717 6516

**மேலதிக தொடர்புகளுக்கு: 077 859 1943**

அனைத்து விஷேட சுற்றுலா பயணங்களுக்கும் வீடியோ படக்காட்சியுடன் குளிரூட்டப்பட்ட அதி நவீன சொகுசு பஸ் சேவை.



## YOGA TRANSPORT

யாழ். கொழும்பு – கொழும்பு யாழ்
பொருள்களை துரிதமாகவும்,
பாதுகாப்பாகவும் தகுந்த நேரத்தில்
விநியோகிக்கும் சேவை

No. 02, Thiruvalluvar Lane, Arasady Road,
Kandarmadam, Jaffna.
Tel : 021 222 9042 Mobile : 077 756 0682
No. 261 1/12, 261 1/14, Main City Market,
Main Street, Colombo-11.
Tel : 2445344 Mobile : 077 387 4263
Wolffendhal Street, Colombo-13.
Tel : 011 438 9166

நல்லூர் உற்சவ கால சுற்றுலா பயணிகளுக்கான போக்குவரத்து சேவை

தற்போது....
யாழ்ப்பாணத்தில் 26 ஆசனங்களுடன், குளிரூட்டி வசதியுடன் Toyota Coaster வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்



## சிநேகிதபூர்வமான சிறப்பான சேவை

- விமான நிலையம் மற்றும் ஹோட்டல் போக்குவரத்து சேவை
- ஒன்றுபட்ட போக்குவரத்து
- கல நிகழ்வுகளுக்கான போக்குவரத்து
- ஒழுங்கமைக்கப்பட்ட வாடகை சேவை
- நானாந்த சுற்றுலா சேவை
- திருமண வைபவங்கள்
- யாழ் சுற்றுலா
- குறுந்தூர நெடுந்தூர சுற்றுலா
- வெளிமாவட்டங்களுக்கான சுற்றுலா



## KK TRAVELS

மேலதிக தகவலுக்கு அழையுங்கள்
0773 086586 / 0759 732169
Email : vasee76@gmail.com

**நல்லூர்** உற்சவ கால விசேட போக்குவரத்து சேவை




AC / Non AC



## அனுராம் பஸ் சேவை

## Anu Ram





Hot Line :
077 105 9133
Jaffna : 077 907 9817
Colombo : 076 539 5365
358, Galle Road, Wellawatta-06.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கிருபாகரன் சாந்தினி தம்பதியினரின் ஏக புதல்வியான கனடா நாட்டில் வாழ்ந்து வரும் கிருபாகரன் பிருந்தாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் கோப்பாய் கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். லலீசன் தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தம்பதியினர் பரத நாட்டிய அரங்கேற்றத்தை ஆரம்பித்து வைத்தனர். (ஒ-86)



யாழ். மாநகர சபை முன்பள்ளிச் சிறார்களின் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வுகளையும் சிறார்களில் ஒருவருக்கு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா பரிசில் வழங்குவதையும் காணலாம். (ஒ-7)



சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் 24 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சங்கானைப் பிரதேச முன்னோடி கலைஞர்கள் கௌரவிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள் மேடையின் முன்னால் அமர்ந்திருப்பதைக் காணலாம். (ஒ-29)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் புதிய குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்ட வண. பிதா ம.கொட்வின் கமிலஸ் அடிகளார் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் மற்றும் குருக்களுடன் திருப்பலியில் கலந்து கொண்ட வேளையில்... (ஒ-51)



மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வளாக வேம்படியான் விநாயகர் மேல் பாடப்பெற்ற 'மனிதம்' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. நூல் ஆசிரியர் கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதத்துக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை தலைவர் மா.மகேஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (ஒ-20)






காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தால் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் ஆலய அறங்காவலர் க.சோமசேகரம் தலைமையில் ஆலய கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் காரைநகர் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.விஜயகுமார், கிராம சேவையாளர் இ.திருப்புகழூர்சிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்வாதார உதவிகளை வழங்கினர். (ஒ-250)




யாழ். சென் ஜேம்ஸ் (ஆண்கள்) மகா வித்தியாலய மாணவர்களின் ஆங்கிலதின நிகழ்வின் போது தரம் 8 மாணவர்கள் சங்கீத நடன நிகழ்ச்சியை நடத்துவதையும் நிகழ்வை அதிபர், ஆசிரியர்கள், விருந்தினர்கள், மாணவர்கள், பெற்றோர் பார்த்து ரசிப்பதையும் காணலாம். (ஒ-51)



கனடா சென்றுள்ள தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் கனடா காரை கலாசார மன்றம் நடத்திய கோடை கால ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அவர் வெற்றிக் கேடயங்களை வழங்குவதைக் காணலாம். (ஒ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org